1·5·

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

417

417
உ.ம

... OF THE REGISTRAR OF BOOKS
MAY 1954

-2-
அணா

கேட்டீர்களா!

அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு

அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு சிதம்பரம் அண்ணாமலை நகரில் நடைபெற்றது. இந்தியாவில் உள்ள முக்கியமான பதினைந்து பாஷை எழுத்தாளர்களில் பலரும் வந்திருந்தார்கள். இந்த மகா நாட்டைப் பிரதம மந்திரி நேரு துவக்கி வைத்தார். உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். டாக்டர் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அனைவரையும் வரவேற்று உபசரித்தார். அந்தந்த பாஷையிலுள்ள இலக்கிய வளர்ச்சியைப்பற்றி அந்தந்த எழுத் தாளர்களில் சிலர் பேசினார்கள். மகாநாட்டுக்கு வந்த நேரு மறுநாள் தில்லை நடராஜரையும் கோவிந்தராஜப் பெருமாளையும் கண்டு தரிசித்துவிட்டு வந்தார். நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பினார்.

கூட்டுறவு இயக்கம்

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் 1904-ஆம் ஆண்டில் பிறந்தது. கிராமங்களில் உள்ளவர்கள் கூட்டுறவுமுறையில் கடன் வசதி பெறுவதே இதன் நோக்கம். கடன் கொடுப்பதுடன் அங்கத் தினர்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை வாங்கித் தருவதும், அங்கத்தினர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை வாங்கி விற்பதும் இதன் முக்கிய அலுவல்கள். இந்த இயக்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் ஆவதால் நாடெங்கும் பொன்விழாக் கொண்டாடப் பட்டது.

குழந்தைகள் பிலிம் விழா

சிறுவர் சிறுமியர் கண்டு களிக்கக்கூடிய படங்களாக வரவழைத் துக் காட்டப் போகிறார்களாம் பம்பாயில். இந்தப் பிலிம் விழாவுக்குப் பல நாடுகளிலிருந்து பல படங்கள் வரவிருக்கின்றன. அக்டோபர் மாதத்தில் இந்த விழா நடைபெறப் போகிறது.

காங்கிரஸ் மகாசபைக் கூட்டம்

அடுத்த காங்கிரஸ் மகா சபைக்கூட்டம் சென்னை ராஜ்யத்தில் நடைபெறப் போகிறது. இதற்கு முன்பு 1927-இல்தான் இந்த ராஜ்யத்தில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் கூடியதாம். அதற்குப் பிறகு இப்போதுதான் கூடப்போகிறது. இதைச் சென்னையில் நடத்துவதா மதுரைக்கருகில் நடத்துவதா என்பதை யோசித்து வருகிறார்கள்.

ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல 23,000 ரூபாய்!

மேற்கு வங்காள சட்டசபையில் ஓர் அங்கத்தினர் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்வதற்குள் வங்க சர்க்காருக்கு ரூ 23,000 செலவாகிவிட்டதாம். சரியான புள்ளி விவரங்களைத் திரட்டிப் பதில் சொல்லவே இந்தச் செலவு. அநேகமாக எல்லாக் கேள்விகளுக்குமே மிகுந்த செலவு ஆவதாகச் சொல்லப்படுகிறது.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 12

15-6-'54

குழந்தைகளே!	பக்கம்	2
சந்திரகிரிக்கோட்டை	..	3
கேளுங்கள், சொல்லுகிறேன்	..	9
கதை தந்த பரிசு	..	13
எத்தனும் எத்தனும்	..	19
மூன்று கேள்விகள்	..	22
மயில்கண் வேஷ்டி	..	25
இரும்பு மனிதன்	..	29
தூங்கும் அழகி	..	35
எங்கள் பகுதி	..	37

கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் - மூன்றாவது அட்டை

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும்
கற்பனைப் பெயர்களே.

ஆர்வி
எழுதும்
புதிய தொடர்கதை

லீடர் மணி

கண்ணனில்
அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது

குழந்தைகளே!

டைப்பீஸ் பரிசுப் போட்டிக்குக் கதைகள் வந்து குவிந்த வண்ணமாய் இருக்கின்றன. இந்தச் சமயத்தில் முடிவுத் தேதியை இன்னும் கொஞ்சம் தள்ளிப் போடும்படி சில குழந்தைகள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை சிறிது அதிகமாய் இருப்பதால் முடிவுத் தேதியைப் பதினைந்துநாள் தள்ளிவைக்கத் தீர்மானித்துள்ளோம். 1-7-54 தேதிக்குள் போட்டிக் கதைகள் வந்துவிடவேண்டும். அதன் பிறகு வருபவை போட்டியில் சேரா.

புரொபஸர் விஞ்ஞானத்தின் விடைகளைப் பற்றி சென்ற இதழில் 'என் விமரிசனம்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பு வெளியாகியிருக்கிறது. அதற்கு விஞ்ஞானத்தின் பதிலை எங்கள் பகுதியில் பிரசுரித்திருக்கிறோம். பரீட்சைக் கேள்விகள் வேறு; நீங்கள் கேட்கும் கேள்விகள் வேறு. உங்களுக்குத் தெரிந்த ஒரு விஷயத்தைப் பற்றி அவர்கள் கேட்கிறார்கள். இங்கே நீங்கள் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறீர்கள் தெரிந்து கொள்ளும் விஷயத்தை அரைகுறையாகவோ மொட்டையாகவோ தெரிந்து கொள்வதால் என்ன பயன்? அதனால் அவருடைய பதில் சற்று விரிவாகத்தான் இருக்கும். கூடுமானவரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் பதில் சொல்லவே விஞ்ஞானம் விரும்புகிறார்.

'எங்கள் பகுதி'க்கு எழுதும் கடிதங்களில் வேறு எதையும் எழுதவேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதில் வேறு பகுதிக்குரிய கேள்விகளோ, துணுக்குகளோ இருந்தால் அவற்றைக் கவனிப்பதற்கில்லை.

சில பேனா நண்பர்கள் தங்கள் பெயர் பத்திரிகையில் வந்தால் போதும் என்று திருப்தியடைந்துவிடுகிறார்கள் போலிருக்கிறது. அவர்களுக்குக் கடிதம் எழுதினால் பதில் வருவதில்லை என்ற புகார்கள் அடிக்கடி எனக்கு வருகின்றன. அப்படி யாராவது இருந்தால் அவர்கள் இனியாவது உடனே பதில் எழுது வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடிதம் எழுதுபவர்களும் பயனுள்ள விஷயமாக எழுதிக் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். சும்மாவாவது "நீ சௌக்கியமா? நான் சௌக்கியமே!" என்று எழுதுவதால் யாருக்கு என்ன லாபம்?

அடுத்த இதழில் புதிய தொடர்கதை 'லீடர் மணி' ஜாம் ஜாம் என்று ஆரம்பமாகிறது.

இப்பொழுது சந்தாதாராகச் சேருவதற்கு நல்ல சந்தர்ப்பம். சந்தாதாராகச் சேருபவர்களுக்காகவே இந்த அரைவருஷத் தொடக்கத்தின்போது இந்தப் புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது.

அடுத்த இதழில் 1-6-54 இதழ்பற்றிய 'எங்கள் பகுதி' வருகிறது. ஜய்ஹிந்த்!

—ஆசிரியர்.

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

அமலனுக்கும் விமலனுக்கும் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. 'இவன் எங்கே வந்து நிற்கிறான்?' என்று ஒவ்வொருவனும் தனக்குள் எண்ணினான். புலிக்குட்டி வந்தாலே கொஞ்சம் யோசனையாகத்தான் இருந்தது. அஞ்சா நெஞ்சமும் வீர பராக்கிரமும் பொருந்திய அந்தச் சகோதரர்களுக்குப் புலிக்குட்டியிடம் இத்தனை யோசனை வருவானேன்? அதுதான் அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.

புலிக்குட்டி சின்னஞ் சிறு காளை போல் அந்த ஜன சமுத்திரத்தினிடையே நின்றான். முகத்தில் அருள் நிரம்பி நின்றது. கண்களில் சுடரொளி வீசியது. அவன் ஆடைகள் விசித்திரமாய் இருந்தன. ஆயினும் அவை அவனுக்கு வெகு பொருத்தமாக இருந்தன. அவனுடைய தோரணையிலும் பாவனையிலும் ஒரு கவர்ச்சி இருந்தது. அவன் சபையினருக்கும் மற்றவருக்கும் பணிவாக வணங்கி விட்டு அமர்ந்தபோது மகிழ்ச்சியின் சிறு ஆரவாரம் மெல்லென எழுந்து அடங்கியது.

இதன்பின்னர் பாளையக்காரர் போட்டியை விளக்கிக் கூறுவதற்காக எழுந்தார். அவருடைய கம்பீரமான குரல் கூட்டத்தின் கடைசி எல்லை வரைக்கும் தெளிவாகக் கேட்டது.

"சபையோர்களே! நகரப் பெருமக்களே! நமது கோட்டையில் நடைபெறும் இறுதிப் போட்டி இது. மதிப்புக்குரிய நம் அரசர் பெருமானின் விருப்பப்படி இந்தப் போட்டியில் யார் வெற்றி கொள்கிறாரோ அவரிடம் முறியின் ஒரு பாகத்தைச் சேர்ப்பித்து விட வேண்டும். முன்பு நடந்த இரண்டு போட்டிகளையும் பாரபட்சமோ, சலுகையோ, ஏற்றத்தாழ்வோ இல்லாத நிபந்தனைகளுடன் நடத்தி விட்டோம். இந்தப் போட்டியும் அவ்வாறே அமைந்திருக்கும். தோள் வலியும் செயலாற்றும் திறமையும் இந்த

ராஜகுமாரர்களிடம் மிளிந்து நிற்பதைக் கண்டோம். இந்தப் போட்டியினால் இவர்களுடைய கல்வி ஞானத்தை அறிய நமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

“நடு நிலைமையாக இருந்து, நீதி தவறாமல் தீர்ப்புக் கூறுவதற்கு இங்கே பண்டிதர்களும் பாவலர்களும் கூடியிருக்கிறார்கள். அத்துடன் கூட ராஜகுமாரர்களின் அருள் புலமையை வெளிப்படுத்த முன் வந்திருப்பவன் ஓர் இளைஞன். அவனைப் பற்றி இப்போது நாம் ஒன்றும் கூற வேண்டியதில்லை. இறைவன் அருளால் இந்தப் போட்டி மங்களகரமாக முடிந்து விடும் என்று நம்புகிறேன். யாரும் கரகோஷமோ ஆரவாரமோ செய்யாமல் அமைதியாக இருந்து போட்டியைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்!” என்று பாளையக்காரர் கூறிவிட்டு ஏவலாட்களைப் பார்த்துக் கையைத் தட்டினார்.

ஓலைச் சுவடிகளும் எழுத்தாணிகளும் தாங்கிய இரண்டு ஏவலா



வர்கள் அமலனிடமும் விமலனிடமும் அவற்றைக் கொடுத்துவிட்டு விலகிச் சென்றனர். இரவை அமைதி காத்துக்கொண்டிருந்தது. ஒளியும் ஒலியும் தெளிவுற வந்தன. புலிக்குட்டி ஒயிலாக எழுந்து பாலகர்களுக்கே உரிய இனிய குரலில் பேசத் தொடங்கினான்.

"அன்பர்களே! தங்களிருவரையும் மூன்று பகுதிகளாகச் சில கேள்விகள் கேட்குமாறு சமூகத்தில் எனக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். தங்கள் விடையைத் தங்களிடமுள்ள சுவடிகளில் எழுதிவிடவேண்டுகிறேன். என் கேள்வியைத் தொடங்கத் தங்கள் அநுமதிக்காகக் காத்திருக்கிறேன்" என்றான்.

இவ்விதம் புலிக்குட்டி கூறியதும் இளவரசர்கள் இருவரும் தங்கள் இசைவைத் தெரிவித்தார்கள்.

புலிக்குட்டியின் முதல் பகுதிக் கேள்விகள் ஆரம்பமாயின:

"உலகத்தில் உயர்ந்ததாக மதிக்கப்படுவது எது?

உலகத்தை விடப் பெரியதாக மதிக்க வேண்டியது எதை?

உலகத்தில் உயிர் வாழ்கின்றவர் யார்?

உலகத்தில் தலையான செல்வம் எது?—"

முதல் பகுதிக் கேள்விகளை ஒரு முறை கூறிவிட்டு, புலிக்குட்டி மீண்டும் இரண்டு முறை கூறினான். "இந்த நாலு கேள்விகளுக்குக் கால் நாழிகை நேரத்தில் விடை எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

சபையோர் ஆழ்ந்த சுவாரஸ்யத்துடன் சகோதரர்கள் இருவரையும் பார்த்த வண்ணம் இருந்தார்கள். அவரவருக்குப் பட்ட விடைகளை மனசுக்குள் ஒரு முறை முணு முணுத்துக் கொண்டார்கள். அந்தக் கேள்விகள் மிகச் சாதாரணமாக ஒலித்தபோதிலும் அவற்றிற்குப் பொருத்தமான விடைகள் சொல்வது அத்தனை எளிதல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். தேர்ந்த கல்வி ஞானமும் அநுபவமும் இல்லாதவர்கள் சரியான

விடையைச் சொல்வது சாத்தியமல்ல என்பது எல்லாருக்கும் தெளிவாயிற்று.

புலிக்குட்டி கடைசி முறையாக ஒரு முறை தன் கேள்விகளைத் திருப்பக் கூறினான்.

ராஜகுமாரர்கள் இருவரும் பதட்டமடையவில்லை. அவர்கள் வெகு நிதானமாக ஆழ்ந்து சிந்தித்துத் தம் விடையை எழுத்தாணியால் எழுதிக்கொண்டு வந்தார்கள். நாலு கேள்விகளுக்குரிய விடைகளை உரிய கெடுவுக்கு முன்னேயே எழுதி அடியில் தம் பெயரையும் பொறித்தார்கள். இரண்டு ஓலைகளும் பாளையக்காரரிடம் வந்து சேர்ந்தன.

பிறகு புலிக்குட்டி இரண்டாவது பகுதிக் கேள்விகளைச் சொல்லத் தொடங்கினான். சகோதரர்கள் இருவரும் கூர்ந்து அவன் கூறுவதைச் செவி மடுத்தனர். அவர்களுடைய கைகளிலே ஏடும் எழுத்தாணியும் துடித்துக் கொண்டிருந்தன. எத்தகைய கேள்விகள் வருமோ என்ற ஆவல் அவர்கள் முகத்திலே தேங்கி நின்றது.

“உங்கள் விடையை எழுதிக் கொள்ளுங்கள்” என்று புலிக்குட்டி ஒரு விரலை மட்டும் காட்டி, “இது என்ன?” என்றான்.

அமலன் உடனே பதில் கூறுவதற்கு எழுந்து விட்டான். ஆனால் புலிக்குட்டி கையை அமர்த்தி, “வாயினால் சொல்ல வேண்டாம். ஏட்டிலே தீட்டுங்கள்!” என்றான்.

அது முடிந்த பிறகு புலிக்குட்டி இரண்டு விரல்களைக் காட்டி, “இதன் பொருள் என்ன?” என்றான்.

சகோதரர்கள் இருவரும் தம் தம் விடையை எழுதிக்கொண்டார்கள்.

மூன்றாம் முறையாக மூன்று விரல்களையும் நாலாவது முறையாக நாலு விரல்களையும் காட்டி, “இவைகள் என்ன?” என்று கேட்டான் புலிக்குட்டி.

விடைகள் எழுதியானவுடனே மீண்டும் கையெழுத்திட்டுத் தம் தம் ஏடுகளைப் பாளையக்காரரிடம் இரட்டையர்கள் கொடுத்தார்கள்.

மூன்றாம் பகுதிக் கேள்விகள் ஆரம்பமாயின.

“என்னை நீங்கள் இருவரும் யாரென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். தெரிந்துகொண்டிருந்தால் நான் யாரென்பதைக் குறிப்பிட வேண்டுகிறேன்!” என்றான் புலிக்குட்டி.

உடனே கூட்டத்திலிருந்து ஒரு குரல், “இது கேள்வியல்ல!” என்று கூவியது.

“நான் யார் என்பதுதான் கேள்வி! அதைத்தான் இவ்விதம் கேட்டிருக்கிறேன்” என்று விளக்கினான் புலிக்குட்டி.

சகோதரர்கள் இதில் ஒன்றும் சிந்தனையைச் சிதறவிடாமல் விடை எழுதுவதிலேயே முனைந்திருந்தார்கள்.

அடுத்த கேள்வி: “நான் உங்களுக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய முடியும் என்று நீங்கள் தனித்தனியே நினைத்தீர்கள். என் அவ்விதம் நினைத்தீர்கள்?”

இவ்வாறு கேட்டுவிட்டு, புலிக்குட்டி எழுந்தான். “என் கேள்விகள் முடிந்துவிட்டன. அவற்றிற்கான ராஜகுமாரர்களுடைய விடைகளும் இங்கே இருக்

கின்றன. இனி வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பொறுப்பு இங்கே அமர்ந்துள்ள பெரியார்களைச் சார்ந்தது!'' என்று கூறிவிட்டு அவன் தன் இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

இப்போது சற்று முன்பு ஆட்சேபணைக் குரல் எழுப்பிய ஆள் கூட்டத்திலிருந்து அம்புபோல் சீறி எழுந்து நின்ருன். அமலனும் விமலனும் அந்த ஆளைப் பார்த்ததும் அப்படியே ஒரு கணம் திக்கித் திகைத்துப் போனார்கள். கண்களை ஒரு முறை நன்ருக விளக்கிக் கொண்டு பார்த்தார்கள். காண்பது கனவா, நனவா என்று கலக்கம் கொண்டார்கள்.

ஒரு சிறு கலவரமே கிளர்ந்தெழுந்தது. ''அடே, இதோ ஒரு புலிக்குட்டி!'' என்று இளம் சிறுவர்கள் கூவினர்கள்.

ஆம்; அங்கே எழுந்து நின்ற ஆள் மற்ருெரு புலிக்குட்டிதான்! இதென்ன மாயம்! மேடையில் ஒரு புலிக்குட்டி, சபையில் ஒரு புலிக்குட்டியா? இதென்ன கண்கட்டு வித்தையா? மந்திர ஜால மகேந்திர ஜால வித்தையா?

சபையில் தோன்றிய புலிக்குட்டியும் மேடையிலிருந்த புலிக்குட்டியும் அசல் ஒன்றுபோலவே இருந்தார்கள். கண்ணுடியில் தெரியும் பிம்பமோ என்று சொல்லி மயங்கும்படி காணப்பட்டார்கள். அப்படியே உருவம், உடை எல்லாவற்றிலுமே ஒற்றுமை!

''கேள்விகள் கேட்டது சரிதான். அதற்கு அவர்கள் விடை எழுதியதும் சரிதான். ஆனல் கேட்டவனுக்கு விடை தெரிந்திருந்தால்தான் அதற்குக் கேள்வி என்று பெயர். விடை தெரியாமல் கேட்கும் கேள்விகளுக்கு அறிவினு என்று பெயர் இல்லை. அறியான் வினு முதலிய வினுக்கள் என்றுதான் பெயர். ஆகவே புலிக்குட்டிக்கு முதலில் விடைகள் தெரியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிருேம்'' என்ருன் அந்த இரண்டாம் புலிக்குட்டி.

''ஆம் ஆம்; அது நியாயமான கோரிக்கைதான்!'' என்று சபையில் மூலைக்கொன்ருக ஆரவாரம் எழுந்தது. காவல் படையினரும் பாளையக்காரரும் என்ன அமர்த்தியும் கூச்சல் அடங்கவில்லை. மேடையிலிருந்த புலிக்குட்டி எழுந்தான்.

''கேள்விகள் எத்தனை பிரிவாயினும் இந்த அறைகூவலை நான் ஏற்கிறேன். நானே இவற்றிற்கு வரிசையாக விடை சொல்லி விடுகிறேன். விடைகளின் தாரதம்மியத்தைச் சபையிலுள்ள கற்றறிந்த பண்டிதர்களும் அறிஞர்களும் தீர்மானிக்கட்டும். ஓலைச் சுவடிகளை அவர்களிடம் கொடுத்தாகி விட்டது. நான் இப்போது விடையிறுத்து வருகிறேன்'' என்று புலிபோல் பாய்ந்து எழுந்து கர்ஜனை செய்தான்.

''இவைதான் முதல் பகுதிக் கேள்விகளின் விடை:

''முதல் கேள்வி: உலகத்தில் உயர்ந்ததாக எண்ணப்படுவது ஸத்தியம் அதாவது உண்மை!

''உலகத்தைவிடப் பெரிதாக மதிக்க வேண்டியது செய்ந்நன்றியை. வள்ளுவர் பெருமானின் கருத்தும் இதுவே.

''உலகத்தில் உயிர் வாழ்கின்றவர் யார் என்ருல் பழிசேராமல் புகழோடு வாழ்கின்றவர்தாம்!

"நாலாவது கேள்விக்கு விடை: செவிச் செல்வம்தான் சிறந்த செல்வங்களுள் சிறப்பான செல்வம். செல்வங்களில் எல்லாம் தலையான செல்வம் செவியினால் கேட்டு, உணர்ந்து அதன்படி நிற்கின்ற நிலைதான்!

"பெரியோர்களே! நான் சரியெனக் கருதிய விடைகளைக் கூறிவிட்டேன். ராஜகுமாரர்கள் என்ன எழுதியிருக்கிறார்களோ, நான் அறியேன். அடுத்த இரண்டாம் பகுதிக் கேள்விகளுக்குரிய விடைகளையும் இதோ கூறுகிறேன்:

"ஒன்று, அதாவது ஒரு விரலைக் காட்டினேனே அது, 'தெய்வம் ஒன்றே' என்பதைக் குறிப்பிடுகிறது.

"இரண்டு விரல்கள் ஆண் பெண் என்ற இரு பாலாரைக் குறிப்பிடுகின்றன.

"மூன்று விரல்கள், சகல ஜீவ ராசிகளும் பிறந்து, வளர்வது, மாய்வதைக் குறிப்பிடுகின்றன.

"நாலு விரல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாலு புருஷார்த்தங்களைக் குறிப்பிடுகின்றன.

"மூன்றாவது பகுதிக்குரிய விடைகளை நானே சொல்லிக்கொள்வது அவசியமில்லை. அதை நம் ராஜகுமாரர்களின் விடைகளிலிருந்து சபையோர் தெரிந்து கொள்ளலாம்!"

இவ்வாறு பலத்த கரகோஷத்துக்கிடையே கூறிவிட்டு முதல் புலிக்குட்டி மேடையில் அமர்ந்து கொண்டான்.

மேடையின்மீது ராஜகுமாரர்களின் விடை ஏடுகளைப் பரிசீலித்த பாவாணர்களும் அறிஞர்களும் பாளையக்காரரோடு வெகு நேரம் ஆலோசித்துக் கலந்து பேசிக் கொண்டார்கள்.

முடிவை அறிவிக்கு முன்பாக புலிக்குட்டியின் கடைசிப் பகுதிக்கான சரியான விடையை வாசிப்பதற்காகப் பாளையக்காரர் ஏடுகளுடன் எழுந்து நின்றார்.

மற்ற இரண்டு போட்டிகளையும் விட இந்தப் போட்டி எல்லாருக்கும் சுவாரஸ்யமாக இருந்தது. பிரமிப்பும் திகைப்பும் சேர்ந்து ஒரு விறுவிறுப்பைக் கொடுத்தன. அத்துடன் இது இறுதிப் போட்டிகளால் முடிவு என்ன ஆகுமோ என்ற ஆவல் வேறு. இந்தக் காரணங்களினால் எல்லாம் சபையில் அலை அலையாக ஆரவாரம் எழுந்துகொண்டேயிருந்தது.

(தொடரும்)

டைம்பீஸ் பரிசுப் போட்டி

முடிவுத் தேதி

1-7-1954

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்ய வேண்டும் என்று விடை சொன்னுல், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன் படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்]

வி. வி. முத்துகுமாரசாமி,
25. சுப்பு செட்டித் தெரு,
சென்னை.

மேகத்தில் மின்சாரம் உண்டு என்கிருர்கள். மேகம் நீராவி தானே? அதில் மின்சாரம் எவ்வாறு உண்டாகிறது?

வாயுமண்டலத்திலே நீராவி கலந்திருக்கிறது. அந்த நீராவியானது மிகவும் நுண்ணிய நீர்த் திவலைகளாக மாறி, ஒன்ருகத் திரண்டு படலங்களாக அமைகின்றன. அவைகளைத்தான் நாம் மேகங்கள் என்று சொல்லுகிரேம்.

மேகங்களிலுள்ள நுண்ணிய நீர்த் திவலைகளின்மீது, காற்று சுழன்று வீசி அடிக்கும்போது நன்ருக உராய்கிறது. கண்ணுடிக் காலைப் பட்டுத் துணியால் தேய்க்கும்போது மின்சாரம் உண்டாகிறது, அல்லவா? அதுபோலவே, சுழன்று வீசும் காற்றினுல் மேகம் உராயப்படும்போது, அதில் உள்ள நீர்த் திவலைகளில் மின்சார ஏற்றம் உண்டாகிறது. இதனுல் தான் மேகத்தில் மின்சாரம் தோன்றுகிறது.

வி. வி. முத்துகுமாரசாமி,
25, சுப்பு செட்டித் தெரு,
சென்னை.

குன்னக்கோல் என்னும் ஆயுதம் இடியிலிருந்து தயாரிப்பதாகக் கூறுகிருர்களே, அது எவ்வாறு?

இதில் பாதி உண்மையும், பாதி கற்பனையும் கலந்திருக்கிறது. மேகத்திலிருந்து மின்சாரம் ஒழுகி இறங்கி, அந்த மின் பொறியானது ஒரு மரத்தின் மீதோ, அல்லது ஒரு கட்டடத்தின் உச்சியிலோ விழுந்து, மண்ணில் பாய்கிறது. அதன் பாதையின் இடையில் உலோகப் பொருள்கள் எவையாவது இருக்குமானுல், அந்த மின் பொறியின் மிகுதியான வெப்பத்தினுல், அவை உருகிப்போகின்

2

றன். அவை விரைவில் தம்முடைய வெப்பத்தை இழந்து, பளபளப்பான உலோகத் துண்டு களாக இறுகக்கூடும். இப்படி உருகி உறையும் உலோகத் துண்டுகள் கம்பி வடிவமாக அமைகின்றன என்றும், அவை மிக மிகக் கடினத்தன்மை உடையவை என்றும், அவ்வகைக் கம்பிகளைத் திருடர்கள் கண்டெடுத்துக் கன்னக்கோல்களாக உபயோகிக்கிறார்கள் என்றும் கதைகள் வழங்கி வருகின்றன. இவை பெரும்பான்மையும் கற்பனைக் கதைகளே.

வி. வி. முத்துகுமாரசாமி,
25, சுப்பு செட்டித் தெரு,
சென்னை.

மின்னல் எவ்வாறு உண்டாகிறது?

மின்சார ஏற்றத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்றுக்கு நேர் மின்சாரம் என்று பெயர். நேர் மின்சார ஏற்றத்தை உடைய ஒரு மேகமானது மின்சார ஏற்றம் இல்லாத மற்றொரு மேகத்தின் அருகில் போகுமானால், மின்சார ஏற்றம் இல்லாதிருந்த அந்த மேகத்தில் எதிர் மின்சார ஏற்றம் உண்டாகும்.

இந்த இரண்டு மின்சார ஏற்றங்களும் ஒன்றை ஒன்று கவரும். அவை ஒன்றை ஒன்று சந்திப்பதற்காக, வாயு மண்டலத்தின் வழியாகப் பாய்ந்து செல்லுகின்றன. அப்போது மிகவும் அதிகமான வெப்பம் உண்டாகிறது.

மின்சாரமானது அப்படி இறங்கிப் பாயும்போது, இடையிலுள்ள வாயு அந்த வெப்பத்தால் எரிக்கப்படுகிறது. அது எரிவதால் மிகப் பிரகாசமான ஒளி தோன்றுகிறது. இந்த ஒளியையே மின்னல் என்று சொல்லுகிறோம்.

வி. வி. முத்துகுமாரசாமி,
25, சுப்பு செட்டித் தெரு,
சென்னை 3.

இடி எவ்வாறு உண்டாகிறது?

மின்னல் தோன்றும்போது வாயு எரிந்து போகிறது என்று தெரிந்துகொண்டாய். அப்படி வாயு எரியும்போது, அதிக அளவுள்ள வாயுவானது சிறிய அளவே உள்ள இரசாயனப் பொருள்களாக மாறுகிறது.

ஆதலால், வாயு வெளியிலே காலியிடம் ஏற்படுகிறது. இந்தக் காலியிடத்தைச் சுற்றியுள்ள வாயு, அதை நிரப்பும் பொருட்டு, நாற்புறமிருந்தும் வேகமாய்ப் பாய்ந்தோடி வந்து, மோதுகிறது.

இப்படி வாயுவானது மிகவும் வேகமாகப் பாயும்போது, சக்திமிகுந்த ஒலி அலைகள் நாலு பக்கமும் வீசப்படுகின்றன. இந்த ஒலி அலைகள் காதில் உரக்கக் கேட்கின்றன. அந்த ஒலிகளைக் கேட்பவர்கள், 'இடி இடிக்கிறது' என்று சொல்லுகிறார்கள்.

சந்திரன், அமைந்தகரை,
நெ. 30, கஜபதி நாயுடு தெரு,
சென்னை 10.

தெர்மாஸ் பிளாஸ்கில் இருக்கும் வஸ்து எப்படி ஆறாமல் இருக்கும்?

தெர்மாஸ் பிளாஸ்கு என்பது இரட்டைச் சுவருள்ள ஒருவகைக் கண்ணாடி ஏனம். அதற்குத் தக்கையால் செய்யப்பட்ட மூடி

ஒன்று இட்டிருக்கும். இப்படி அமைந்த கண்ணாடி ஏனமானது உலோகத்தால் செய்த மற்றொரு ஏனத்துக்குள்ளே ஒரு தக்கையின் மீது பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும்.

கண்ணாடி ஏனத்தின் இரட்டைச் சுவர்களுக்கு இடையேயுள்ள இடத்திலிருக்கும் வாயு முழுதும் நீக்கப்பட்டிருக்கும். கண்ணாடி ஏனத்தின் உட்புறச் சுவருக்கும், வெளிப்புறச் சுவருக்கும், ஆடிபோலப் பளபளப்பாக இருக்கும்படி, பின்புறமாக மூலாம் பூசி இருக்கும்.

தெர்மாஸ் பிளாஸ்கின் உள்ளே சுடச் சுடக் காபி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். காபியின் சூடானது கண்ணாடியின் வழியாகவோ, தக்கையின் வழியாகவோ, வெளியேற முடியாது. ஏனென்றால், அவை இரண்டும் வெப்பத்தை எளிதில் கடத்தாப் பொருள்கள்.

அப்படிக் கண்ணாடியின் வழியாகக் கடந்து செல்ல முயலும் வெப்பமும் வெளியே செல்ல வழியில்லை. ஏனென்றால், உட் சுவருக்கும் வெளிச் சுவருக்கும் இடையே உள்ளது ஒன்றுமில்லாத வெற்றிடம். அதனால் வெப்பத்தைக் கடத்த அங்கு யாதொரு பொருளும் இல்லை.

ஆயினும், அந்த வெப்பத்தின் ஒரு மிகச் சிறு பகுதி மட்டும் கதிர் வீசு முறையில் வெளியேறுகிறது. அந்த வெப்பத்தில் பெரும்பான்மையும் வெளிச் சுவரால் மீண்டும் உட்புறமாகப் பிரதிபலிக்கப்படுகிறது. ஆதலால், வெளிச் செல்வதில்லை.

ஆகவே, அதிலுள்ள காபி நெடு நேரம் ஆறுமல், சூடாகவே இருக்கிறது. மிகவும் நல்ல பிளாஸ்குகளில் விடப்பட்ட காபி 24 மணி நேரம்வரை ஆறுமல் சூடாக இருக்கும்.

கொ. திருமால்,
கருத்தையாபுரம், வயது 12.

சந்திர மண்டலம் என்பது என்ன? சந்திரன் இருக்குமிடந்தான் சந்திர மண்டலமா? அங்கே போக ஏன் முயற்சிக்கிறுர்கள்? அங்கு மனித வாழ்க்கைக்கு ஏற்ற சூழ்நிலை அமைந்திருக்கிறதா?

சந்திரனைத்தான் சந்திர மண்டலம் என்றும் சொல்லுகிறுர்கள். மண்டலம் என்பது சந்திரனின் வட்டவடிவத்தையும், உருண்டையான உருவத்தையும். அதன் பரப்பையும் குறிக்கிறது.

குறுகுறுப்பு என்பது மனித சுபாவம். முன் காலத்திலே துணிவும் குறுகுறுப்பும் உடைய சில வீர மக்கள் பூமியிலே எத்தனையோ புதிய இடங்களைத் தேடிச் சென்றுர்கள். அவர்களின் முயற்சியால் பூமியிலுள்ள இடங்கள் எல்லாவற்றையும் மக்கள் தெரிந்து கொண்டாகி விட்டது. இனிமேல் பாக்கியுள்ளவை அயல் உலகங்கள். அவைகளில் மிகவும் அருகில் உள்ளது சந்திரன். ஆகையால், அங்கே போகலாம் என்று எண்ணிய வீரர்கள் பலவகையாக வழி தேடுகிறுர்கள்.

சந்திரன் உயிர் அற்ற உலகம். நமது வாழ்க்கைக்கு வேண்டிய ஆக்ஸிஜனும், தண்ணீரும் அங்கே கிடையாது. ஆகையால், மனித வாழ்க்கைக்கு ஏற்ற சூழ்நிலை அதில் அமைந்திருக்கவில்லை.

கோ. திருமால்,
கருத்தையாபுரம், வயது 12.

மனிதர்கள் சாகாமல் இருக்க முடியுமா?

மனிதர்கள் சாகாமல் இருக்க முடியாது. மனித உடலானது ஸெல்கள் என்னும் சிறிய கண்ணறைகளாலும், திசுக்களாலும் அமைந்திருக்கிறது. நமக்கு இன்னும் நன்றாக விளங்காத ஏதோ ஒரு காரணத்தால், இவைகள் ஓரளவு வளர்ச்சி அடைந்தபின், தளர்ச்சி அடையத் தொடங்கி அழிந்து போகின்றன. உடலிலுள்ள பற்பல உறுப்புக்களும் இவ்வாறே வலிமை குன்றிப் போகின்றன; அவை கடைசியில், சீராக வேலை செய்ய இயலாமல் ஒடுங்குகின்றன.

ஆனாலும், இம்மாதிரியான தளர்ச்சியைத் தடுக்க மனிதர் அநாதிகாலமாக ஆசைப்பட்டு வருகிறார்கள்; பலவிதமாக முயன்றும் பார்க்கிறார்கள். இன்னும் பலிக்கவில்லை.

ம. கோ. பரிமேலழகன்,
செய்யாறு, வயது 12.

சமுத்திரத்தில் உள்ள மீனைக் குளத்து நீரிலோ அல்லது குட்டை நீரிலோ விட்டால், ஏன் இறந்து விடுகிறது?

உலகில் ஒவ்வொரு பிராணியின் உடலும் அதன் சூழ்நிலைக்கு ஏற்றபடி அமைந்திருக்கிறது. ஆகையால், நிலத்தில் வாழும் பிராணி, பொதுவாக, நீரில் வாழ முடிவதில்லை. பாலைவனத்தில் வாழும் பிராணி பனி நாட்டில் வாழ முடிவதில்லை.

சமுத்திரத்தில் வாழும் மீன் உப்பு நீரில் வாழ்வதற்கு ஏற்றபடி அமைந்த உறுப்புக்களைப் பெற்றிருக்கிறது. உப்பில்லாத நீரில் அது வாழ்வது சிரமம்; பொதுவாக இறந்துபோகிறது. ஆயினும், ஸால்மீன் போன்ற சிற்சில மீன்கள் உப்பு நீரிலும் ஆற்று நீரிலும் வாழக் காண்கிறோம். இவ்வாறே சில வகைச் சுறா மீன்களும், விலாங்குகளும் இருவகையான நீரிலும் வாழக் காணலாம்.

எஸ். திலகரதி, 50-ஜி, சிவன்
கோவில் தெரு, தூத்துக்குடி.

உணவுப் பதார்த்தங்களுக்கு அலுமினியப் பாத்திரங்கள் உபயோகிப்பது நல்லதா, எவர் சில்வர் உபயோகிப்பது நல்லதா?

பொதுவாகச் சொன்னால், எவர் சில்வரை உபயோகிப்பதே நல்லது என்று சொல்லலாம்.

சில வகை அமிலங்கள், உப்புக்கள் முதலியவற்றால் அலுமினியம் தாக்கப்படுகிறது; அதில் வைத்த உணவுப் பண்டம் ஓரளவு அசுத்தம் அடைகிறது. எவர்சில்வர் அவ்வாறு தாக்கப்படுவதில்லை; ஆனால், எல்லா உணவுப் பண்டங்களாலும் அலுமினியம் தாக்கப்படுவதில்லை. அவற்றை அதில் வைக்கலாம். அலுமினியம் முன்னொரு காலத்தில் பொன்னைவிட விலையுயர்ந்ததாய் இருந்தது. இப்பொழுது அது எவர் சில்வரை விட விலை குறைவு. அலுமினியம் இலேசானது. இந்த வகையிலும் அது எவர்சில்வரை விடச் சௌகரியமானது.

கதை தந்த பரிசு

எஸ். வி. கிருஷ்ணன்

கோபு மரத்தின்மீது ஏற முயற்சி செய்து கொண்டிருந்தான். பாதி தூரம் ஏறியிருப்பான். அந்தச் சமயம், "கோபு..கோபு!" என்று அழைத்துக்கொண்டே ராஜி மரத்தடிக்கு வேகமாக ஓடி வந்தாள். மரத்தின் மீதிருந்த கோபுவைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றாள்.

"டேய் கோபு..எண்டா மரத்திலே ஏறினே? கீழே விழுந்தா, கை காலெல்லாம் ஒடிஞ்சு போயிடும்; ஜாக்கிரதை.." என்றாள்.

கோபுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "போடி அழுமூஞ்சி, உன்னை யார் இங்கே வரச் சொன்னா? நான் கீழே விழுந்தால் பரவாயில்லை..நீ ஓடிப் போயிடு."

"நான் போகவே மாட்டேன். நீ கீழே இறங்கினால்தான் பேவேன். இல்லேன்னா உங்கப்பா கிட்டே சொல்லிடுவேன்.."

"உனக்கு நிறையப் பழம் பறிச்சுத் தர்றேன். நீ மாத்திரம் அப்பா கிட்டே சொல்லிடாதே.. என்ன?"

"எனக்கொன்றும் உன் பீத்தல் பழம் வேண்டாம். நீ இப்போ மரத்தை விட்டுக் கீழே இறங்கறியா, இல்லே.."

"அவ்வளவு திமிரா உனக்கு? இதோ கீழே இறங்கி வந்து சொல்றேன்..நீ போறியா, இல்லையா?"

"ஹஉஹூம்!"

உடனே கோபு மரத்தை விட்டு வேகமாகக் கீழே இறங்கினான். அவனுக்கிருந்த ஆத்திரத்தில் கீழே கிடந்த கற்களில் ஒன்றை எடுத்து ராஜியை நோக்கிவீசினான். அவள் நெற்றியிலிருந்து குபு குபுவென்று பொங்கிய ரத்தம் அவள் அழகிய முகத்தில் வழிந்தோடியது.

"இரு..இரு.. அப்பாகிட்டே சொல்லி நன்னா உதை வாங்கி வைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே வீட்டை நோக்கி ஓடினாள் ராஜி.

கோபு மரத்தடியிலேயே சிலையாக நின்றான். ஆத்திரப்பட்டு அவள்மீது கல் எறிந்தது எவ்வளவு ஆபத்தாக முடிந்து விட்டது என்பதை நினைக்க அவனுக்கு வருத்தமாக இருந்தது. ஏதோ சிந்தித்தவாறே கால்போன வழியே நடந்தான்.

* * *

ராஜியும் கோபுவும் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். கோபுவின் தந்தை அவ்வூர்ப் பாடசாலையில் ஹெட்மாஸ்டராக உத்தியோகம் பார்த்து வந்தார். ராஜியின் தகப்பனாரும் அதே பள்ளியில் உதவி ஆசிரியாக இருந்தார். ராஜியும் கோபுவும் நெருங்கிப் பழக ஆரம்பித்ததே ஒரு விசித்திரமான கதை—

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளைகள் அவசர அவசர

மாக ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு ஓடினார்கள். அந்தக் கூட்டத்தில் ராஜியும் அகப்பட்டுக் கொண்டாள். அவளால் வேகமாக ஓடவோ இடித்துத் தள்ளும் பிள்ளைகளைத் தடுத்து நிறுத்தவோ முடியவில்லை. அப்போது வெகு வேகமாக ஓடின கோபு அவளை இடித்துத் தள்ளிக் கொண்டு கீழே விழுந்தான். ராஜியும் கால் தடுக்கிக் கோபுவோடு கீழே விழுந்தாள். சுற்றிலுமிருந்த பையன்கள் 'கொல்' லென்று சிரித்துக் கைதட்ட ஆரம்பித்தனர். கோபுவுக்கு வெட்கமாகப் போய் விட்டது. கீழே விழுந்த ராஜியை மெதுவாகத் தூக்கிவிட்டான். பையன்கள் செய்த பரிகாசத்தையும் கைதட்டலையும் காதில் வாங்காமல் ராஜியின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே ஓடினான் கோபு.

பையன்கள் அதிகமில்லாத இடத்திற்குச் சென்றதும், "என் ராஜீ, ஏதாவது பலமாக அடிபட்டதா?" என்றான் அவன் சட்டையில் ஒட்டிக்கொண் டிருந்த மண்ணைத் தட்டிக்கொண்டே.

"இல்லை, கோபு! என் சிலேட்டு தான் உடைஞ்சு போச்சு...வீட்டிலே போனா அப்பா என்னை அடிப்பா..அதுதான் பயமா இருக்கு.." என்றாள் அழுது கொண்டே.

"அதற்காக அழாதே ராஜி. என் சிலேட்டை எடுத்தண்டு போ, நான் வேறே வாங்கிக்கறேன்."

"உங்கப்பா உன்னை அடிக்க மாட்டாளா?"

"இல்லே.. உடைஞ்சு போச்சுன்னா வேறே வாங்கிக் கொடுத்துடுவா..."

"உங்கப்பா ரொம்ப நல்லவர்.. எங்கப்பா என்னை நன்னா அடிச்சுடுவா.." என்று சொல்லிக் கொண்டே கோபுவின் சிலேட்டைப் பையில் வாங்கி வைத்துக் கொண்டு மெதுவாக நடந்தாள்.

கோபு அவள் வீடுவரை அவளோடு சென்று விட்டு, தன் வீட்டிற்குத் திரும்பினான். அன்றிலிருந்து இருவருக்கும் ஏற்பட்ட நட்பு நாளடைவில் ஊற்று நீர் போல மேலும் மேலும் வளர்ந்தது. இருவருடைய சிநேகத்தையும் பாசத்தையும் கண்டு பெற்றோர்களே திகைத்துப் போனார்கள். விளையாட்டுப்போல நான்கு வருஷங்கள் ஓடி மறைந்தன.

கோபு அப்போது எட்டாவது படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், நேரே ராஜியின் வீட்டை நோக்கி ஓடினான்.

"ராஜி ராஜி, இன்றைக்கு ஒரு புது விஷயம் கண்டு பிடிச்சுண்டு வந்திருக்கேன்!" என்றான்.

"என்னடா கோபு, உளர்றே? எனக்குத் தெரியாத விஷயத்தையா நீ தெரிஞ்சுண்டு வந்துட்டே? நான் வாத்தியார் மகளாக்கும்!"

"பூ... இவ்வளவுதானா.. நான் ஹெட்மாஸ்டர் மகனாக்கும்.."

"அதனாலே என்ன, எங்கப்பாவும் நாளைக்கு ஹெட்மாஸ்டரா வந்துட்டா அப்ப என்ன பண்ணுவே?. அது கிடக்கு. ஏதோ புது விஷயம்னு சொன்னியே, அது என்ன சொல்லு!"

"அப்படிக் கேளு... அந்த விஷயத்தை வெற்றியா முடிக்க உன் தயவுதான் வேண்டியிருக்கு."

"என்ன, என் தயவா? ஆச்சரியமாயிருக்கே.."

"ஆமாம்.. இன்னிக்குப் பேப்பரிலே யாரு நல்ல சிறு கதை எழுதியனுப்பறாளோ அவாளுக்கு நூறு ரூபா பரிசு கொடுக்கப்போறாளாம். கதையை இன்னும் ஒரு வாரத்திற்குள்ளே அனுப்பணுமாம்."

"உனக்குத்தான் கதையைக் கூடப் படிக்கத் தெரியாதே.. நீ எப்படிக் கதை எழுதிக் கிழிக்கப்போறே?"

"உங்கப்பாதான் நிறைய கதை எழுதிப் பணம் சம்பாதிக்கிறார்ன்னு சொன்னியே... அதனாலே.." என்று ராஜியின் காதில் எதையோ ரகசியமாய்ச் சொன்னான்.

ராஜி முதலில் சிறிது திகைத்தாள். "எண்டா கோபு, அப்பாவுக்குத் தெரிஞ்சால் அப்புறம் என்னைக் கட்டி வச்சு உதைப்பாரே!" என்றாள்.

"நான் சொன்னபடி செய்தால்

இரண்டு பேருக்கும் நல்லது... பணத்தைக் கண்டா உங்கப்பா கோபமெல்லாம் பஞ்சுபோலப் பறந்து போயிடாதா.."

"சரி... பணம் வந்தா நீ கொடுக்காமே ஏமாத்த மாட்டாயே... நிச்சயமா?"

"நிச்சயம் ஏமாத்தமாட்டேன்."

"உன் படிப்புச் சாட்சியா!"

"என் படிப்புச் சாட்சியா.."

"அப்படின்னா சரி, நாளைக்குக் கொண்டுவர்றேன். உடனே காரியத்தை முடிச்சுண்டு திருப்பித் தந்துடு.. இல்லேன்னா முதல்லயே அப்பாவுக்குத் தெரிஞ்சிடும்."

"சரி, நான் வரட்டுமா? நாளைக்குத்தான் பள்ளிக்கூடம் இல்லையே. நானே உங்க வீட்டுக்கு வர்றேன்" என்று கூறிவிட்டு ராஜி குதித்துக் கொண்டே ஓடினாள்.

இந்த நிகழ்ச்சி நடந்த கொஞ்ச நாட்களுக்குள்தான் முன் கண்ட நிகழ்ச்சி நடந்துவிட்டது. அதில் கோபுவுக்குக் கூட நிரம்ப வருத்தம்தான். இவ்வளவு உதவி செய்த ராஜியை ரத்தம் வரும்படி அடித்துவிட்டோமே என்ற துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது. ராஜியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுதான் சரி என்ற எண்ணத்தில் விரைந்து நடந்தான்.

சிந்தனைக் கயிற்றில் சிக்கிக் கொண்டே கோபு வீடு நெருங்கி விட்டதையும் அறியாமல், நேரே சென்றான். வீட்டைத் தாண்டி பத்துகெஜம் வந்திருப்பான். அவன் அம்மா அவனை, "கோபு..கோபு... ஏண்டா, திருட்டுப் பயலே..வீடு இருக்கிறதுகூட கண் தெரிய வில்லையாடா!" என்று சொல்லி அவன் கையைப்பற்றி இழுத்துக் கொண்டு வேகமாக வீட்டிற்குள் நுழைந்தாள். 'சரிதான், இன்றைக்கு யார் முகத்தில் விழித்தோமோ, சரியான பூசை நடக்கப் போகிறது' என்று மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டான். ராஜி மாத்திரம் அப்பாவிடம் சொல்லியிருந்தால் இனிமேல் அவளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று முடிவு செய்தான். ஆனால் முடிவு அவன் எதிர்பாராததாயிருந்தது.

வீட்டிற்குள் நுழையுமுன்பே அவன் பாட்டி கையில் ஆரத்தித் தட்டை வைத்துக் கொண்டு தயாராய்க் காத்துக் கொண்டிருந்தாள். அப்பா கையில் காபியை ஏந்தி வந்து அவனிடம் நீட்டினார். கோபுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்னபமா இதெல்லாம்?" என்றான் மெதுவாக. "என்னவா ஏண்டா திருட்டுப் பயலே, என்னையா ஏமாத்தப் பாக்கறே? உனக்குத்தான் சிறு கதைப் போட்டியிலே முதல் பரிசு வந்திருக்காமே. எங்கிட்டே சொல்லவேயில்லையே" என்றாள் அம்மா.

"கோபு-என் கண்ணே...கதை எழுதறேன்னு இத்தனை நாளா எனக்குத் தெரியாமெ போச்சேடா. உன்னை என்னமோன்னு நெனச்சேன்..பலே கெட்டிக்காரனாயிருக்கயே" என்று பாட்டி குறுக்குக் கேள்வியைப் போட்டாள்.

கோபுவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. பற்கள் தெரியக் கலகல வென்று சிரித்தான். உடனே அவனுக்கு ராஜியின் நினைவு மனத்தில் எழுந்தது. அவ்வளவுதான், அவன் முகத்தில் எழுந்த பிரகாசமெல்லாம் ஒரு நொடியில் மறைந்தது.

"சரி! இதோ வர்றேம்மா" என்று கூறிவிட்டு வேகமாக ராஜி

யின் வீட்டை யடைந்தபோது ராஜியின் தந்தை ராஜியை ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார். கோபு சுவர் ஓரமாக நின்று அவர் சொல்வதைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

"எம்மா ராஜி, எப்படி இவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டது? யாராவது அடிச்சாளா?" என்றார் ராஜியின் தந்தை.

ராஜி சிறிது நேரம் என்ன பதில் சொல்வது என்பது தெரியாமல் விழித்தாள். பிறகு, "யாரும் அடிக்கல்லேப்பா..சாயந்தரம் நான் கோபுவோடே விளையாடப் போற அவசரத்திலே கால் தடுக்கிக் கீழே விழுந்துட்டேன்" என்று சொல்லிவிட்டுத் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

கோபுவுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அவனை யறியாமலே அவன் கால்கள் தள்ளாடின. இவ்வளவு அன்புடன் இருக்கும் ராஜியைக் கல்லால் அடித்துப் புண்படுத்தி விட்டோமே என்று எண்ணியபோது அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. ஆவேசம் வந்தவன் போல உள்ளே ஓடினான்.

"ராஜி....ராஜி....என்னை மன்னித்துவிடு. தெரியாமல் உன்னை அடித்து விட்டேன்.. இனிமேல் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன்.. ராஜி.. காயத்தை டாக்டர்கிட்டே காட்டினாயா..?" என்று அன்புடன் விசாரித்தான். அடிபட்ட வலியினால் அவள் அழுது அழுது முகம் வீங்கிப் போயிருந்தது. தன் சட்டைத் துணியால் அவள் முகத்தைத் துடைத்தான்.

ராஜி அவன் கையை எடுத்து, "வருத்தப்படாதேடா கோபு,

ஏதோ ஆத்திரத்திலே ஒரு காரியம் செய்துட்டா அதுக்காக என்னமோ பெரிசா, வருத்தப்படறியே! காயம் ஒண்ணும் பலமா இல்லேன்னு அம்மா சொன்னா. இரண்டு நாளைக்குத் தண்ணிபடாமே இருந்தால் காயம் தானா ஆறிப் போயிடுமாம்..ஆமாம், நான் வர்றப்போ உங்க வீட்டிலே ஏதோ அமர்க்களமா இருந்ததே, என்னடா கோபு? ஏதாவது விசேஷமா?''

''உனக்கு இன்னமும் தெரியாதா ராஜி! எனக்குச் சிறுகதைப் போட்டியிலே..முதற்பரிசு விழுந்திருக்கு...அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன்...''

''இல்லேன்னா வரமாட்டியா?''

''வராமே என்ன ராஜி..சரி, உங்கப்பாக்கு விஷயம் தெரியுமா?''

''தெரியாம என்ன? உங்க திருட்டுத்தனத்தாலே எனக்கு வரவேண்டிய பத்து ரூபா போச்சு'' என்று கேட்டுக்கொண்டே ராஜியின் அப்பா வந்து சேர்ந்தார்.

இனி விஷயத்தை ஒளித்துப் பயனில்லை என்று ராஜியும் கோபுவும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். நடந்தவற்றையெல்லாம் கதைபோலக் கூறினார்கள். ''இதற்காகக் கவலைப்படாதீர்கள்...இனிமேல் அப்படிச் செய்யாதிருந்தால் போதும்'' என்று கூறினார் அவர்.

''கோபு....எங்கேடா பாதிப் பணம்?'' என்று கோபுவின் பையைத் தடவினாள் ராஜி. அது காலியாக இருந்தது.

''பணம் வந்ததும் கொடுக்காமெ இருப்பேனா ராஜி? உனக்கு ஒரு பட்டுப் பாவாடை....எனக்கு ரெண்டு சில்க் ஷர்ட்..பணம் பைசல்'' என்றான் சந்தோஷத்தோடு.

''கோபு நீ கேட்டதையெல்லாம் நான் கொடுத்தேனே, நான் ஒன்று கேட்டால் தருவாயா?''

''கட்டாயம் தர்றேன் ராஜி.. என்ன அது?''

''அதா..இனிமே நீ மரத்திலே ஏறக்கூடாது..என்ன?''

''பூ..இவ்வளவுதானா? இனிமே நான் யார் தெரியுமா? இளம் எழுத்தாளனுக்கும்..எழுத்தாளன் இந்த மரத்திலெல்லாம் ஏறமாட்டான். மனமாகிய மரத்திலே அவன் சிந்தனைதான் குரங்கு போலத் தாவித்தாவிப் பாயும்!''

''ஐயே..எழுத்தாளரே.. நான் என் அப்பா கதையைத் திருட்டுத்தனமாய்க் கொண்டு வந்தால், அதைக் காப்பியடித்து அனுப்பி விட்டு, பரிசை வாங்கிக்கொள்கிறாராம்! இதிலே பெருமை வேறே'' என்றாள் ராஜி பரிகாசமாய்.

''சரி..இன்னிக்கி எங்க வீட்டிலே உனக்கு டின்னர்! வா சீக்கிரம் வீட்டிற்கு போவோம்'' என்று சொல்லி ராஜியின் கையை பிடித்துக் கொண்டான் கோபு. இருவரும் கோபுவின் வீட்டை நோக்கி நடந்தனர்.

ராஜியின் தந்தை குழந்தைகள் தானே என்று மன்னித்து விட்டார். ஆனால் இன்றுவரை கோபுவின் பெற்றோர் தங்கள் பையன் கதை எழுதிப் பரிசையடைந்ததாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு யார் உண்மையை எடுத்துக் கூறுவது?

எத்தனும் எத்தனும்

கிருஷ்ணமணி

சோமு என்ற திருடன் தன் திருட்டுத் தொழிலை வேறு ஊரில் நடத்தப் பிரயாணமானான். வழியில் அதே நோக்கத்துடன் புறப்பட்ட மற்றொரு திருடனான கறுப்பனைச் சந்தித்தான்.

கறுப்பன் மனைவி பலே கைகாரி. அவள் ஒரு செம்பின் அடியில் மணலைக் கொட்டி மேலே அரிசியைப் போட்டுக் கணவனிடம் கொடுத்தனுப்பியிருந்தாள். சோமுவின் மனைவியோ களிமண் உருண்டையை எடுத்து அதன் மேல் கொஞ்சம் சோற்றை அள்ளிப் போட்டுக் கொடுத்தனுப்பினாள். இதை அறியாத இரண்டு திருடர்களும் நடு வழியில் சந்தித்தனர். கறுப்பன் தனக்குப் பசி அதிகமாயிருப்பதால் தன்னிடமுள்ள அரிசியைக் கொடுப்பதாயும் அதற்குப் பதில் அவனிடமுள்ள சோற்றைக் கொடுக்குமாறும் வேண்டிக்கொண்டான். சோமுவும் அவ்வாறே செய்தான். கறுப்பன் சோற்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். உடனே அவன் முகம் அஷ்டகோணலாய் மாறியது. வாயெல்லாம் ஒரே களிமண். அவ்வாறே சோமு வெறும் வாய்க்குக் கொஞ்சம் அரிசியை எடுத்துப் போட்டுக்கொண்டான். வாயெல்லாம் வெறும் மணல்!

பிறகு அவன் கறுப்பனைப் பார்த்து, ''நாம் இருவருமே ஏமாந்தோம்'' என்று கூறிச் சிரித்தான்.

இருவரும் ஒன்று சேர்ந்து ஓர் ஊருக்குப் போனார்கள். ஒரு கிழவி ஒரு சத்திரத்தில் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்து இட்டிலி செய்து விற்றுப் பிழைத்துக்கொண்டிருந்தாள். அவளிடம் இருவரும் சென்று ஒரு வேலை கொடுக்குமாறு வேண்டினார்கள். அவள், ''ஒருவன் மாடு மேய்க்கட்டும்; மற்றவன் தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கட்டும்'' என்றாள். கறுப்பன் மாடு மேய்க்கப் போனான். மாடுகளை அவிழ்த்து விட்டுச் சிறிது தூரத்திலுள்ள தோப்பை அடைந்ததும் அவை மூலைக்கொன்றாய்ச் சிதறி ஓடின. அவைகளைப் பிடித்துவருவதற்குள் அவனுக்குப் பாதி உயிர்போய்விட்டது. 'சோமு தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டுச் சுகமாகத் தூங்கிக்கொண்டிருப்பான். நாளைக்கு நாம் அவனிடம் சொல்லி வேலையை மாற்றிக் கொள்ளவேண்டும்' என்று அவன் நினைத்தான்.

ஆனால் சோமுவின் நிலை வேறு. முதலில் தோட்டத்தைக் கண்ட

தும், 'இது எவ்வளவு சிறியது! இதற்கு ஒரு நொடியில் தண்ணீர் இறைத்துவிடலாமே' என்று நினைத்துத் தண்ணீர் இறைத்தான். தண்ணீர் இறைக்க இறைக்க நிலம் தண்ணீரை உறிஞ்சிற்று. ஒருநாள் முழுவதும் இறைத்தும் நிலம் பாதிகூட நிரம்பவில்லை. ஏனெனில் அந்தக் கிழவி ஒரு சுரங்கக் கால்வாய் மூலம் ஒரு பெரும் வயலுக்கு அந்த நீரெல்லாம் போய்ப் பாய வழி செய்திருந்தாள். சோமு மிகவும் சிரமப்பட்டான். அவன் இந்த வேலையைக் கறுப்பனிடம் விட்டுவிட வேண்டுமென்று எண்ணினான்.

அன்று இரவு கறுப்பனும் சோமுவும் தத்தம் வேலையை மாற்றிக்கொண்டனர். அதன் பயன் ஒருவர் பேரில் ஒருவருக்கு மனஸ்தாபம் ஏற்பட்டதுதான். மறுநாள் இரவு இருவரும் கூடிப்பேசிக் கிழவியிடம் உள்ள பணத்தை அடித்துக்கொண்டு போகத் திட்டமிட்டனர். கிழவிக்கு இவர்கள் இரண்டு நாளாகக் கூடிப் பேசுகிறார்களே என்று சந்தேகம். இதை ஒட்டுக் கேட்டாள். உடனே பணத்தையெல்லாம் சத்தப்படுத்தி எண்ணி ஒரு பெட்டியில் வைத்தாள். பிறகு ஓட்டுச் சல்லிகளை எடுத்து வேறு ஒரு பெட்டியில் கொட்டி இவர்களைக் கூப்பிட்டு, "ஊரில் இரண்டு மூன்று நாளாகத் திருட்டுப் போகிறது என்று பேசிக்கொள்கிறார்கள். அதனால் இந்தப் பணப் பெட்டியைக் கிணற்றில் போட்டுவிடுவோம்" என்று அவர்கள் உதவியால் அதைக் கிணற்றில் போட்டாள்.

மறுநாள் இரவு இருவரும் கொல்லைப்புறம் வந்து நின்றனர். கறுப்பன் சோமுவைப் பார்த்து, "கிணற்றில் ஆழம் இல்லை. அதனால் நீ இறங்கிப் பெட்டியை எடுத்து ஏற்றச் சாலில் வை. நான் அதை மேலே எடுத்துவிடுகிறேன். பிறகு இருவரும் பணத்தை எடுத்துக் கொள்ளலாம்" என்றான். சோமு சம்மதித்துக் கிணற்றில் இறங்கினான். பெட்டியை வெளியில் எடுத்தான். பணத்தைக் கொஞ்சம் எடுத்து வைத்துக்கொள்ளலாம் என நினைத்துப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் வெறும் கற்களாயிருக்கவே திடுக்கிட்டு

வேலைக்காரன்: எஜமான், டெலிபோன் மணி அடிக்கிறது.

எஜமான்: சரி, என்ன விஷயம் என்று கேட்டுக்கொண்டு லயனைக் 'கட்' பண்ணிவிடு.

வேலைக்காரன்: அப்படின்னா கத்தி கொடுங்கோ.

எஜமான்: கத்தி எதுக்குடா?

வேலைக்காரன்: லயனைக் 'கட்' பண்ணச் சொன்னீங்களே!

—P.M. ஷண்முகம்.



யோசித்தான். கிழவியின் தந்திரத்தை அறிந்துகொண்டான். உடனே கற்களைக் கிணற்றுக்குள்ளேயே சத்தமில்லாமல் கொட்டி, தான் பெட்டியினுள் ஒளிந்துகொண்டான். கறுப்பன் பெட்டியை மேலே இழுத்தான். சோமு பங்குக்கு வந்துவிடுவானே என்று நினைத்துப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினான். பெட்டியினுள் இருந்த சோமுவுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதை அடக்கிக்கொண்டான். வெஃகு தூரம் ஓடியபின் கறுப்பன் சோமு இனி வரமாட்டான் என்று நினைத்தான். உடனே மெதுவாக நடந்து சென்றான். உடனே சோமு மெதுவாக, "அண்ணே ஓடாதே! இதோ நானும் வந்துட்டேன்!" என்று சொன்னான். சோமு பின்னாலேயே வருவதாக எண்ணிய கறுப்பன் வேகமாக ஓடவாரம்பித்தான்.

இரைக்க இரைக்க அவன் தன் வீட்டில் நுழைந்தான். மனைவியிடம் சோமுவை ஏமாற்றிவிட்டு வந்த விஷயத்தைச் சொன்னான். அவளுக்குப் பரம சந்தோஷம். பெட்டியை ஆவலோடு மெதுவாகத் திறந்தாள். ஆனால் பெட்டியிலிருந்து சோமு வருவதைக் கண்டு இருவரும் திடுக்கிட்டனர். கறுப்பன் அசடு வழிய சிரித்தான். சோமுவும் சிரித்தான்.

மூன்று கேள்விகள்

தே. வீரராகவன்

பாலு ஒரு முழுச் சோம்பேறி. புத்தகத்தை எடுத்துப் படிப்பதென்றால், அவனுக்கு விளக்கெண்ணெய் குடிப்பதுபோல. ஆனால் விளையாடுவதென்றால் கரும்பு தின்பதுபோலத்தான். அவன் முதல் படிவத்துக்கு வந்து மாதங்கள் பல ஆகியும் ஹிந்தியில் முதலெழுத்தாகிற 'அ' என்ற எழுத்தைக் கூடக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யவில்லை. ஹிந்தி ஆசிரியர் எவ்வளவு எடுத்துச் சொல்லியும், அவன் சில துஷ்டப் பையன்களுடன் சேர்ந்துகொண்டு அதைப் பழித்து வந்தான்.

இப்படி இருக்கையில், திடீரென்று பாலுவின் தகப்பனாரைப் பம்பாய்க்கு மாற்றிவிட்டார்கள். பாலுவை, அவன் தகப்பனார் தம்முடன் பம்பாய்க்கு அழைத்துச் சென்று ஒரு பள்ளியில் சேர்த்தார். பம்பாய்ப் பள்ளிகளில், மாணாக்கர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டிய மொழிகளுள் ஹிந்தியும் ஒன்று. பாலுவின் தலைமையாசிரியர் அவனுக்கு ஒரு சிறு சலுகை கொடுத்திருந்தார். அதாவது அவன் பள்ளியில் சேர்ந்த ஆறுமாத காலத்துக்குப் பிறகாவது, அவர் கேட்கும் சின்னச் சின்ன கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமென்பதுதான் அந்தச் சலுகை. அவன் வேறு ராஜ்யத்திலிருந்து வந்திருக்கிறான் அல்லவா?

தலைமையாசிரியர் கொடுத்திருந்த ஆறுமாத கால அளவு கடந்தது. ஒரு நாள் மாலை, தலைமையாசிரியர் பாலுவைக் கூப்பிட்டு, "ஹிந்தியைப் பேசக் கற்றுக் கொண்டு விட்டாயா?" என்று கேட்டார்.

"சுமாராகத் தெரியும்" என்று தைரியமாகப் பதிலளித்தான் பாலு.

"நாளைக் காலை உன்னை மூன்று கேள்விகள் ஹிந்தியில் கேட்கப் போகிறேன்" என்று சொல்லிப் பாலுவைத் தலைமையாசிரியர் அனுப்பிவிட்டார்.

தலைமையாசிரியரிடம் தைரியமாகப் பாலு பொய் சொல்லிவிட்டான். எனினும், அவன் உள்ளத்தில் பயம் வந்துவிட்டது. ஏனென்றால், அதுவரையிலும் அவன் ஹிந்தியில் ஓர் எழுத்தைக்கூடக் கற்றுக்கொள்ளவில்லை. என்ன செய்வதென்று அறியாமல் பாலு சிறிது நேரம் திகைத்தான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் வகுப்பில் படிக்கும் தலைமையாசிரியரின் மகனான கோபாலனிடம் ஓடித் தனக்கு வரவிருக்கும் ஆபத்தைக் கூறினான். அதிலிருந்து தப்புவதற்கு ஒரு யோசனை சொல்லுமாறு கேட்டான்.

"பாலு! நீ பயப்படாதே. புதிதாக ஹிந்தி கற்கும் மாணாக்கர்

களை, என் தகப்பனர் மூன்று கேள்விகளைத்தான் வழக்கமாகக் கேட்பார். அந்த மூன்று கேள்விகளையும் அவற்றின் விடைகளையும் நான் உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். நீ வரிசையாக மனப்பாடம் செய்து ஒப்பித்துவிட்டால் போதும்.

"முதற் கேள்வி: உன் வயது என்ன?

"பதில்: பத்து வருஷம்.

"இரண்டாம் கேள்வி: நீ ஹிந்தி கற்கத் தொடங்கி எவ்வளவு காலம் ஆகிறது?

"பதில்: ஆறு மாதம்.

"மூன்ரும் கேள்வி: நீ விரும்புவது ஹிந்தியும் தமிழுந்தானே?

"பதில்: ஆம்! இரண்டும்தான்.

"இதைச் சொல்லிவிடு" என்று கோபால் பாலுவுக்கு யோசனை

கூறி மேற்கண்ட மூன்று கேள்விகளையும் அவற்றின் பதிலையும் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தான்.

அன்று இரவெல்லாம் பாலு அந்த மூன்று கேள்விகளுக்குரிய விடைகளை வரிசையாக மனப்பாடம் செய்தான். மறுநாள் தைரியமாக வகுப்புக்குச் சென்று உட்கார்ந்துகொண்டான். மணியடித்து வகுப்புத் தொடங்கியதும், தலைமையாசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். பாலுவை அழைத்துக் கோபால் சொல்லிக் கொடுத்த கேள்விகளையே கேட்டார். ஆனால் கோபால் சொல்லிக் கொடுத்த வரிசையில் அல்ல. முதல் கேள்வியாக, “நீ ஹிந்தி கற்கத் தொடங்கி எவ்வளவு காலம் ஆகிறது?” என்று கேட்டார். அது கோபால் எழுதிய வரிசையில் இரண்டாவது கேள்வியாகும். இதை அறியாத பாலு, தான் மனப்பாடம் செய்து வைத்திருந்த வரிசைப்படி, “பத்து வருஷம்” என்றான். இந்த விடையைக் கேட்டு வியப்படைந்த தலைமையாசிரியர், “அப்படியானால் உன் வயது என்ன?” என்று கேட்டார். “ஆறு மாதம்” என்று பதில் வந்தது. அந்த விடையைக் கேட்ட தலைமையாசிரியருக்கு வியப்புடன் கோபமும் உண்டாகவே, “உன்னைக் கேள்வி கேட்கும் நானாவது முட்டாளாக இருக்க வேண்டும், அல்லது பதில் சொல்லும் நீயாவது முட்டாளாக இருக்க வேண்டும்” என்று ஹிந்தியில் சொல்லிக் கோபித்தார். அதை மூன்றாம் கேள்வியாக எண்ணிக்கொண்ட பாலு, “ஆம்! இரண்டும்தான்” என்று அமைதியாகப் பதிலளித்தான்.

பாலுவின் மூன்றாம் விடையைக் கேட்ட தலைமையாசிரியரின் கோபம் எல்லை மீறியது. அவர் பாலுவின் தகப்பனாருக்குச் சொல்லியனுப்பிப் பாலுவின் சர்டிபிகேட்டை அவரிடம் கொடுத்துப் பாலுவைப் பள்ளியினின்றும் வெளியேற்றிவிட்டார். அதன் பிறகு தான் பாலுவுக்குப் புத்தி வந்தது. அடுத்த வருஷத்தில் அக்கறையுடன் படிக்கத் தொடங்கினான்.

கண் வைத்தியர்: உனக்குக் கண்ணாடி போட்டாச்சு. இனிமேல் நீ நன்றாய்ப் படிக்கமுடியும்.

பையன்: பள்ளிக்கூடத்துக்குப் போகாமலே நன்றாய்ப் படிக்க முடியுமா, சார்?



மயில்கண் வேஷ்டி

நா. ஜகந்நாதன்

தன் தந்தையின் கடைக்குச் சென்று சந்தோஷமாய்ப் பொழுது போக்கலாம் என்றுதான் அவன் கடைக்கு வந்திருந்தான். ஆனால் சிறிது நேரத்தில் வருத்தத்தோடு வாட்டமடைந்த முகத்துடன், ''வீட்டிற்குப் போகிறேன்'' என்று கேசவலால் சாவ்காரிடம் கூறியது அவருக்கு வியப்பாக இருந்தது. தம் மகன் மாணிக்கலால் சாவ்கார் ஏன் வருத்தமடைந்தான் என்பது அவருக்குத் தெரியவில்லை. பகல் உணவு சாப்பிடுவதற்காக வீட்டிற்குச் சென்றதும், அவனுக்குத் தன் கடையில் மனவருத்தம் தந்தது எது என்பதை அறிந்து கொள்ள நினைத்தார். பகல் வந்ததும், வேகமாய் வீட்டிற்குப் போனார்.

சாப்பிட்டதும் தன் மகனை அழைத்து, ''கடையில் இருக்கப் பிடிக்காமல் ஏன் வந்துவிட்டாய்? உனக்கு வருத்தம் தந்தது எது?'' என்று அன்போடு கேட்டார்.

மாணிக்கலால்,

''அப்பா! நம் கடையில் மாட்டி வைத்துள்ள ஒரு சரிகைத் துணியைப் பார்த்ததும்தான் எனக்கு வருத்தமாய் விட்டது. அது..'' என்று இழுத்தான்.

''நம் கடையில் எத்தனையோ சரிகைத்துணிகள் இருக்கின்றன.

நீ சொல்வது எந்தத் துணி என்று எனக்குத் தெரியவில்லை. அது ஏன் வருத்தத்தைத் தர வேண்டும்?''

''இடது கோடியில் தொங்கிக் கொண்டிருக்கும் மயில் கண் சரிகை வேஷ்டி..ஞாபகம் வருகிறதா?..'' என்றான் மகன்.

''நீ வந்து கடையில் காட்டு. அப்போதுதான் புரியும்'' என்று மகனை அழைத்துக்கொண்டு கடைக்குச் சென்றார் கேசவலால்.

அவர் லேவாதேவி வியாபாரம் செய்யும் ஒரு மார்வாரி. ஏழைகள் ஆபத்துக்காலங்களில் தங்களிடமுள்ள உயர்ந்த துணிமணிகளையும், நகை நட்டுக்களையும் அங்கே அடகு வைத்துத் தங்களுக்கு வேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு போவார்கள். பெரும்பாலானவர்கள் தாங்கள் அடகு வைத்த சாமான்களைத் திருப்பியே பெற மாட்டார்கள். ஏனென்றால் கடன் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமே! வட்டி வேறு அசலை விழுங்கி விட்டிருக்கும். ஆகவே அவர்கள் அடகு வைத்த சாமான்கள் கொடி கொடியாய் அங்கே தொங்கிக்கொண் டிருக்கும்; அல்லது பீரோவில் அழகாய் வைக்கப்பட்டிருக்கும். சிலகாலம் கழித்து மார்வாரி அவைகளை விற்று விடுவது வழக்கம். அப்படிப் பட்ட துணிகளில் ஒன்றுதான் மாணிக்கலாலின் உள்ளத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது. அந்த மயில் கண் சரிகை வேஷ்டியைத் தன் தகப்பனாரிடம் காட்டி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தைக் கூறலானான் மாணிக்கலால்.

* * * *

இரண்டு ஆண்டுகளுக்கு முன், கேசவ்லால் கடையிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்திருந்தார். அவர் வந்ததும் வராததுமாய் மழை பிடித்துக்கொண்டு விட்டது. அந்த நேரத்தில் ஒரு சிறு பையன் அவர் வீட்டுக்குள் நுழைந்தான். அவன் சட்டை எல்லாம் நனைந்திருந்தது. உடலெல்லாம் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சட்டையைக் கழற்றிப் பிழிந்து உலரப் போட்டான்.

அந்தச் சமயம் உள்ளே இருந்து வெளிவந்த மாணிக்கலால் அந்தப் பையனைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டான். அவனது கறுத்த உடலும், நீண்ட தலைமயிரும், அப்பப்பா! பார்க்கச் சகிக்க முடியவில்லை. பணக்கார வீட்டுப் பையன்களையே பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்திருந்த மாணிக்லாலுக்கு இந்தப் பையன்—மூத்தனைப் போன்றவர்களைப் பார்த்தால் வாந்தி எடுக்கத்தானே தோன்றும்?....தன் வீட்டில் அவன் நுழைந்து, துணியைப் பிழிந்து உலரப்போட்டு..அவ்வளவு தைரியமா அவனுக்கு?....கொம்பு ஒன்றை எடுத்தான். கழுத்தைப் பிடித்து கெட்டித் தள்ளினான். வெளியே கொட்டுகிற மழையைப் பார்த்துக் கூட அவன் மனம் இரங்கவில்லை. அந்தப் பையன் மூத்தன் மழையில் நனைந்து கொண்டே மற்றொரு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். மாணிக்கலால். பண விஷயம் தவிர மற்ற விஷயங்களில் எல்லாம் கருணையோடு இருப்பார் கேசவ்லால். "மழை நின்றதும் போய் விடப்போகிறான் அந்தப் பயல். ஏன் அவனை மழையில் பிடித்துத் தள்ளினாய், பாவம்?" என்று கேட்டார் அவர். "போப்பா! அவனைப் பார்த்தாலே குமட்டிக் கொண்டு வருகிறதே!" என்றான் மகன்.

தீபாவளி சமயம். மாணிக்லால் இரவு எட்டு மணிக்கு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அமாவாசை இருட்டு. ஒரு தெருவில் நுழைந்து நடந்தபோது இரண்டு முரடர்கள், "அதோ போறாரே, துரை! அவரைப் பிடி! நம்ப வட்டிக் கடை மகாராஜா கேசவ்லால் சாவ்காரின் இளவரசர் இவரு! பிடிடா அவரை! மரியாதையா எல்லாத்தையும் வாங்கிக்கிட்டுப் பத்திரமாய் அனுப்பிச்சுடுங்கோ!" என்று இரண்டு பேர் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பேசுவது முழுவதும் மாணிக்லாலுக்குப் புரியாவிட்டாலும் அவர்கள் பார்த்த பார்வை, நடை, உடை எல்லாம் அவனுக்குப் புரிந்து விட்

டன. அந்த நேரத்தில் என்ன செய்வது என்று அவன் தவித்துக் கொண்டிருந்தான். அப்போது, "திருடன், திருடன்! பிடி, பிடி!" என்று உரத்த குரல் கேட்டது. யாரோ ஓடி வரும் சத்தமும் கேட்டது. அந்தத் திருடர்கள்— குற்றமுள்ள நெஞ்சல்லவா? ஓட்டமாய் ஓடலானார்கள். தக்க சமயத்தில் தன்னைக் காப்பாற்றியது யார் என்று திரும்பிப் பார்த்தான் மாணிக்லால். ஆகா! இதென்ன? யார் தன் வீட்டில் மழைக்குக்கூட ஒதுங்கக் கூடாதென்று கொட்டுகின்ற மழையில் வீட்டைவிட்டுப் பிடித்துத் தள்ளினனோ, அதே முத்தன்தான் அவனைக் காப்பாற்றியிருக்கிறான்! முத்தனைச் சேர்த்து அணைத்துக் கொண்டே, அவன் துணையோடு தன் வீடு சென்றான்.

வீட்டிற்குச் சென்றதும் தகப்பனாரிடம் எல்லா விஷயங்களையும் கூறி விளக்கினான். தான் வேண்டுமென்றே அந்த மாதிரிக் கூச்சல் போட்டதாகவும் திருடர்கள் ஓடிவிட்டதாகவும் முத்தன் விளக்கமாய்க் கூறினான். வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள்.

மறுநாள் தீபாவளி ஆனதால் மாணிக்லால் தன் தகப்பனாரிடம் சொல்லி முத்தனுக்கு மயில்கண் சரிகை வேஷ்டி ஒன்று எடுத்து கொடுத்துத் தன் மன்னிப்பைத் தெரிவித்துக் கொண்டான். அதற்குப் பிறகு அவன் முத்தனைக் காணவில்லை. மாணிக்கலால் அன்புப் பரிசாகக் கொடுத்த சரிகை வேஷ்டிதான் அது.

"அப்பா! முத்தனை உங்களுக்கு அடையாளம் தெரியாமலே போய் விட்டதா? அவனை எங்கிருந்தாலும் கண்டுபிடிக்க வேண்டும்!" என்றான் மாணிக்லால்.

"சரி, சரி. அதைக் கண்டு பிடித்து விடலாம்" என்று கூறினார் அவர்.

இரண்டு, மூன்று வாரங்களுக்குப் பிறகு அடகுச் சீட்டிலிருந்த விலாசத்தில் முத்தனைக் கண்டு பிடித்தார் கேசவ்லால். மாணிக்லால் அவனை அன்போடு வரவேற்றான். மயில்கண் சரிகை வேஷ்டியை முத்தன் ஏன் அடகு வைத்தான் என்று கேட்டான். முத்தன் தன் கதையைச் சொன்னான். இங்கிருந்து புறப்பட்டு அவன் தன் சொந்த ஊர் சென்றான். அவனுடைய தந்தையும் தாயும் ஒருவர் பின் ஒருவராகக் கொடிய காலரா நோய்க்கு இரையானார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் அவன் சென்னைக்கு வந்து சேர்ந்தான். வேலைக்கு அலைந்ததுதான் மிச்சம். கடைசியில் அவன் கையில் மிஞ்சியது மாணிக்லாலின் அன்பளிப்பான மயில்கண் சரிகை வேஷ்டிதான். அதை விற்க மனம் வரவில்லை. ஆகவே அதை அடகு வைத்து, கிடைத்ததைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைத்தான். முத்தனைக் கேசவ்லால் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. காரணம் முத்தன் அளவுக்கு மீறி இளைத்திருந்தான். கடைசியில் முத்தன் மாணிக்லாலின் வீட்டிலேயே வேலைக்கு அமர்ந்தான்.



இரும்பு மனிதன்

ராஜன்

"ஸார்! சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சந்தானம் வருகிறார்!" என்றான் சின்னத் தம்பி.

மேஜைமீது கால்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு, சுழல் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஜயராஜ் நிமிர்ந்து சரியாக உட்கார்ந்தார்.

அதற்குள் அறைக்குள் வந்துவிட்ட சந்தானம். "குட்மார்னிங், மிஸ்டர் ஜயராஜ்" என்றார்.

"குட்மார்னிங்! உட்காருங்கள்" என்றார் ஜயராஜ்.

"எனக்கு ஒன்றும் வேலையே ஓடவில்லை, ஸார். சில சமயங்களில் இந்தப் போலீஸ் உத்தியோகத்தை விட்டுவிட்டு, சுற்றுப் புறத்தில் பத்து மைல் தூரத்துக்கு ரெயில்வே ஸ்டேஷனே இல்லாத ஒரு சிறிய கிராமத்தில் கோழிப் பண்ணை வைத்துக்கொண்டு நிம்மதியாக வாழலாமா என்று தோன்றுகிறது!" என்று சொல்லிக்கொண்டே பிரம்பு நாற்காலியில் விழுந்தார் சந்தானம்.

"எதற்கு அப்படிச் சொல்லுகிறீர்கள்? என்ன நடந்து விட்டது?" என்று சாவகாசமாகக் கேட்டார் ஜயராஜ்.

"எல்லாவற்றிற்கும் காரணம் அந்த இரும்பு மனிதன்தான். அவனைப் பிடித்து விட்டிருந்தால் இவ்வளவு தொல்லை இருக்காது.

அவனை உடனே பிடித்தாக வேண்டும் என்று கமிஷனரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது!''

"இரும்பு மனிதன் யார்?''

"அதுதான் பாருங்கள், தெரியவில்லை. பெரிய பெரிய திருடர்கள் எல்லாம் இரும்பு மனிதன் என்று சொல்லுகிறார்களே தவிர, அவனைப் பற்றி வேறு ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். கொள்ளை போகும் நகைப் பெட்டிகளும், பணக்கட்டுக்களும் இரும்பு மனிதனின் கைக்குப் போய் விடுகின்றன. இரும்பு மனிதன் யார்? அவன் கறுப்பா, சிவப்பா? அவன் வயது என்ன? எங்கே இருக்கிறான்? யார் யாரையெல்லாம் சந்தித்துச் சதி செய்கிறான்? அவனுடைய கையாட்கள் மொத்தம் எத்தனை பேர்?—ஒன்றுமே தெரியவில்லை. இரும்பு மனிதனைப் பற்றி ஒருவராலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இப்போது ஒரு புது வதந்தி வந்திருக்கிறது. அடுத்த சனிக்கிழமை மாலை பீமரத்தினம் என்னும் வைர வியாபாரி பெரிய விருந்து வைக்கப் போகிறாராம். அமெரிக்காவுக்குச் சென்று, அளவுக்கு மிஞ்சிய படிப்பைப் படித்து விட்டு, முழநீளப் பட்டத்துடன் திரும்பி வந்திருக்கும் அவருடைய மகள் மனோரமாவைக் கௌரவிக்க விருந்து வைக்கிறாராம். அந்த விருந்துக்கு ஊரில் உள்ள பெரிய தலைகள் எல்லாம் போகும் இந்தச் சமயத்தில், மனோரமாவின் விலை உயர்ந்த வைர நெக்லஸ் மாயமாய் மறைந்துவிட்டால், விருந்தும் வரவேற்புக் கோலாகலமும் எப்படி இருக்கும்? பெரிய போலீஸ் அதிகாரிகள் எல்லாம் விருந்தில் கலந்து கொள்ளப்போகிறார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் இரும்பு மனிதனுடைய வலை மனோரமாவின் வைர நெக்லஸை மாட்டி இழுக்கப் போகிறது என்றால், அதைத் தடுக்க என்னால் முடிந்ததைச் செய்ய வேண்டுமல்லவா?''

"இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

"திருடர்கள் உலகத்தில் உலவும் வெறும் வதந்திதான். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மையோ?''

"ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய விஷயம்தான். விருந்துக்கு வரும்படி எனக்கும் அழைப்பிதழ் வந்திருக்கிறது. நானும் இந்த வேடிக்கையில் கலந்து கொள்கிறேன்!''

"போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, சந்தானம் தொப்பியை மாட்டிக்கொண்டு கிளம்பினார்.

*   *   *

மறு நாள் மாலை, ஜயராஜின் மேஜை மீதிருந்த டெலிபோன் அலறியது. ஜயராஜ் ரிஸீவரைக் கையில் எடுத்தார். "ஹலோ!'' என்றார்.

மயிலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி பேசினார். "இங்கே ஒரு பையன் இருக்கிறான். பெயர் சின்னத்தம்பியாம். வெள்ளைக் கால் சட்டையும், நீலநிறக் கோட்டும் போட்டுக் கொண்டிருக்கிறான். அவன் உங்கள் ஆபீஸ் பையனா?''

"ஆமாம்! இப்போது அவனுக்கு என்ன?''

"அவன் திருடிவிட்டான். அவனுடைய கோட்டுப் பையில் நகைப்

பெட்டி ஒன்று இருந்தது. லாக்கப்பில் வைத்திருக்கிறோம்!''

''டெலிபோன் ரிஸீவரை அவனிடம் கொடுங்கள்!''

அடுத்த விநாடி சின்னத்தம்பியின் குரல் வந்தது. ''ஸார்! நீங்கள் உடனே வரவேண்டும். இந்தப் போலீஸ்காரர்களுக்கு உதவி செய்யப் போய், நானே மாட்டிக்கொண்டேன்!''

''இதோ வந்து விட்டேன்!'' என்று சொல்லிவிட்டு, டக்கென்று ரிஸீவரை வைத்தார். ஸ்டாண்டில் இருந்த கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு, அவசர அவசரமாக வெளியே ஓடினார். காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

போலீஸ் ஸ்டேஷனில், ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த சின்னத்தம்பியைப் பார்த்ததும், ஜயராஜுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் அணிந்திருந்த நீலநிறக் கோட்டு அவனுக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமாக இல்லை.

''என்னடா இது? போலீஸ் ஸ்டேஷனில் வந்து அகப்பட்டுக் கொள்ளத்தான் அரை நாள் லீவு கேட்டாயா?'' என்றார் ஜயராஜ்.

''சினிமாவுக்குப் போகலாம் என்று புறப்பட்டேன். கஸ்தூரி கபே காபியைக் குடிக்காமல் என்னால்தான் ஒரு நாள்கூட இருக்க முடியாதே! கஸ்தூரி கபேயில் நுழைந்து, கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட்டு, சாவகாசமாக டிபன் சாப்பிட ஆரம்பித்தேன். அப்போது இன்னொரு ஆசாமி உள்ளே நுழைந்தான். அவனும் நீலநிறக் கோட்டு அணிந்திருந்தான். அவன் கோட்டைக் கழற்றி என்னுடைய கோட்டுக்குப் பக்கத்தில் மாட்டிவிட்டு உள்ளே சென்றான். ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்து கோட்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு

போய்விட்டான். கோட்டு மாறிப் போய் விட்டது. அவனுடைய கோட்டை, கோட்டை விட்டு விட்டுப் போய் விட்டான். அந்தக் கோட்டை எடுத்து நான் மாட்டிக் கொண்டேன். தொளதொள வென்று இருந்தது. பாக்கெட்டில் ஏதோ கனமாக இருந்தது. கையை விட்டு, அந்தக் கனமான பொருளை எடுத்தேன். அது ஒரு பெட்டி. அதைத் திறந்தேன். உள்ளே கண்ணைப் பறிக்கும் வைரப் பதக்கம் மின்னியது. ஆனால் அதற்குள் அங்கே வந்த போலீஸார் என்னையே பிடித்துக் கொண்டார்கள்!''

‘‘ஏன்?''

போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி குறுக்கிட்டுப் பேசினார். ‘‘இதே தெருவில் ஒரு பெரிய நகைக்கடையில் இந்தப் பதக்கம் திருட்டுப் போய்விட்டது!'' என்றார்.

‘‘[illegible]?'' என்றார் ஜயராஜ்.

‘‘அந்தக் கடை குமாஸ்தா, இந்தப் பதக்கத்தைப் பார்ஸல் செய்து, பீரோவில் வைத்தான். இந்தச் சமயத்தில் நீலக்கோட்டு அணிந்த ஆசாமி ஒருவன் அவனிடம் வந்து, இமிடேஷன் வைரப் பதக்கம் வேண்டும் என்று கேட்டான். குமாஸ்தா இமிடேஷன் பதக்கத்தைப் பெட்டியில் போட்டுப் பார்ஸல் செய்து மேலேயே வைத்து விட்டு, பில் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தான். நீலநிறக் கோட்டுக்காரன் ஐம்பது ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தபோது, அசல் வைரப் பதக்கம் போய்விட்டிருந்தது. இமிடேஷன் வைரப் பதக்கம் கண்ணாடி பீரோவில் இருந்தது.''

‘‘சரிதான்! சாமிநாதன் என்னும் பேர்வழியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அவனுடைய வேலைதான் இது! பெட்டிகளைக் கண்மூடிக் கண்திறப்பதற்குள் மாற்றுவதில் கைதேர்ந்தவன். அவன் செய்யும் எந்த வேலையும் ஏறக்குறைய இதே மாதிரிதான் இருக்கும். அவன்தான் பதக்கத்தை அடித்துக்கொண்டு வந்திருக்கிறான். ஹோட்டலுக்குள் நுழைந்ததும் கோட்டைக் கழற்றி மாட்டிவிட்டு, காபி சாப்பிட்டிருக்கிறான். போலீஸார் பின் தொடர்ந்து வருவதை யறிந்த சின்னத் தம்பியின் கோட்டை மாட்டிக் கொண்டு போயிருக்கிறான். சரி, சின்னத் தம்பியிடம் வாக்கு மூலம் வாங்கிக்கொண்டு, அவனை விட்டு விடுங்கள்!'' என்றார்.

ஐந்து நிமிஷம் கழித்து இருவரும் வெளியே வந்து காரில் ஏறினார்கள்.

சின்னத்தம்பி ஜயராஜிடம் ஒரு சிறிய காகிதத்தைக் கொடுத்தான். அவர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அதில் ஏதோ எழுதியிருந்தது. ‘‘இந்தச் சீட்டு ஏது?'' என்றார்.

‘‘அந்தக் கோட்டுப் பையில் இருந்தது! போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தெரியாமல் இதை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டேன்!'' என்றான் சின்னத்தம்பி.

ஜயராஜ் மெல்லச் சிரித்தார். கார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் வீட்டை நோக்கி ஓடியது.

சனிக்கிழமை மாலை ஏழு மணி.

வைர வியாபாரி பீமரத்தினத்தின் பங்களாவில் தீப அலங்காரம் கண்ணைப் பறித்தது. வெளியே, அந்தத் தெரு முழுவதும் பளபளக்கும் கார்கள் வரிசையாக நின்றன. உள்ளே விருந்து பிரமாதமாக நடந்துகொண்டிருந்தது.

அதே தெருவின் ஒரு கோடியில் நீலக்கோட்டு அணிந்த ஓர் ஆசாமி, சாக்லேட் விற்றுக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு ஜீப் வந்து நின்றது. உள்ளேயிருந்து ஜயராஜும் சந்தானமும் கீழே இறங்கினார்கள். கண்மூடிக் கண் திறப்பதற்குள், சாக்லேட்காரனை ஜீப்பில் ஏற்றினார்கள். உள்ளேயிருந்த சின்னத்தம்பி அவனுடைய உடைகளைக் கழற்றி மாட்டிக்கொண்டு, சாக்லேட் தட்டையும் கழுத்தில் மாட்டிக்கொண்டு, கீழே இறங்கி நின்றான். ஜயராஜும் சந்தானமும் காரில் ஏறினார்கள். ஜீப் மறைந்தது.

அரை மணி நேரம் கழித்து, கறுப்புநிற சூட் போட்ட ஆசாமி ஒருவன் சின்னத்தம்பியை நோக்கி வந்தான். சின்னத்தம்பியின் பக்கத்தில் வந்து, இரண்டணாவுக்குச் சாக்லேட் வாங்கினான். பிறகு கோட்டுப் பையிலிருந்து ஒரு சிறிய பெட்டியை எடுத்துச் சின்னத் தம்பியின் கோட்டுப் பையில் போட்டுவிட்டு மெல்ல நடந்தான்.

அவன் சிறிது தூரம்கூடப் போகவில்லை. எங்கேயோ மறைந்திருந்த ஜீப் மறுபடியும் தோன்றியது. அவனுக்குப் பக்கத்தில் சென்று நின்றது. ஜயராஜும் சந்தானமும் காரில் உட்கார்ந்தபடியே கைகளை நீட்டி, அவனுடைய காலரைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டார்கள்.

ஜீப்பில் உட்கார்ந்திருந்த நான்கு போலீஸ்காரர்கள் அவனைக் கட்டிப் போட்டார்கள். சாக்லேட் விற்றவனும் உள்ளே கட்டப்பட்டுக் கிடந்தான்.

சின்னத்தம்பி ஓடிவந்து ஜீப்பில் ஏறினான். சுமார் ஒரு மைல் தூரம் கடந்து, ஒரு தெருவின் முனையில் சின்னத்தம்பியை இறக்கிவிட்டு, ஜீப் போய் விட்டது.

சரியாக ஏழரை மணி.

பளபளக்கும் கறுப்பு நிறக்கார் ஒன்று தெருவின் திருப்பத்தில் வந்து நின்றது. காரின் உள்ளே வெளிச்சம் இல்லை. காரை ஓட்டி வந்த ஆசாமியின் முகம் சரியாகத் தெரியவில்லை. தலையிலே மெல்லிய இரும்புக்கவசம் அணிந்திருந்தான். அவன் அணிந்திருந்த சூட் என்ன கலர் என்று இருட்டில் தெரியவில்லை. அவன் காரில் இருந்தபடியே கையை நீட்டினான். சின்னத்தம்பி ஓடிப்போய் அவனிடம் அந்தச் சிறிய டப்பாவைக் கொடுத்தான். அதே சமயத்தில், காரின் மறுபுறம் இரண்டு கதவுகளும் திறந்தன. ஜயராஜும் சந்தானமும் நீட்டிய துப்பாக்கிகளுடன் உள்ளே ஏறினார்கள்.

"அந்தப் பெட்டியை இப்படிக் கொடு. இரண்டு துப்பாக்கிகள் உன்னைக் குறி பார்க்கின்றன!" என்று சொல்லி ஜயராஜ் அதைப் பிடுங்கிக்கொண்டார்.

சந்தானம் விசில் அடித்தார். எங்கிருந்தோ ஜீப் பறந்து வந்தது. உள்ளேயிருந்து போலீஸ்காரர்கள் குதித்தார்கள்.

"இந்தக் கேஸில் உங்களுக்கு எப்படிப் பிடி கிடைத்தது?" என்று

ஒரு பத்திரிகை நிருபர் ஜயராஜைக் கேட்டார்.

ஜயராஜ் சொன்னார் "சின்னத்தம்பி ஹோட்டலுக்குச் சென்றபோது, சாமிநாதன் தன்னுடைய கோட்டை விட்டுவிட்டு, சின்னத்தம்பியின் கோட்டை எடுத்துக் கொண்டு போய்விட்டான். அதனுள் ஒரு சீட்டுக் கிடந்தது. அந்தச் சீட்டு இரும்பு மனிதனால் எழுதப்பட்டது. அதில் சாமிநாதன் சனிக்கிழமை தினம் நீலநிறக் கோட்டு அணிந்து, சாக்லேட் விற்பனைப்போல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்க வேண்டும் என்றும், அவனிடம் கறுப்புநிற சூட் போட்டவன் ஒருவன் வந்து ஒரு பெட்டியைக் கொடுப்பான் என்றும், அந்தப் பெட்டியை, சுல்தான் பஜார் முனையில் ஏழரை மணிக்கு வரும் ஹட்ஸன் காரில் உள்ளவனிடம் கொடுக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தது. இந்த மாதிரியே திருட்டில் ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும், இரும்பு மனிதன் தபால் மூலம் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை மட்டும் விவரமாக எழுதிவிடுகிறான். அவர்களுக்குப் பணமும் தபால் மூலமாகவே போய்விடுகிறது. இரும்பு மனிதனை ஒருவரும் சரியாகப் பார்த்ததில்லை. பார்த்தாலும், அவன்தான் இரும்பு மனிதனென்று புரிந்து கொள்வதில்லை!"

அவரைச்சுற்றி இன்னும் எத்தனையோ பத்திரிகை நிருபர்கள் ரெடியாகக் காமிராவை வைத்துக் கொண்டு நின்றார்கள். காமிராக்கள் கிளிக் கிளிக்கென்று சப்தம் போட்டன. ஜயராஜின் பக்கத்தில் சின்னத்தம்பி ஸ்டைலாக நின்றான்.



"ஜெயிலிலிருந்து தப்பிக்கப் பார்க்கவில்லை அண்ணே! சந்திரனின் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தோம். வாடா, இன்னும் கிட்டப் போய்ப் பார்க்கலாம் என்று மதில் மேலே ஏறினோம்..

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

படம்: ஸாமி

இளம் வீரன் சென்றதும் மற்றொரு படையான் வருகிறான் . . . . . .
குஞ்சர நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற படைகள்...
என்னவாயின
உம், குக்குடனை முறியடியுங்கள்!
இது ஏற்றசமயமல்ல. நமக்குத் துணைப் படைகள் வர வேண்டும்!
முன்னேறுகிறாயா, இல்லையா?
படைகளைக் கண்டபடி செலுத்தமுடியாது!
ஆ! எதிர்த்தா பேசுகிறாய்?
ஹா!!!
படைகள் இளவரசனுக்கு எதிராகவே கலகம் செய்யத் தொடங்கி விட்டன.
கீழ்ப்படிய மாட்டோம்!
இளவரசன் ஒழிக!
திரும்பிப் போ!
உன் தலை பத்திரம்!
எப்படி தப்புவது?
அப்படியானால் இளவரசன் குஞ்சர நாட்டின் சிறையிலா இருக்கிறான்?
ஆம், அரசே!
சரியாக ஒரு மண்டலம் ஆகிறது . . . .
மந்திரி, இளம் வீரன் இன்று வருவதாகச் சொன்னான் அல்லவா?
ஆம்!
தொடரும்.

எங்கள் பகுதி

*உறுதி கூறட்டும்

அண்ணனும் தங்கையும் கண்ணனுக்காகச் சண்டையிடும் அட்டைப்படம் அழகாகவே இருக்கிறது. ஆனால் வர்ண வேலைப்பாடு இன்னும் கொஞ்சம் செய்திருந்தால் கவர்ச்சியாக இருந்திருக்கும். 'கேட்டீர்களா!' என்ற பகுதி வழக்கம்போல் உபயோகமாக இருக்கிறது. 'சந்திரகிரிக் கோட்டை' கதை சுவாரஸ்யமாய் இருக்கிறது. தமிழ் நடை அருமையாக இருக்கிறது. சிறந்த தொடர் கதைகளில் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. 'தம்பீ, கேள்' என்ற கதை வீண் வளர்த்தல். மனோதர்மம் இல்லாத வறண்ட கதை. குறள் கருத்தை இன்னும் நல்ல தறியில் போட்டுப்பின்னினால்தான் சிறப்பாக இருக்கும். உயர்ந்த கருத்து என்ற ஜரிகையை வலைத்துணியில் அமைத்தால் எப்படியோ அப்படியிருக்கிறது கதை.

'பொய்' என்ற கதை தேவலை. 'நல்ல தீர்ப்பு' என்ற கதை ஒரு ஹிந்தித் தழுவல். சொந்தக் கற்பனை என்றால் இன்னும் நன்றாக இருக்கும். 'தோழிக்கு' என்ற பிரயாணக் கட்டுரை நல்ல முயற்சி. 'பிள்ளையார் பிடி' என்ற கதை பல பத்திரிகைகளில் பலதடவை வந்த நாடோடிக் கதையாக இருக்கிறது. 'கேளுங்கள்' என்ற பகுதி நல்ல பகுதி. ஆனால் விடை விரிவாக இருந்தாலும் தெளிவு குறைவாக இருக்கிறது. அசடு வழிந்தது, மறைந்த மோதிரம், தூங்கும் அழகி, கலாசாமியின் கடிதம் - எல்லாம் நன்றாக இருக்கின்றன.

கதையின் அடியில் சொந்தமாக எழுதியது என்று உறுதி கூறியுள்ள கதைகளை மட்டுமே பிரசுரம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.
—எஸ். பேபி, திருச்சிராப்பள்ளி.

பொய்யல்ல!

வணக்கம். 15-5-54 கண்ணன் வந்ததும் எங்கள் வீட்டில் ஒரே சண்டை. அப்புறம் பார்த்தால், என் தம்பிக்கும் தங்கைக்கும் சற்று முன்பு நடந்த சண்டையே கண்ணன் அட்டைப் படமாக வந்திருக்கிறது! இது எப்படி?

கண்ணன் என் கைக்கு வந்ததும் முதலில் 'சந்திரகிரிக் கோட்டை'யைப் படித்தேன். என்ன சுவாரஸ்யம் போங்கள்! என் கண்கள் எவ்வளவு வேகமாக ஓடின, தெரி

---

*பரிசு பெற்ற கடிதம்

புமோ? அமலனின் குதிரையாவது, விமலனின் குதிரையாவது அவ்வளவு வேகமாக ஓடியிருக்குமா என்பது சந்தேகந்தான்.

'தம்பீ, கேள்' என்ற கட்டுரை எங்களுக்கு உபயோகமானது.

'தோழிக்கு' என்ற கடிதம் ரொம்ப நன்ருக இருக்கிறது.

'நல்ல தீர்ப்பு' என்ற கதைக்கு நீங்கள் அளித்திருக்கிற தீர்ப்புத்தான் எனக்குப் பிடிக்கவில்லை. அதைக் கண்ணனில் பிரசுரிக்கலாம் என்று தீர்ப்புச் செய்து பிரசுரிக்கவும் செய்திருக்கிறீர்களே, அதைத்தான் சொல்லுகிறேன். அந்தக் கதை முன்பே கலைமகளில் வந்திருக்கிறது.

'அசடு வழிந்தது' முதலிலேயே எங்கேயோ படித்ததுபோல் இருக்கிறது.

'மறைந்த மோதிரம்' நன்ருகவே இருக்கிறது. ஆனுலும், ரங்கசாமி 'சர்க்கரை வேண்டாம்' என்றதுமே விஷயம் நன்கு புரிந்து விடுகிறது. இதை வெங்கடேசன் கண்டு பிடித்தது ஒன்றும் ஆச்சரியமில்லையே! இது மற்றவர்களுக்குத் தெரியாததுதான் ஆச்சரியம்!

'பிள்ளையார் பிடி' வேடிக்கையாக இருக்கிறது. 'கேளுங்கள், சொல்கிறேன்' எனக்குப் பிடித்த பகுதி. அதைப் படிக்கும்போது பாடம் படிப்பதுபோல் கசக்கவில்லை. ஆனுலும் பாடப் புஸ்தகங்களைவிட அதிகமாகத் தெரிந்து கொள்ளுகிறேம்!

'ஆயிரம் பொய் சொல்லி' என்ற பரிசுக் கடிதம் வேடிக்கையாக இருக்கிறது. ஆனுலும் 'கண் கொட்டாதபடி பார்த்தார்', 'மூச்சு விடக்கூட நேரம் இல்லை' போன்ற வாக்கியங்கள் மொழிக்கு அணிகலன்கள் அல்லவா? அவைகளைப் பொய் என்று ஈனமாகச் சொல்லி விட்டாரே சகோதரர் கலாசாமி!

—ரா. லக்ஷ்மி, (L. 35) கல்கத்தா.

வாழ்க கண்ணன்!

நண்பா, போட்டித் திட்டம் வெளியாகி விட்டது. 'டைம் பீஸ்' அடையும் பெருமைசாலி யாரோ! அது சரி....

'தம்பி, கேள்!' - திருக்குறளின் கருத்தை விளக்கச் சிறுவர்களுக்கு இது போன்ற சிறுகதைகள் எழுதுவது பாராட்டப்பட வேண்டியதுதான்....ஆனுல் கதையின் முற்பகுதியிலே தந்தியை விளக்குவதற்கும் கதைக்கும் பொருத்தம்....? கதை வேண்டுமென்றே வளர்த்தப் பட்டது!

'தோழிக்கு' என்னும் கட்டுரை பிரமாதம். இது போன்ற பிரயாணக் கட்டுரைகளைத் தொடர்ந்து கண்ணனிலே வெளியிட்டால்..ஆஹா..! மறைந்த மோதிரம்' - நிகழ்ச்சி சிறியது தான்; ஆனுல் நல்ல கற்பனை. 'பிள்ளையார் பிடி' என்னும் கதை ஏற்கெனவே ஒரு முறை 'அம்புலி மாமா' என்னும் பத்திரிகையிலே வெளியாகிவிட்டதே! அதற்கு ஒரு 'நல்ல தீர்ப்பு' அளிக்கத் தானே வேண்டும்..! 'நல்ல தீர்ப்பு' என்ற கதை நான் ஆரம்பப் பள்ளியிலே படிக்கும் பொழுதே படித்து, கேட்டு, சலித்து, அலுத்துப் போனது என்றால் உன் முகத்திலே 'அசடு வழியா'மலா இருக்கும்? 'அசடு வழிந்தது' பொய் கூறும் சிறுவர்களுக்கு ஒரு சவுக்கடிதானே!

'தூங்கும் அழகி'க்கு எங்கும் நாங்கள் 'சந்திரகிரிச்

கோட்டை'யை மந்திர வசப் பட்டவர்கள் போல் படிப்பதில் என்ன விந்தை!

அது சரி; 'எங்கள் பகுதி' யிலே, 'ஆயிரம் பொய் சொல் லிய' ஆளைத் தெரியுமா? வேடிக்கை பார்..ஒரு டஜன் பொய்களைப் பகிரங்கமாக ஓர் 'ஆயிரம் பொய்' என்று பொய் கூறுகிறாரே மனுஷன்!

'குறை'கள் சில இருந்தாலும் இதன் 'நிறை'வான பகுதிகள் அதற்கு ஒரு 'திரை' இடுவதாலே அவையெல்லாம் 'மறை'வது சரிதானே!

வாழ்க கண்ணன் வளமுடனே.

—கி. சு. நாத், தாம்பரம் (கிழக்கு)

நகை மிகு இதழ்

அட்டைப்படம் கண் கொள் ளாக் காட்சியாய் இருக்கிறது. "கேட்டீர்களா" என்னும் பகுதி பல அரிய பெரிய விஷயங்களைத் தெரிவிக்கிறது. "சந்திரகிரிக் கோட்டை" எப்பொழுதும் போல் விறு விறுப்புள்ளதாக அமைந்து உள்ளது. ஈரடிக் குறள் கருத்தை விளக்க வந்துள்ள, "தம்பீ கேள்" என்னும் கதை ஜோர்.

"பொய்" என்னும் குலிஸ்தான் கதை சுமார். "அஜாந்தா" கட் டுரையில் சிற்பங்களின் வர்ணனை மிகவும் அருமை.

"நல்ல தீர்ப்பு" என்னும் கதை மொத்தத்தில் நல்ல கதைதான். ஆனால் எழுதியவர் 'ஹிந்தி கதை 'யைத் தழுவியது' என்று எழுதத் தான் மறந்துவிட்டார்.

"அசடு வழிந்தது" என்னும் கதை படித்த கதை போல இருக்கிறது. "மறைந்த மோதிரம்" என்னும் தப்பறியும் கதை வெகு ஜோர். 'தேவ ரகசியம்' என்னும் புஸ்தகத்திலுள்ள 'தெய்வத்தின் பித்தலாட்டம்' என்னும் கதையே "பிள்ளையார் பிடி."

"கேளுங்கள், சொல்கிறேன்" என்னும் பகுதி நன்கு அமைந் திருக்கிறது. சித்திரக் கதையாகிய, "தூங்கும் அழகி" பலே ஜோர். விகடத் துணுக்குகள் யாவும் நகை மிகுந்து விளங்குகின்றன.

கி. நாராயணன், புதுக்கோட்டை.

நல்ல இதழ்

இந்தத் தடவை கண்ணன் அட்டைப் படம் மிகவும் நன்றாக விளங்குகிறது.

"தூங்கும் அழகி" மிகவும் நன்றாக இருக்கிறது.

"பிள்ளையார் பிடி" என்ற கதை யின் பெயர்தான் சுவாரஸ்யமாக இல்லை.

ஜஹாங்கீரின் தீர்ப்பைப் படித்த வுடன் மனுநீதிச் சோழன் தீர்ப்பு நினைவுக்கு வருகிறது.

"தம்பீ, கேள்!" கதையை அவர் எந்தக் காலத்தை வைத்து எழுதி யிருக்கிறார் என்றுதான் தெரிய வில்லை. இந்தக் காலத்தில் ஒரு கண்டக்டரும் தன் கையிலுள்ள பணத்தைப் பணம் கொண்டுவராத வருக்குக் கொடுத்து உதவுவதாகத் தெரியவில்லை. "தோழிக்கு" என்று சசிதேவி எழுதியிருப்பது அவ்வள வாக ரசிக்க முடியாவிட்டாலும் அதில் அவர் விவரித்திருக்கும் அஜந்தா சித்திரங்களை உடனே போய்ப் பார்க்கவேண்டும் என்ற அவா எழாமல் இல்லை.

"கேளுங்கள், சொல்லுகிறேன்" என்ற பகுதி இருக்கிறதே, அது மிகவும் முக்கியமான பகுதி!

—W. பிரமீலா, சென்னை-5.

2|11|70

கண்ணன் பவனி

கண்ணன் [illegible] அட்டைப்படம் வெகு ஜோர்!

சந்திரகிரிக் கோட்டை வழக்கம் போல் விறு விறுப்போடு செல்லுகிறது. பொய் என்ற நிமிஷக் கதை அருமை.

"தோழிக்கு" என்ற கடிதக் கதையில் அஜந்தாவைப்பற்றி நன்றாக எழுதி யிருக்கிறார் கதாசிரியை. இப்படியான பழைய காலத்துக் குகைகளில் இருக்கும் சித்திரங்களைப் பற்றி நிறையக் கண்ணனில் இடம்பெற வேண்டும். 16, 17, 24, பக்கத்தில் உள்ள துணுக்குகள் வெகு ஜோர். ஆனால் 24-ஆம் பக்கத்தில் உள்ள துணுக்கு முன்பே வந்தது.

நல்ல தீர்ப்பு என்ற கதை வேறொரு பாடப் புத்தகத்தில் வெளிவந்தது. இது காப்பியடித்த கதை. 'மறைந்த மோதிரம்' என்ற கதை வெகு ஜோர்.

தூங்கும் அழகி கதை இரண்டாம் தடவையிலேயே மிகவும் விறு விறுப்போடு செல்கிறது. ஆனால் சில பிழைகள் உண்டு. 1-ஆம் படத்தில் மந்திரி சொல்ல வேண்டியதை ராஜா சொல்கிறார். ராஜா சொல்ல வேண்டியதை மந்திரி சொல்கிறார்.

எங்கள் பகுதியில் பெ. கலாசாமியின் விமரிசனம் மிகமிக நன்றாய் யிருக்கிறது. கண்ணன் நல்ல அம்சங்களோடும், அழகிய படங்களோடும் பவனி வருகிறான்.

—பா. நாராயணன், இலங்கை.

விஞ்ஞானத்தின் பதில்:

பரீட்சைக் கேள்விக்கும உங்கள் கேள்விக்கும் வித்தியாசம் உண்டு. பரீட்சையில் கேள்வி கேட்பவருக்கு விடை தெரியும்.

மாணவனுக்கு அது தெரியுமா என்று சோதிப்பதே அவருடைய நோக்கம். ஆகையால் தான், பரீட்சையில் ஒரு வரியிலும், ஒரு எழுத்திலும் கூட விடைகள் சொல்லப்படுகின்றன.

நீங்கள் என்னைக் கேள்வி கேட்கும் போது, என்னைச் சோதிப்பது உங்கள் நோக்கம் இல்லை, அல்லவா? விடைகள் தெளிவாகத் தெரிந்துகொள்வதே உங்களுடைய நோக்கம் என்று நினைத்துப் பதில் சொல்லி வருகிறேன்.

அப்படி யிருக்கும் போது....

(சென்ற இதழில் வெளியான 'என் விமரிசனம்' என்ற கடிதத்துக்குப் பதில்.)

—புரொபஸர் விஞ்ஞானம்.

பாராட்டக்கூடிய முறையில் எழுதிய கடிதங்கள்:

(1) எம். கைலாசம், ஸ்ரீரங்கம். (2) K. பத்மநாபன், கணபதிநகர், தஞ்சை. (3) N. குளத்தூரன், கொழும்பு-13. (4) G. அரவிந்தன், நாகூர். (5) கே. வி. பி. கலைமணி, கும்பகோணம். (6) G. N. ராமதாஸ், ராணிப்பேட்டை. (7) S. A. ஜப்பார், அதிராம்பட்டணம். (8) ச. வேங்கடாசலம், பார்க் டவுன். (9) ஜே. தமிழன்பன், திருச்சி. (10) P. R. உபைத், திருவத்திபுரம். (11) V. கமலக்கண்ணன், பெரிய மெட்டு. (12) N. K. ராஜன், சேலம். (13) அ. கா. பார்வதி, வேலூர் (வ. ஆ) (14) சே. ரா. கிருஷ்ணமூர்த்தி, நாமக்கல். (15) R S ராஜகோபால், பவானி. (16) ஜி. அம்பலவாணன், சிதம்பரம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 9

1 - 5 - '54

குழந்தைகளே !	பக்கம்	2
சந்திரகிரிக் கோட்டை	..	3
குதிரை கொடுத்தது	..	9
தூங்கும் அழகி	..	11
ஒரே பதில்	..	13
மஞ்சள் நாய்க்குட்டி	..	19
கணக்கு டெஸ்ட்	..	23
கண்ணன் கழக அங்கத்தினர்கள்		27
கேளுங்கள், சொல்லுகிறேன்	..	29
கடவுளுக்குக் கடிதம்	..	32
பேச்சாளர்	..	35
எங்கள் பகுதி	..	37

கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் - மூன்றாவது அட்டை

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

எமக் கிழம்!

ஒரு கிழவி இழந்த பார்வையை மீண்டும்பெற்றால் வைத்தியருக்குப் பணம் தருவதாகச் சொன்னாள். வைத்தியரும் ஒப்புக்கொண்டார். வைத்தியர் பலே பேர் வழி. கிழவிக்குக் கண் தெரியாததால் வீட்டிலிருந்த பாத்திரங்களில் தினமும் ஒன்றாய் எடுத்துக் கொண்டு போனார்.

கொஞ்ச நாளில் கிழவிக்குக் கண் நன்றாகத் தெரிந்தது. வீட்டில் இருந்த பாத்திரங்கள் கெட்டுப் போன மர்மத்தைக் கிழவி தெரிந்து கொண்டாள்.

"உனக்குக் கண் இப்போது தெரிய வேண்டுமே?" என்றார் வைத்தியர்.

"ஐயா! வைத்தியரே! கொஞ்ச நஞ்சம் தெரிந்த கண்ணும் இப்போது சுத்தமா அவிஞ்சு போச்சு. போதும் உம்முடைய வைத்தியம். பணமும் கிடையாது ஒண்ணும் கிடையாது" என்றாள் கிழவி.

வைத்தியர் பஞ்சாயத்தாரிடம் முறையிட்டார்.

"வைத்தியர் சொல்வது உண்மையா?" என்றார் பஞ்சாயத்தார்.

"உண்மைதான். ஆனால் ஒன்று, என் வீட்டில் வைத்தியர் வருவதற்கு முன்பு இருந்த பாத்திரம் பண்டங்களில் ஒன்றைக்கூட நான் இப்போது பார்க்க முடியவில்லையே!" என்றாள் கிழவி.

சபையோர் கிழவியின் கூற்றைப் புரிந்துகொண்டனர். வைத்தியர் வீட்டில் சோதனை செய்ததில் கிழவியின் அத்தனை பாத்திரங்களும் பத்திரமாய் இருந்தன. கிழவிக்குப் பாத்திரங்களும் திரும்பக் கிடைத்தன; கண் பார்வையும் காலணாச் செலவில்லாமல் கிடைத்துவிட்டது. எமக்கிழம்! இல்லையா? —கே. எஸ். ஆர்.

MAY 1954

குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் விடுமுறை தொடங்கிவிட்டது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு உங்களை அவிழ்த்துவிட் டிருக்கிறார் கள். யாராலும் கட்டிப் பிடிக்க முடியாது. உங்கள் பாடு யோகம் தான்!

ஆனால் என் பாடுதான் ரொம்பத் திண்டாட்டமாகிவிட்டது! எத்தனை கடிதத்துக்குப் பதில் எழுதுவது; எத்தனை கதை, கட்டுரை களைப் படிப்பது; நேரில் வரும் எத்தனை பேர்களைப் பார்ப்பது! தினமும் வெளியூர்களிலிருந்தெல்லாம் கண்ணன் அங்கத்தினர்கள் வந்து காரியாலயத்தையே முற்றுகையிடத் தொடங்கிவிட்டார்கள். அவர்களோடு பேசி அனுப்பி வைப்பதற்குள் இன்னொரு கோஷ்டி தயாராகக் காத்திருக்கிறது. அவர்களை உள்ளே வரவிடுவதா, உள்ள வேலையைக் கவனிப்பதா என்பதே புரியவில்லை! வந்தவர்களை ஏமாற்றத்துடன் திருப்பி யனுப்பவும் முடியவில்லை; வேலையைக் கவனிக்காமலிருக்கவும் முடியவில்லை. இதையெல்லாம் பார்த்த பிறகு, இருந்தால் உங்களைப்போல அல்லவா இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது!

இந்த இதழிலியே புதிய பரிசுப் போட்டியை வெளியிட வேண்டும் என்று ஆனமட்டும் முயன்றோம். முடிவு ஏற்பட நாளாகி விட்டதால் இதில் வெளியிடவில்லை. அடுத்த இதழில் அந்தப் புதிய போட்டி வெளியாகும். சிறுவர் பத்திரிகையுலகில் இத்தகைய பரிசுத் திட்டம் ஒரு புதுமையாகவே இருக்கும்.

சந்திரகிரிக் கோட்டை ஆரம்பமானதிலிருந்து, "கண்ணன் கிடைக்கவில்லை; விற்பனையாகிவிட்டது என்கிறார் ஏஜெண்டு!" என்ற புகார்கள் அதிகரித்துவிட்டன. அதற்கு உடனே சந்தாதார ராகச் சேர்வதுதான் சிறந்த வழியாகும். அல்லது உங்கள் ஊர் ஏஜெண்டுகளிடம் உங்கள் பெயரை முன்னதாகவே பதிவு செய்து வைத்து விடுங்கள். யாருக்கு இல்லை என்றாலும் உங்களுக்கு இல்லை என்று சொல்லமாட்டார்.

இந்த இதழில், 'தூங்கும் அழகி' என்ற சித்திரக் கதை வெளி யாகியிருக்கிறது. 'எங்கள் பகுதி'யும் ஒரு பக்கம் அதிகமாக வெளி யாகியிருக்கிறது. அதில் உங்கள் கைவரிசையைத் தாராளமாகக் காட்டலாம்.

இந்தப் பகுதிக்கு எழுதும் குழந்தைகள் ஒன்றரையணாவுக்கு உள் நாட்டுத் தபாலை வாங்கி அதில் எழுதினாலே போதும். உறையின் வெளிப்புறத்தில் 'எங்கள் பகுதி' என்று குறிப்பிட்டு விடுங்கள். வீணாக வளர்த்தலாகவும் பெரிதாகவும் எழுத வேண்டாம். மிகவும் பெரிதாக எழுதினால்தான் பரிசு கிடைக்கும் என்ற எண்ணம் தவறு. சுருக்கமாக, திறமையுடன் எழுதுபவர்களுக்கே பரிசு பெறச் சந்தர்ப் பம் அதிகம்.

குழந்தைகளுக்கான வெளியீடுகள் பல வெளி வந்துள்ளன. கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் உண்டு. வேண்டிய புத்தகங்களுக்குரிய தொகையை மணியார்டர் மூலமாக அனுப்புங்கள். ஒரு ரூபாய்க்குக் குறைவாக அனுப்ப வேண்டியிருந்தால் தபால் தலைகளாக வாங்கி அனுப்ப லாம்.

—ஆசிரியர்.

சந்திரகிரிக் கோட்டை

'ஜனு'

அமலனுடைய ஆனந்தமெல்லாம் ஒரே நொடியில் திகைப்பாக மாறியது. அமலன் அங்கே இருப்பதைப் புலிக்குட்டி கவனிக்கவில்லை. ஒரே எதிர் வெயிலானதால் கவனித்திருந்தாலும் சுலபத்தில் தெரியாது.

'சரி, அவன் இன்னும் அருகில் வரட்டும்; பேசிக்கொள்ளலாம்' என்று அமலன் எண்ணிக்கொண்டான். ஆனால் இதென்ன அதிசயம்! அதோ, அந்தக் குத்துச்செடி மறைவில் சென்றவன் திடீரென்று எங்கே மாயமாய் மறைந்து போனான்?

அமலன் சற்றுப் பொறுத்துப் பார்த்தான். புலிக்குட்டி இருப்பதும் இல்லாததும் தெரியவில்லை. உடனே எழுந்து அந்தக் குத்துச் செடியை நோக்கி ஓடினான் அமலன். அவனுடைய திகைப்பு மேலும் பெருகியது. புலிக்குட்டி மறைந்த சோடே தெரியவில்லை. கண்ணுக்கெட்டிய வரையில் அவனைக் காணவில்லை.

"புலிக்குட்டி! புலிக்குட்டி!" என்று இரைந்து குரல் கொடுத்தான். அவனுடைய குரல் ஏரிக்கரையின்மீது எதிரொலித்துச் சென்றதே தவிர யாரும் பதில் கொடுக்கவில்லை. அமலன் குத்துச்செடியையும் அதன் சுற்றுப்புறத்தையும் நன்றாக ஆராய்ந்து பார்த்தான். புலிக்குட்டி நடந்து சென்ற காலடியைக்கூடக் காண முடியவில்லை.

'இவன் என்ன, மானிட ஜன்மந்தானா? அல்லது மந்திர தந்திர வித்தைகள் தெரிந்த மாயாவியா?' என்று அமலனுக்குப் பெரிய யோசனையாகிவிட்டது. அவனைத் தனியே கண்டு பேசி, பல செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணியதெல்லாம் வீணாகி விட்டதே என்று அவனுக்கு வருத்தமாக இருந்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனது போன்ற ஏக்கம் ஏற்பட்டது.

'இங்கே எப்படி இவன் மாயமாக மறைந்து போயிருப்பான்? ஒருகால் அவன் திரும்பி வேறுவழியாகச் சென்றதை நான் சரிவரக் கவனிக்காமல் போய்விட்டேனா?

கால் நாழிகை நேரம்கூட ஆகியிருக்காதே! அதற்குள் அவன் எப்படித்தான் பறந்துபோயிருக்கக்



கூடும்?'—அமலன் சிந்தனையில் ஆழ்ந்தவாறே திரும்பி ஏரிகரைக்கு வந்தான். வெறுமே மனம் பதியாதபடி ஏரியின் அழகையும் அதைச் சுற்றியுள்ள காட்சிகளையும் பார்த்துக்கொண்டு நின்றான்.

ஏரியில் அலைகள் மடிப்பு மடிப்பாகப் புரண்டு வந்து கரையில் 'சளக் சளக்' கென்று உருண்டு விழுந்து சென்றன. மாந்தோப்புக் குயில்கள் பாடுவதற்குப் பக்கவாத்தியம் வாசிப்பதுபோல் இருந்தது அந்தச் சப்தம். அமலன் அந்த இயற்கைக் காட்சியில் மனத்தைச் செலுத்தினான். ஏரியின் மேல் கோடியில் இருந்த மலைக் குன்றுகள் மேகங்கள் நிற்பதுபோல் புகையாகத் தெரிந்தன. ஏரியின் கரை உயரமாயம் மனிதர் நடப்பதற்கு ஏற்றதாய் இல்லாமலும் இருந்தது. இதையெல்

லாம் பார்த்த அமலனுக்கு, 'இங்கே எந்தவிதமான போட்டி நாளை நடைபெறப் போகிறது?' என்ற கேள்வி தோன்றியது.

'எப்படியிருந்தால் என்ன? நாளை விவகாரம் நாளைக்கு. இன்று அதைப்பற்றியெல்லாம் எண்ணி மண்டையை உடைத்துக்கொள்வானேன்? இவ்வளவு ரமணீயமான ஏரியை வேறு எந்த நாட்டிலாவது பார்க்க முடியுமா? எத்தனை மக்களுக்கு இது உயிர் நாடியாக விளங்குகிறது. வீரமானேரியின் சரித்திரம் இந்தச் சோழ நாட்டின் சரித்திரம் அல்லவா? உடைப்பும் வெள்ளமும் ஊர்களைப் பாழாக்க முடியாதபடி வீரமானேரி எல்லாவற்றையும் வாங்கித் தாங்கிக் கொள்ளுகிறதே! இயற்கையின் விசித்திரந்தான் என்ன? அதைப் பயன் படுத்திக்கொண்ட மனிதனின் புத்தி வன்மைதான் என்ன?'

இவ்வித எண்ணங்களுடன் அமலன் தன் இடத்துக்குத் திரும்பிச் சென்றான்.

*   *   *

மறுநாள் அதிகாலையிலேயே அமலன் மாடமாளிகையிலிருந்து ஏரிகரையைப் பார்த்தான். கோட்டை மக்கள் சாரிசாரியாக ஏரியை நோக்கிச் செல்வது தெரிந்தது. கோட்டையின் வெளிப்புறம் காளிகோயிலின் உச்சி தெரிந்தது. இரட்டையர்கள் இருவரும் தம் தம் இடத்திலிருந்து வெற்றியைக் குறித்துக் காளிதேவியை வேண்டிக்கொண்டார்கள்.

சூரியோதயம் ஆகிவிட்டது.

பாளையக்காரர் தம் பரிவாரங்களுடன் சகோதரர்களை அழைத்துக்கொண்டு ஏரியை நோக்கிச் சென்றார். பறையும் கொம்பும் சங்கும் மேளமும் முழங்கிக்கொண்டிருந்தன.

முதல் நாள் அமைதியும் எளிமையும் நிறைந்திருந்த ஏரி இன்று போட்டிக்கு ஏற்ற விதத்தில் விநோதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு நாள் இரவில் இவ்வளவு ஏற்பாடுகளையும் பாளையக்கார் செய்திருக்கிறார் என்பது உடனே அமலனுக்கு விளங்கியது. ஏரியின் தரையில் ஓர் அழகிய தோணி, தடுப்புகள் ஏந்திய ஆட்களுடன் காத்திருந்தது.

சேமக்கலம் ஒலித்தது. மக்கள் கூட்டம் அமைதியில் அடங்கியது. பாளையக்காரர் எழுந்தார்.

"ராஜகுமாரர்களே! புலிக் கோட்டையின் பெருங்குடி மக்களே! இன்று போட்டியின் இரண்டாவது நாள். அதாவது இது இரண்டாவது போட்டி. இந்தப் போட்டி சற்றுக் கடினமானதுதான். ஆயினும் நமது ராஜகுமாரர்களுடைய வீரத்துக்கும் இணையற்ற திறமைக்கும் ஏற்ப இந்தப் போட்டியை நாங்கள் விதிக்கவேண்டியிருக்கிறது.." என்று சொல்லிக்கொண்டேயிருக்கும்போது இவ்வளவு நேரமும் கண்ணில் படாமல் இருந்த புலிக்குட்டி முன்வரிசையில் காணப்படுவதை அமலன் கவனித்தான். புலிக்குட்டியோ விமலனைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்தான். விமலனும் பதிலுக்குப் புன்னகை செய்தவண்ணம் வெகு அலட்சியமாக நின்ற காட்சி அமலனை ஒரு கணம் கலக்கியது.

பாளையக்காரர் போட்டியின் விவரங்களை யாவரும் கேட்கும்படி

வர்ணித்தார். "ஏரிகரையைச் சுற்றிலும் தடைகளும் தடுப்புக்களும், நெருப்புப் பந்த வளையங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. சகோதரர்கள் தம் தம் குதிரைமீது ஏறி வலமாகப் புறப்படவேண்டும். பலவிதத் தடைகளும் இடையூறுகளும் இருக்கும் இடங்களிலெல்லாம் நடுநிலையாக ஆராய்ந்து முடிவுகூறக் கூடிய மனிதர் ஒருவர் நிற்பார். அந்தந்த இடங்களுக்குத் தகுந்தபடி அந்தந்தத் தடைகளைக் கடந்து புறப்பட்ட இடத்துக்கு வந்து சேரவேண்டும். ஊகத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் அவற்றைக் கடக்க வேண்டியிருக்கும். ஆனால் விதிப்படி நடந்து கொள்ள வேண்டும். இருவரும் சமவேகத்தில் வந்தாலும் ஒருவருடைய குதிரைக்கும் மற்றவருடைய குதிரைக்கும் நடுவில் குறைந்த பட்சம் ஒரு கோல் இடைவெளியாவது இருக்க வேண்டும். அதை மீறினால் மீறுபவர் பந்தயத்தில் தோற்றவராகக் கருதப்படலாம். இவையே போட்டியின் முக்கிய விவரங்கள். மற்றபடி நடுநடுவே ஏற்படும் நிலைமைகளுக்கு ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ள நடுநிலைமையாளர் முடிவு கூறுவார்கள். இனி, போட்டியை ஆரம்பிக்கலாமா?" என்று கூறி முடித்தார் பாளையக்காரர்.

சற்றும் தயக்கமோ தடையோ சொல்லாமல் சகோதரர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். பஞ்சகல்யாணியும் நீலவேணியும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. அமலனும் விமலனும் அவற்றை ஆதரவோடு தடவித் தட்டிக் கொடுத்தார்கள். குதிரைகள்

இரண்டும் கம்பீரமாக நின்ற காட்சியைக் கண்ட மக்கள், "ஒன்றை ஒன்று மிஞ்சக்கூடிய இவற்றில் எதுதான் வெற்றியைத் தேடித் தரப் போகிறதோ?" என்று பேசிக்கொண்டார்கள். மற்றும் சிலர், "இந்தப் புரவிகள் இரண்டுமே சளையான குதிரைகளல்ல; தோல்வியைப் பொறுக்காத ஜாதிக் குதிரைகள். ஆனால் அதிருஷ்டத்தினால் ஏதாவது ஒன்று ஜயித்தால்தான் உண்டு" என்றார்கள்.

'பூம் பூம்' என்று கொம்பு முழங்கியது.

ஒரே உற்சாகமான ஆரவாரத்துக்கிடையே அமலனும் விமலனும் குதிரையின்மீது ஏறிக்கொண்டார்கள். முதல் தடை, திருப்பத்திலேயே இருந்தது. அந்தத் திருப்பம் வரையிலும் இரண்டு குதிரைகளும் டக்டக்கென்று ஒரே சீராகச் சென்றன. பந்தய ஓட்டங்களில் ஓடும் குதிரைகளின் அழகே தனியல்லவா?

'ஹோ ஹோ!' என்ற உற்சாகக் குரலிட்டுக்கொண்டிருந்தனர் இளைஞர்கள். பாளையக்காரரும் மற்றுமுள்ள பிரதானிகளும் அந்தத் துறையிலிருந்த தோணியில் ஏறிக்கொண்டார்கள். தெப்பம் செல்வதுபோல் கரையோரமாகவே அந்தத் தோணியும் போகத் தொடங்கியது. ஆட்கள் எவ்வளவு வேகமாகத் துடுப்புகளைச் செலுத்த முடியுமோ அவ்வளவு வேகமாகச் செலுத்திச் சென்றார்கள்.

குதிரைகள் இரண்டும் திருப்பத்தை நெருங்கின. மின்னல் ஒன்று நெளிவதுபோல மாலை வெயிலில் குதிரைச் சேணங்கள் மின்னின. அடுத்த கணம் விசுக்கென்று இரண்டு குதிரைகளும் தட்டித் தடையை அநாயாசமாகத் தாண்டிப் பாய்ந்து சென்றன.

இந்தக் காட்சியைக் கண்ணுற்று நிற்கும் கூட்டத்தினரின் உற்சாக வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

ஏரியின் கரை மிகவும் குறுகலாகவும் மேடு பள்ளங்களாகவும் இருந்தது. ஒரே சமயத்தில் இரண்டு குதிரைகள் ஒரு கோல் இடைவெளியுடன் ஓடுவதற்கு ஏற்றதாக அது இல்லை. ஏதாவது ஒரு குதிரை முன் பின்னாகப் போய்த்தான் தீர வேண்டியிருந்தது. அப்படிப் போக முடியாவிட்டால் இரு மருங்கிலும் உள்ள சரிவில்தான் போக வேண்டும். கத்தி முனையில் ஓடுவதுபோல இரண்டு குதிரைகளும் வெகு ஜாக்கிரதையாக, 'நீ முந்தி, நான் முந்தி' என்று போட்டா போட்டி போட்டுக்கொண்டு ஓடின.

அடுத்த தடங்கல் இன்னும் கொஞ்சம் உயரமாக இருந்தது. குதிரைகள் பாய்ந்தபோது கீழே தரை சரியாக இல்லாததால் அமலனின் குதிரை தடுமாறிப் போயிற்று. ஆனால் அமலன் அதை மிகச் சாமர்த்தியமாகச் சமாளித்துவிட்டான். ஆனால் விமலனின் குதிரை இந்தச் சந்தர்ப்பம் பார்த்து நாலு தப்படி முன்னேறி விட்டது.

கரையில் நின்ற கூட்டத்தினருக்கு அதற்குமேல் என்ன நடக்கிறது என்பது தெரியாததால் அவர்கள் குதிரைகள் சென்ற திசையையே பார்த்தவண்ணமிருந்தார்கள்.

(தொடரும்)

குதிரை கொடுத்தது

அழ. வள்ளியப்பா

"கையி லுள்ள ரேகை தன்னைக்
கவன மாகப் பார்த்துமே

ஐயம் இன்றிப் பதிலு ரைப்பார்
அடுத்த ஊரில் வந்துள்ளார்"

என்று நண்பர் கூறக் கேட்டு,
எழுந்து வேணு முதலியார்

சென்று அந்த மனிதர் தம்மைத்
தேடிப் பிடித்துக் கூறினார்:

"விரைவில் பணத்தைச் சேர்க்க நானும்
விரும்பு கின்றேன். ஆதலால்,

தகுந்த வழிகள் ஏதும் உண்டோ?
குறிகள் பார்த்துக் கூறுவீர்."

கையைப் பிடித்துப் பார்த்து விட்டுக்
"கணக்காய் நானும் கூறுவேன்.

ஐயா, குதிரை யாலே நீவிர்
அடைவீர் செல்வம். நிச்சயம்!"

என்று அவரும் கூறக் கேட்டு
எழுந்து வேணு முதலியார்,



அன்றே குதிரைத் திடலை நோக்கி
ஆவ லாகச் சென்றனர்.
குதிரைப் பந்த யத்தில் அவரும்
கொஞ்சம் கொஞ்ச மாகவே,
அதிகப் பணத்தை இழந்து மிகவும்
அல்லற் பட்டுத் திரும்பினர்.
திரும்பி அவரும் வந்த போது
'திடுதிப்' பென்று வேகமாய்
அருகில் வந்த குதிரை வண்டி
அவரின் மீது ஏறவே,
வலது கையும் முறிந்த தையோ!
வைத்தி யர்கள் பார்த்துமே,
பலனே இல்லை. ஆத லாலே
பாவம்; நொண்டி யாயினர்!
"கஷ்டம் மிகவும் பட்டேன், இந்தக்
கையொ டிந்த தால்" என
நஷ்ட ஈடு கோரி ரூபாய்
நான்கு நூறு பெற்றனர்.
குறிகள் சொன்ன மனிதர் மீது
குற்றம் உண்டோ? சொல்லுவீர்!
சிறிதும் இல்லை. குதிரை யாலே
செல்வம் சேர்ந்த தல்லவா?

புதிய சித்திரத் தொடர்கதை

உனக்கு வேண்டியதைத் தருகிறேன். விஷயம் வெளியில் தெரியக்கூடாது.
அடிமை! வணங்குகிறேன்!
உன்னால் இதைச் செய்ய முடியுமா?
இதென்ன பிரமாதம்! என் மந்திரக்கோல் என்னிடம் இருக்கும் வரையில் எதுதான் ஆகாது!
இந்த விஷயம் வெளியில் தெரிந்தால் உன் தலை போய்விடும்! அவ்வளவுதான். போ!
சூ! மந்திரக் காளி! மாயக் காளி! வா!
அடுத்த கணம்........
ஐயையோ! இங்கு தொட்டிலில் கிடந்தக் குழந்தையைக் காணோமே! என்ன செய்வேன்
ஐயோ! என் தலை போய் விடுமே!!
ஆ! என்ன செய்வேன்
எங்கே இக் குழந்தை?
குழந்தை எங்கே?
என் செல்வத்தைக் காணோமா? ஆ!!
ஆ! என் அருமைக் குழந்தையைக் காணோமா?
இளைய சகோதரன் இவைகளைப் பார்த்து, ஒன்றுமே தெரியாதவன் போல் வந்து பாசாங்கு செய்கிறான்...
இங்கே இருந்த குழந்தை மாயமாக மறைந்து எங்கே போய்விடும்! போங்கள். நாடெங்கும் சென்று தேடிப்பாருங்கள்!
எங்கும் காணோம்!
காணோம்
சல்லடை போட்டுச் சலித்து விட்டோம்!
இல்லை
தொடரும்.

ஒரே பதில்

கோமளா

1

நேரம்: காலை.

இடம்: கிட்டுவின் வீடு.

[கிட்டு ஒரு கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறான். அங்கு அவன் அம்மா வருகிறாள்]

அம்மா: டேய் கிட்டு!

கிட்டு: என்ன அம்மா?

அம்மா: பாடத்தைப் படிக்காமல் அங்கே என்ன செய்துகொண்டிருக்கே?

கிட்டு: பாடமெல்லாம் படிச்சு முடிச்சுட்டேன் அம்மா. கதை படிக்கிறேன்.

அம்மா: கதையுமாச்சு! கத்தரிக்காயுமாச்ச! இங்கே வா!

கிட்டு: (எழுந்து வந்து) என்ன அம்மா! கடைக்குப் போகணுமா?

அம்மா: நீ எங்கேயும் போக வேண்டாம். போய், பாடபுத்தகத்தை வச்சுண்டு படி! போ!

கிட்டு: (மெதுவாக) உம்! பழைய பல்லவிதான்?

அம்மா: இந்தாடா! இங்கே நின்றுகொண்டு என்னை எரித்துவிடுவது போல் பார்க்க வேண்டாம். போய்ப் படி! எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்றேன்.

கிட்டு: (மனசுக்குள்) உம்! அது எனக்கே தெரியாதா?

(போகிறான்)

அப்பா: (வழியில்) டேய், எங்கேடா போறே? கடைக்கா?

கிட்டு: (முகமலர்ச்சியுடன்) என் அப்பா, கடைக்குப் போகணுமா? என்ன வாங்கிண்டு வரணும்?

அப்பா: (கோபத்துடன்) நாங்கள் கடை என்றதும் முகம்போகிற போக்கைப் பார். பரீட்சை நெருங்கிடுத்து. போய்ப் படி போ!

(போகிறான்)

2

[கிட்டு அறையில் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான். அவன் நண்பன் மணி வருகிறான்]

மணி: என்னடா இது, இப்படிச் சோகமே உருவாக இருக்கே?

கிட்டு: அதை ஏன் கேட்கிறாய், போ! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையப்பா!

மணி: என்னப்பா, உரக்கச் சொல்லு!

கிட்டு: போடா, உனக்கெல்லாம் கேலியாயிருக்கு. இப்ப கொஞ்ச நாளா எங்கள் வீட்டிலே எல்லோருக்கும் படிப்பிலே ஆசை வந்திருக்கு.

மணி: வரட்டுமே! அது ரொம்ப நல்லது தானே. உனக்கென்ன கஷ்டம் அதிலே?

கிட்டு: டேய், அவசரக் குடுக்கை! சொல்றது பூராவையும் கேளு. அவர்களுக்குப் படிப்பிலே ஆசை வந்துடுத்துன்னு அவர்களே படித்தால் தேவலையே! அதுதானே இல்லை; சும்மா என்னையல்லவா படிக்கச் சொல்லுகிறார்கள்.

மணி: சரி! படிச்சுட்டுப் போயேன்!

கிட்டு: நீ இதுவும் சொல்வே! இன்னமும் சொல்வே! உனக்கென்னடா வந்தது!

மணி: டேய் கிட்டு, நீயா இப்படியெல்லாம் பேசறது? நன்னாப் படிச்சுப் 'பஸ்ட்'லே மார்க் வாங்கும் நீயா பேசறே?

கிட்டு: டேய்! எல்லாம் உனக்கு விளையாட்டாக இருக்கு. படிக்கிறதைப் பற்றிச் சொல்லவில்லையடா! எப்பப் பார்த்தாலும் படித்துக்கொண்டே உட்கார்ந்திருக்கணுமாம். வெளியிலே கடைக்குக் கூட அனுப்ப மாட்டேன் என்கிறார்களடா.

மணி: போடா! இதைப் போய்ப் பிரமாதமாகச் சொல்ல வந்துவிட்டாய். நமக்கு வேலை வைத்தாலும் கஷ்டம், இல்லைன்னாலும் கஷ்டம். இதற்கு விடிவு எது? போடா!

அப்பா: டேய் கிட்டு! அங்கே என்ன பேச்சு? நான் படிக்கச் சொன்னால் வம்பளந்துண்டா உட்கார்ந்திருக்கிறாய்?

மணி: இல்லே மாமா! "நன்னாப்படி"ன்னு கிட்டுவுக்குச் சொல்லிட்டுப் போக வந்தேன்.

போயிட்டு வரேண்டா கிட்டு!

(போகிறான்)

3

[மணி போனதும் கிட்டு யோசிக்கிறான். எப்படியாவது வீட்டை விட்டு விட்டு வெளியே போய் சிறிது நேரம் 'ஜாலி'யாகச் சுற்றவேண்டும் என்ற முடிவிற்கு வருகிறான். எழுந்து அம்மா இருக்கும் இடத்தை நோக்கிச் செல்கிறான்]

கிட்டு: அம்மா! படித்து முடித்துவிட்டேன். வெளியிலே எங்காவது போகணுமா?

அம்மா: நீ எங்கேயும் போக வேண்டாம்னு அப்பவே சொன்னேனே. போய்ப் படி! போ!

(கிட்டு போகிறான்)

கிட்டு: (வழியில்) அப்பா! கடைக்குப்போய் இன்றைப் பேபர் வாங்கிண்டு வரட்டுமோ?

அப்பா: நீ ஒன்றும் வாங்கிண்டு வரவேண்டாம். எனக்கே வாங்

கிக்கொள்ளத் தெரியும். நீ போய்ப் படி! பரீட்சை வந்துடுத்து.

[கிட்டு தன் அக்காவை நெருங்குகிறான்]

கிட்டு: அக்கா! உன் சிநேகிதிகள் யார் வீட்டுக்காவது போக வேண்டுமா? சொல், போய்விட்டு வருகிறேன்.

அக்கா: அட! எது அதிசயமாயிருக்கே! என் ஏதாவது ஓரணா இரண்டணா தேவையோ?

கிட்டு: இல்லையக்கா! காசு கீசு ஒன்றும் வேண்டாம். சும்மாச் சொல்லு; போய்விட்டு வருகிறேன்.

அக்கா: ஓஹோ! இப்பொழுதல்லவா நீ அக்கறையாகக் கேட்பதன் காரணம் தெரிகிறது. என் சிநேகிதி ஊருக்குப் போய்விட்டாள்என்பதைத் தெரிந்துகொண்டு வந்து என்னைக் கேலி செய்கிறாய்! இரு! இப்ப வந்து உன்னை என்ன செய்கிறேன், பார்.

கிட்டு: ஐயையோ! இது நல்லதற்குக் காலம் இல்லைபோலேயிருக்கு! நான் நிஜமாகவே போகிறேன் என்று சொன்னேன்.



எனக்கு உன் சிநேகிதி ஊருக்குப் போயிருக்கிறதே தெரியாது, தெரியுமா!

அக்கா: சரி! சரி! எப்படி யாவது இருக்கட்டும்! இப்பொழுது நீ போய்ப் படி. இல்லாவிட்டால் அப்பாவிடம் சொல்லிவிடுவேன்!

கிட்டு: இதோ போயிடறேன் அக்கா! நீ போய்க் கோள் மூட்டி விடாதே! (போகிறான்)

(தனக்குள்) ஹும்! இவர்களுக்கெல்லாம் வேண்டும் என்றால் வேண்டும். வேண்டாமென்றால் வேண்டாம். நல்ல அக்கா! நல்ல அப்பா!

அண்ணா: என்னடா கிட்டு! ஏதோ முணுமுணுத்துக் கொண்டே வருகிறாய்! படித்ததை யெல்லாம் சொல்லிப் பார்த்துக் கொள்ளுகிறாயா?

கிட்டு: (மனத்திற்குள்) சரி தான், ஆரம்பிக்கு முன்பே அஸ்து போட்டாய்விட்டது!

(உரக்க) இல்லை அண்ணா! படிக்க வேண்டியதை யெல்லாம் அப்பவே படித்து முடித்துவிட்டேன். ஏன் அண்ணா, 'லாண்ட்ரி', கடை எங்கேயாவது போக வேண்டுமா?

அண்ணா: ஏன், காசுக்கு அடி போடுகிறாயா?

கிட்டு: சே! சே! எனக்குக் காசு ஏதாவது வேண்டுமென்றால் உன்னை நேரிடையாகக் கேட்க மாட்டேனா? சும்மாத்தான் கேட்டேன், கடைக்குப் போகணுமா என்று!

அண்ணா: எங்கேயும் போக வேண்டாம். போய்ப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படி போ! பரீட்சை வரது இல்லையா! போ! போ!

கிட்டு: அட கடவுளே!

தாத்தாவிடம் (போகிறான்)

கிட்டு: தாத்தா! தாத்தா!

தாத்தா: என்னடா கண்ணு! படிச்சு முடிச்சுட்டியா?

(இதைக் கேட்டதும், கிட்டுவின் முகம் சுருங்குகிறது. ஆனாலும் சமாளித்தவாறு)

கிட்டு: ஓ! முடித்துவிட்டேன். தாத்தா! தாத்தா! உங்களுக்குக் கடையிலே யிருந்து பொடி வாங்கிண்டு வரட்டுமா?

தாத்தா: (ஆச்சரியத்துடன்) இந்தக் கேள்வியைக் கேட்பது கிட்டுவா?

கிட்டு: ஆமாம் தாத்தா! போகட்டுமா?

தாத்தா: எனக்கு இப்ப ஒன்றும் வேண்டாம்! நீ போய் நன்றாகப்படி. பரீட்சை கிட்டே வந்து விட்டது பார்!

கிட்டு: எங்கேபோனாலும் ஒரே பதில்தானா? அட ராமா!

[சலிப்புடன் பாட்டியிடம் போகிறான்]

கிட்டு: பாட்டி! உனக்கு ஏதாவது கடையிலேயிருந்து வாங்கிண்டு வரவேண்டுமா?

பாட்டி: வேண்டாமடா அம்பி!

கிட்டு: அப்போ இந்த ராமாயணத்திலே ஏதாவது படிக்கட்டுமா?

பாட்டி: அதெல்லாம் வேண்டாமப்பா! நீ போய் உன் பாடத்தைப் படி. அதுவே போதும்! போப்பா!

கிட்டு: உம்ம்.. இங்கேயும் பின் வாங்கல்தானா!

4

[கிட்டு தன் அறையில் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான். அப்பொழுது அவன் மாமா நடராஜன் வருகிறார்.]

நடராஜன்: ஏம்மா வீதா! ஸ்டோரில் காபிக்கொட்டை நல்லதாக வந்திருக்கு. 'பஸ்ட்கிளாஸா' இருக்கு. ஆளுக்கு எவ்வளவு வேண்டுமென்றாலும் தருகிறான்.

அம்மா: அப்படியா அண்ணா, இதோ அவரைப் போகச்சொல்லுகிறேன்.

நடராஜன்: போகிறதன்னா சீக்கிரம் போகச் சொல்லு. அப்புறம் ஆகிவிடும். என்ன, நான் வரேன். (போகிறார்)

அப்பா: எனக்கு ஆபீஸுக்கு நாழியாயிடுத்து. என்னாலே போக முடியாது.

(கிட்டு உள்ளேயிருந்து ஓடிவருகிறான்)

கிட்டு: அம்மா! அம்மா! நான் போய் வாங்கிண்டு வரேன்!

அப்: அவனையே அனுப்பலாம்.

அம்: சரி!

அப்: அப்படி என்றால் எங்கள் இருவருக்கும் சீக்கிரம் சாதம் போட்டு விடு. அவனை ஸ்டோரில் விட்டுட்டு நான் ஆபீஸுக்குப் போகிறேன்.

5

(ஸ்டோரில் ஒரே கூட்டம். இதில் காபிக் கொட்டை வாங்குவது எப்படி என்று அப்பா திகைக்கிறார். இந்தச் சாக்கிலாவது சிறிது நேரம் 'ஜாலி' யா யிருக்கலாம் என்று கிட்டு மிகவும் சந்தோஷமடைகிறான். அப்பொழுது அங்கு ஒருவர் வருகிறார். அவர் அப்பாவின் முதுகில் அறைந்தபடி)

புதியவர்: அட, நீ நம்ப ராமு இல்லே!

அப்பா: அடடே! தர்மலிங்கமா? எங்கே இப்படி?

தர்மலிங்கம்: இது யாரு? உன் வாரிசா?

அப்பா: ஆமாம். கடைக்குட்டி இவன்தான். கிட்டுன்னு பேர். நாலாம் பாரம் படிக்கிறான்.

தர்: ஓ! அப்படியா? நல்லது! இப்ப பரீட்சை சமயமில்லே?

அப்: பரீட்சை இப்பொழுது இல்லை. அடுத்த வாரம்தான். இந்த வாரம் படிப்பதற்காக லீவு விட்டிருக்கிறார்கள். ஆனால் அவனுக்குப் படிக்க ஒழிவே இல்லை.

தர்: அட ராமா! அப்ப அந்தக் கிளார்க் நமக்குத் தெரிந்தவர் தான். வா! உனக்கு முதலில் காபிக் கொட்டையைக் கொடுத்து அனுப்பச் சொல்லுகிறேன்.

(இதைக்கேட்டு கிட்டு அதிர்ச்சி அடைகிறான். தன் எண்ணத்தில் மண் விழுந்ததை நினைத்துக் கவலைப்படுகிறான்.)

அப்: இந்தாடா கிட்டு! காபிக் கொட்டையைக் கொண்டு போய் வீட்டிலே கொடுத்துவிட்டு, பாடத்தைப் படி. அந்த மட்டும் தர்மலிங்கம் தயவிலே நமக்கு முதலில் கிடைத்து விட்டது. உன் நல்ல காலந்தான்! எங்கேயாவது ஊர் சுற்றக் கிளம்பி விடாதே! வீடு வரைக்கும் துணையாக இதோ இந்த மாமாவும் வருகிறார். அவர் உன்னைக் கவனிச்சுப்பார்!

கிட்டு: (மனசுக்குள்) போகும் போது இப்படிக் கொஞ்சம் 'ஜாலி' யாகப் போகலாம்னு பார்த்தால் அதற்கும் ஓர் ஒற்றனா? நல்ல அப்பா! நல்ல படிப்பு!

(தொங்கிய முகத்துடன் போகிறான்.)

[திரை]

மஞ்சள் நாய்க்குட்டி

ஈ. ஸ்ரீ.

மயிலாப்பூர் மந்தைவெளியில் ஒரு வீதி. அங்கே புளியமரங்களும், சிறு சிறு குடிசைகளும் இருந்தன. ஒரு புளியமரத்தின் கீழே நாய் ஒன்று தன் ஐந்து குட்டிகளுடன் சந்தோஷமாய்ப் படுத்திருந்தது. குட்டிகளும் தாயின் மேல் ஏறியும் குதித்தும் விளையாடிக்கொண்டிருந்தன.

பக்கத்திலே இருந்த ஒரு குடிசையிலிருந்து பூனைக் குட்டி ஒன்று நாய்க் குட்டியுடன் விளையாட வந்தது. ஆனால் தாய் நாய் அந்தக் குட்டியை அருகில் வரவொட்டாமல் சீறி அடித்துத் துரத்தியது. மேலும் பூனைக்குட்டிகளோடு சேர வேண்டாம் என்று புத்திமதி சொல்லிற்று.

நாய்க்குட்டிகள் எல்லாம் வெள்ளை வெளேரென்று இருந்தன. அதில் ஒரு குட்டியின் முகத்திலும் உடலிலும் வெளுத்த மஞ்சள் கோடுகள் இருந்தன. அது பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருந்தது. தாய் நாய் அந்தக் குட்டியை அடிக்கடி நக்கிக் கொடுப்பதும் அல்லாமல், அதனிடம் மிக ஆசையாயும் இருந்தது.

ஆனால் மற்றக் குட்டிகள், இதைப் பார்த்துப் பொறாமைப்பட்டன. தாய் நாய் அவைகளைப் பார்த்து, "இந்த மஞ்சள் நாய்க்குட்டியால் தான் நமக்கு நல்ல காலம் வர வேண்டும்" என்றது.

ஒரு நாள் சில பள்ளிக்கூடப் பையன்கள் கிரிக்கட், பந்து முதலிய சாமான்களுடன் அந்தத் தோட்டத்தில் விளையாட வந்தார்கள். ஆடிவிட்டுத் திரும்பும் போது ஒரு பணக்காரப் பையன், அந்த நாய்க் குட்டிகளைப் பார்த்தான். மஞ்சள் கோடு விழுந்திருந்த நாய்க் குட்டியைத் தூக்கிச் சென்றான்.

அந்த நாய்க்குட்டி, 'கியாவ், கியாவ்' என்று கத்திற்று. ஆனால் தாய் நாய் சந்தோஷமாகவே பார்த்துக் கொண்டு படுத்திருந்தது. பையன் தன் வீட்டில், கயிறு ஒன்று எடுத்து வந்து அதன் கழுத்

தில் கட்டித் தன் வீட்டுக்குக் கொண்டு சென்று விட்டான். அன்று இரவு பூனைக்குட்டி அந்த வீட்டையடைந்தது.

அந்த நாய்க்குட்டியின் சமீபம் சென்றது. ''நண்பா! உன் தாய் மிகவும் பொல்லாதவள். உன்னை இந்த வீட்டுக்காரன் எடுத்துக் கொண்டுவரும் போது பார்த்துக் கொண்டிருந்தாளே! என் தாய் அப்படி இருக்க மாட்டாள். தன் குட்டியை எடுத்தவன் மீது எகிறி விழுந்து, பிச்சுப் பிடுங்கி மீட்டிருப்பாள்'' என்றது.

''ஆம்! என்ன செய்வது? என் தாயார் என் பேரில் அதிக ஆசை வைக்கவில்லை'' என்றது நாய்க் குட்டி, கண்ணீர் விட்டுக் கொண்டே. ''நான் ஒன்று செய்கிறேன். இந்தக்கயிற்றைஎன்வாயால் கடித்து அறுத்து விடுகிறேன். நீ மறுபடி புளிய மரத்தடிக்குப் போய் விடலாம். நானும் அங்கே வருகிறேன், விளையாடலாம்'' என்றது.

நாய்க்குட்டியும் ஒப்புக் கொண்டது. பூனைக்குட்டி கயிற்றைக் கடித்து அறுத்தது. பிறகு இரண்டும் ஓடிவிட்டன. குட்டி ஓடிவந்து தாயின் மடியில் புரண்டது. தாய் நாய் அதைப் பார்த்து விசனமடைந்தது. ஆனால் மற்றக் குட்டிகளெல்லாம் சந்தோஷம் அடைந்தன. ''ஐயோ! நீ ஏன் வந்தாய்? உன்னால்தானே நல்ல காலம் என்று நினைத்தேன். பூனைக்குட்டி அங்கே வந்து ஏதாவது கலகம் செய்திருக்கும். 'அதன் வார்த்தைகளைக் கேட்காதே. அதோடு சகவாசம் செய்யாதே' என்று எத்தனை தரம் சொன்னேன். இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நீ பொழுது விடியுமுன் அந்த வீட்டுவாயிலில் நின்றுகொண்டிரு. பையன் உன்னைப் பார்த்ததும் விடமாட்டான். உன் நல்ல காலத்தைப் பிறகு சொல்லுகிறேன்'' என்றது தாய் நாய். மறுபடி குட்டி நாய் கஷ்டப்பட்டுக் கொண்டே அந்தப் பையன் வீட்டுவாயிலில் விடியுமுன் போய் நின்றது.

காலையில் எழுந்ததும் நாய்க் குட்டியைக் காணுமல் வாசல் பக்கம் தேடினுன். அங்கு அதைப் பார்த்துப் பிடித்துக்கொண்டு, வீட்டில் சங்கிலி வாங்கிக் கட்டி வைத்தான். கார்ப்பரேஷன் ஆபீசுக்குச் சென்று ஒரு லைசென்சும் வாங்கிவிட்டான். கயிற்றில் கட்டி அந்த நாய்க்குட்டியின் கழுத்தில் அதைத் தொங்க விட்டான்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு, அந்த நாய்க்குட்டி நன்ருகப் பழகி விட்டது. எனவே அதைக் கட்டாமலே விட்டுவிட்டான் அந்தப் பையன். அது அந்த வீட்டின் எல்லாப் பக்கங்களிலும் குதித்துக் குதித்துத் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும். கழுத்தில் கட்டியிருந்த கயிறு அறுந்து லைசென்சு கீழே விழுந்து விட்டது. பையன் அதை எடுத்து உள்ளே வைத்தான். தோலால் செய்த ஒரு பட்டையில் அதைக் கோத்துக் கட்ட வேண்டும் என்று எண்ணினுன்.

வெயிற்காலம் வந்தது. நாய் பிடிப்பவர்கள் மோட்டார் வண்டிகளில் தெருத்தெருவாய்ச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். பையனின் நாய் புழக்கடைப் பக்கமாகப் போகும்போது நாய் பிடிப்பவர்கள் அதைச் சுருக்குப் போட்டுப் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். பையன் எப்படியோ இதைத் தெரிந்துகொண்டான், 'ஓ'வென்று கதறினுன். பையனின் தகப்பனர் லைசென்சுடனும் பையனுடனும் காரில் ஏறி, நாய்களைக் கொல்லுமிடத்திற்குச் சென்ருர்.

அங்கு மஞ்சள் கோடிட்ட நாய்க்குட்டி, மற்றும் அதன் சகோதரக் குட்டிகளுடன் இருந்தன. பையன் தன் லைசென்சைக் காண்பித்துத் தன் குட்டியை மீட்டுக் கொண்டான். தன் தந்தையிடம் சொல்லி மற்றைய நான்கு குட்டிகளையும் தனக்கே கொடுக்கும் வண்ணம் கேட்டான். அங்கிருப்பவர்கள் அவ்வாறே கொடுத்து விட்டார்கள். எல்லாவற்றையும் தங்கள் வீட்டில் முற்றத்தில் கட்டினுன். ஏற்கெனவே தங்களுக்கும் நாய்க்குட்டி வேண்டுமென்று சொன்ன பையனின் சித்தி மகன், பெரிய தகப்பனர் மகன், மாமன் மகன், சிநேகிதன் ஆகிய நால்வருக்கும் சொல்லியனுப்பினுன்.

அன்று இரவு தாய் நாய், தன் நான்கு குட்டிகளையும் காணுமல் அழுது கொண்டே பையனின் வீட்டையடைந்தது. அங்கே தன் ஐந்து குட்டிகளையும் கண்டது. குட்டிகள் நடந்தவற்றைச் சொல்லி முடித்தன. மேலும் பையனின் பந்துக்களும், சிநேகிதர்களும் தங்களை ஆளுக்கு ஒன்ருகக் கொண்டு போகப் போவதாகச் சொல்லின.

தாய் நாய் சந்தோஷப்பட்டது. "குழந்தைகளே! நீங்கள் சிறியவர்கள். உங்களுக்கு அநுபவம் போதாது. நான் மஞ்சள் கோடுபோட்ட குட்டியிடம் ஆசையாய் இருக்கிறேன் என்று பொருமைப் பட்டீர்களே. அந்தக் குட்டியால்தான் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். மஞ்சள் குட்டியே! நீ பூனைக் குட்டியின் பேச்சைக் கேட்டு, என்னைத் தப்பாக நினைத்தாயே. நீங்கள் அவ்வளவு பேர்களும் புளிய மரத்தடியில் இருந்தால் இத்தனை

நேரம் இறந்திருப்பீர்கள். மஞ்சள் குட்டியைப் பையன் எடுத்துச் சென்ருன். அதனுல் உங்கள் எல்லோருக்கும் நல்ல வாழ்வு வந்துவிட்டது. ஆதலால் பிள்ளைக்குத் தாய் தப்புச் செய்யமாட்டாள். கெட்டபிள்ளை இருக்கலாம். கெட்ட தாய் இருக்கமாட்டாள். நீங்கள் எல்லாரும் சந்தோஷமாய் இருக்கும்போதே, நான் காட்டுப்புறத்துக்குப் போகிறேன். அங்கே என்னை மனிதர்கள் அடிக்கமாட்டார்கள். தன் பெண்களை வளர்த்து நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து அவர்களைச் சந்தோஷமாகப் பார்ப்பதுதான் தாயின் சந்தோஷம். அம்மாதிரியே நான் பார்த்துவிட்டேன். இனி உங்களுக்கு ஒரு கஷ்டமும் நிகழாது. நான் வருகிறேன். இனி உங்களை நான் பார்க்க மாட்டேன். நீங்களும் என்னைப் பார்க்க முடியாது" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டது.

-மகான்-

நாய்க் குட்டிகளும் தாய் பிரிவதைப் பார்த்துக் கஷ்டப்பட்டன. மறுநாள் பந்துக்களும் சிநேகிதர்களும் நாய்க்குட்டிகளை அழைத்துச் சென்ருர்கள்.

மஞ்சள் குட்டியை இப்பொழுது பார்த்தால் அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. அவ்வளவு ஜோராக அது கொழுத்துப் பருத்துவிட்டது. அடிக்கடி மற்ற நான்கு குட்டிகளையும் போய்ப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தது.

கணக்கு டெஸ்ட்

ரங்கநாயகி

மணி - ஒரு மாணவன்.

ராதா - அவன் சகோதரி.

சோமு, ராமு - சிநேகிதர்கள்.

மற்றும் அப்பா, அம்மா, அத்தை.

1

(செவ்வாய்க்கிழமை)

மணி: அடீ ராதா, நாளைக்கு நம்ம அத்தை வருகிறாளாம். கடிதம் வந்திருக்கு.

ராதா: அட கஷ்டமே. அவள் இங்கு எதுக்காக வருகிறாளாம்?

மணி: உனக்கென்ன அவ்வளவு கஷ்டம்? வந்தால் அவள் பாட்டுக்கு ஒரு ஜப மாலையை உருட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கப் போறாள்.

ராதா: அவள் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தால்தான் தேவலையே. 'அடுப்பு மெழுகக் கத்துத் தரேன், வாடி' என்பாள். 'எச்சிலைத் துடைக்க எப்ப தெரிந்து கொள்வது?' என்று எரிந்து விழுவாள். தினம் இவளுக்குக் கந்த புராணத்தை வாசித்துச் சொல்வதற்குள் நாக்கு வறண்டு போயிடும். போது விடிந்தால் பழையது சட்டியைத் தூக்கி வந்து விடுவாள். மகா கஷ்டம். இவளை இங்கு யார் கூப்பிட்டார்கள்?

மணி: அப்பப்பா, இந்தப் பெண்களுக்கே வீட்டு வேலை செய்வதென்றால் மகா கஷ்டம். ஆண் பிள்ளைக்குச் சரியா ஊரைச் சுற்றச் சொன்னால் தயார்!

ராதா: ஏண்டாப்பா, நீங்கள் தான் ஊர் சுற்ற வேண்டுமா? நாங்கள் போகக் கூடாதா?

மணி: பேஷாகச் சுற்றுங்கள். அடுப்பு வேலையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். சரிதானே.

ராதா: பின்னே என்னடா? எந்த விஷயத்திலேடா நாங்க உங்களை விட மட்டம்?

மணி: இதோ பார். உன்னைச் சொல்லித் தப்பில்லை. இதெல்லாம் இந்தக் காலத்துப் பெரியவர்கள் செய்யும் தப்பு. நன்னா உங்களை உட்கார்த்தி வச்சு ஒரு காரியத்தைக் கண்ணிலே காட்டாமல் செய்து வந்தால், உங்க மனம் ஊர் சுற்றுவதில்தான் செல்லும். அத்தை போல நாலு பேர் இருந்தா அப்ப தான் நீங்க வழிக்கு வருவீர்கள்.

ராதா: போதும். மூடடா வாயை. இவன் ஊர் சுற்றணுமாம். நான் வீட்டில் அடைந்து கிடக்கணுமாம். நல்ல நியாயம்.

(அம்மா வருகிறாள்)

மணி: அத்தை நாளைக்கு வரதாகக் கடிதம் வந்திருக்கு.

அம்மா: அட ராமா, அவள் எதுக்கு இப்படி வந்து வந்து பிராணனை வாங்குகிறாள்?

மணி: என்தான் இப்படி உங்களுக்குக் கெட்ட எண்ணமோ?

அம்மா: அது சரி, நாளைக்கு எந்த வண்டியில் வருகிறாளாம்?

அத்தை: (வந்துகொண்டே) நாளைக்கில்லையடி. இதோ இப்பவே வந்துட்டேன்.

மணி: அத்தையா, வா வா. நீ எப்ப வரப்போரேன்னு தவியாத் தவிச்சுப் போய்ட்டேன்.

அத்தை: ஐயோ போகட்டும். நான் போன தடவை வந்தப்போ பல சாக்குப் போக்குச் சொல்லி ஊருக்குத் துரத்துவதில் நீதானே முன்னடி நின்ருய்? ஏதோ அடுத்த ஊருக்குக் காரியமா வந்தேன்.

ராதா: அதைக் கடிதத்தில் தான் எழுதியிருக்கிருயே.

அத்தை: நாளைக்கே போகணும்.

மணி: நாளைக்கே என் அத்தை போகணும்? இன்னும் இரண்டு நாள் இருந்துவிட்டுப் போயேன்.

அத்தை: எதுக்குடாப்பா இருக்கணும்? ஊரிலே கொள்ளை காரியம் கொட்டிக் கிடக்கு.

மணி: அத்தை, எனக்குக் கூட இந்த நகர வாழ்க்கை வெறுத்துப் போச்சு. பேசாமல் கொஞ்ச நாள் கிராமத்துக்குப் போக ஆசையாயிருக்கு. நாளைக்கு நானும் உன்னேடு கிளம்பப் போகிறேன். எத்தனை மணி வண்டிக்கு போகப் போகிருய்?

அத்தை: காலை 8 மணி வண்டிக்குத்தான் புறப்படணும்.

ராதா: நன்ருயிருக்குடா, ஸ்கூலைக் காற்றில் பறக்க விட்டு விடுவதா? ஊருக்குப் போகிருனம் ஊருக்கு!

அத்தை: நன்ருச் சொன்னேடி நீ. குழந்தை ஏதோ வர ஆசைப்படருன். போடான்னு சொல்லாமெ கெடுக்க வந்துட்டியே.

மணி: ஆமாம் அத்தை. நிர்மலமான நீர், பசுமையான நிலம், மாலையில் பட்சிகளின் சத்தம், சாலையோரத்தில் உயர்ந்த மரங்கள், காதுக்கு இன்பமான கிராமப் பாட்டு, கண்ணுக்கெட்டிய தூரம்..

ராதா: (இடை மறித்து) இரு இரு, உன் மூளையைக் கொஞ்சம் பார்க்கிறேன். ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு? என்னவோ கவிதை ரூபத்தில் ஆரம்பித்துவிட்டாயே.

அத்தை: எல்லாம் உன் போதனையால் அப்படி இருந்தான். இப்ப நாலும் படிச்சவனுகி விட்டான். கிராமத்து மேன்மை அவனுக்குத் தெரியாதா? மணி, அந்தக்கிராமத்துலே மட்டும் இரண்டு நாள் இருந்துட்டா திருப்பி இந்த நகரத்தக்கு வர நீ ஆசைப்படவே மாட்டே. கட்டி கட்டியான தயிர். இங்கே பயமாறுகிருளே அந்த நீர்மோர் அங்கே கிடையாது. தினம் பசுமையான காய்கறி. இலை நிறையப் போட்டுச் சாப்பிடலாம். இங்கே கறிகாயைக் கண்ணுலே பார்த்துச் சாப்பிடணும். அவ்வளவுதான் கிடைக்கும். நல்ல பசுமையான நெய். உடம்பு எப்படி ஆகும் தெரியுமா?

ராதா: என்னமோ பேசறயே. எல்லாவற்றையும் விட்டு விட்டு, பாதிப்போது நீ ஏன் இங்கே வந்து விடுகிருய்?

அத்தை: நன்னு கேட்டே. ஏதோ உங்க மேலே இருக்கிற ஆசை, வரேன். வரவேண்டாம்னு நின்னுடறேன்.

ராதா: அது சரி, போகும் போது இங்கிருந்து கறிகாயும், நெய்யுமா மூட்டை கட்டிண்டு போறயே. அது ஏனே?

மணி: மூடடி வாயை. ஏதோ நம்ம கையாலே கொடுத்து வாங்கிச் சாப்பிட்டால், அதில் ஒரு திருப்தி. உடம்பில் ஒட்டும். இல்லையா அத்தை? அவள் கிடக்கிருள் அத்தை, அல்பம்! சரி, நான் உன்னேடு நாளைக்கு வருகிறேன்.

அத்தை: ரொம்ப நல்லதுடா குழந்தை. இதோ பார் மணி, அம்மாவிடமிருந்து பணம் வாங்கிப் போய் நல்லதா இரண்டு டஜன் ஆரஞ்சுப்பழமும் இரண்டு டஜன் வாழைப் பழமும் வாங்கி வா. போனதும் பசித்தால் சாப்பிடலாம். அதோடு பிறந்த வீட்டிலிருந்து நான் வெறும் கையோடு போனல் யாராவது சிரிப்பார்களே.

மணி: ரொம்ப ரைட்.

அப்பா: (வந்துகொண்டே) அட ராஜம்மாவா, எப்ப வந்தே? நல்ல சமயத்திலே வந்தே.

அத்தை: என்னடா, இப்ப என்ன நல்ல சமயம்?

அப்பா: நாளைக்கு உறையூரில் கருட உற்சவம். அதைப் பார்க்க வந்து விட்டாய்.

அத்தை: மணி, அப்பன்னு நாம் நாளைக்கு மறுநாள் ஊருக்குப் போகலாம்.

மணி: எதுக்கு அத்தை, ஊரிலே கொள்ளை காரியம் கிடக்கச்சே இந்த அழையாத வீட்டிலே என்ன வேலை? நாளைக்கே கிளம்பு.

அத்தை: என்னமோ போயேன், இந்த மரியாதைகூட வெளியிலே கிடைப்பதில்லை. உன் அம்மா குணம் எல்லோருக்கும் இருந்தா அதுவே போதும்.

மணி: கிடக்கட்டும். நாளைக்கு நல்ல நாள். கிளம்பி விடு.

அத்தை: சீ, தறிதலை! என்னை ஊருக்கு அனுப்புவதில் உனக்கு என்ன அவ்வளவு திருப்திடா?

அப்பா: அவன் கிடக்கிருன் ராஜம், நீ உள்ளே போய்ச் சாப்பிடு.

2

சுப்பு: இதென்னடா மணி, விளக்கெண்ணெய் குடிச்சவன் மாதிரி இருக்கே?

ராமு: அப்படிச் சொல்லாதேடா, கணக்குப் பரீக்ஷை எழுதினவன் மாதிரி என்று சொல்லு.



சுப்பு: ஆமாண்டா, இந்த விளக் கெண்ணெயைக்கூடக் குடித்துவிட லாம். இந்தக் கணக்குப் பரீட்சை இருக்கே, அது மகா மோசம்.

ராமு: உனக்கென்னடா? நீ கணக்கு நன்னுப் போடுபவன். எங் களைப் போலவா? கணக்குப் பரீட்சைன்னு கேட்டாலே சப்த நாடியும் நின்னு போறது.

சுப்பு: நின்னு போறதன்னு சொல்லாதே. ஒடுங்கிப் போற துன்னு சொல்லு. நாளைக்கு ஒரு கணக்கு டெஸ்ட்.

சுப்பு: ஆமாண்டா, மறந்தே விட்டேனே.

மணி: அதுக்கு மட்டம் போட என்னென்னமோ முயற்சி செய் கிறேன். ஒன்றும் பயனில்லே. ஆத் திலே ஒரு பிசாசு வந்திருக்கிருள்.

சுப்பு: யாரடா அது, பிசாசு?

மணி: அதாண்டா, எங்க அத்தை! அவளோடு போய் கணக்கு டெஸ்ட்டுக்கு மட்டம் போட ஜோரான பிளான் போட் டேன். வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழி உடைந்து விட்டது. பாழாய்ப்போன அப்பா வந்து பிளானில் மண்ணைப் போட்டார். என் டெஸ்ட் மார்க்கை வாத்தியார் வீட்டிற்கு அனுப்பப் போகிருராம்.

ராமு: ஆமாண்டா, எனக்கும் பயமாயிருக்கு. போகாமலிருக்க ஏதாவது வழி செய்ய வேண் டும்டா...எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

(காதோடு சொல்கிருன்)

மணி: ரைட், அதைச் செய்து பார்க்கலாம்.

சுப்பு: ஐயோ, நான் அந்த வழிக்கு வரமாட்டேன்.

ராமு: நீ கெட்டிக்காரன். நீ வரவேண்டாம் மணி, நாம் முயற் சிக்கலாம்.

3

அன்று இரவு

மணி: (அலறுகிறான்) ஆ.. அப்பப்பா..போச்சே.

அப்பா: என்னடா கையிலே என்ன?

மணி: ச்..ஆ..வலிக்கிறதே.. அப்பா...தே..தே..

அம்மா: என்னடா! என்ன, தேளா?

மணி: ஆமாம்..ஆ...

அத்தை: எங்கேடா?

மணி: கையிலே.

அத்தை: கையிலேயா? கீழே போடேண்டா!

அப்பா: நீ ஒண்ணு. கையிலே கொட்டிவிட்டதாம்.

அத்தை: அச்சச்சோ, என்ன தேள்? கருந்தேளா, செந்தேளா?

மணி: ஐயோ, நான் பார்க்கலையே.

அத்தை: எப்படிப் போச்சு? வலப்புறமா, இடப்புறமா? மேற்கா, கிழக்கா?

மணி: எனக்குத் தெரியாதே.

அத்தை: சின்னதா, பெரிசா?

அம்மா: இதெல்லாம் என்ன கேள்வி? முதலில் கொட்டின இடத்துக்கு மருந்து போடாமல்!

அத்தை: நீ சும்மா இருடீ. மந்திரிக்க இதெல்லாம் தெரியணும்.

ராதா: உனக்கு மந்திரிக்கத் தெரியுமா?

அத்தை: பேஷாக. அடேய் மணி, கையைக் கொண்டாடா. இது தேள் கடியில்லையடா.

மணி: ஆ. வலிக்கிறதே.

அத்தை: தேள் கடி வீங்கி விடும்டா. தேளைப் பார்த்தாயா?

மணி: இல்லை..அத்தை.... தே..தே...

அம்மா: என்னடா பேத்தறே?

மணி: தே..தே...

அத்தை: தேரையா?

மணி: இல்லை.

அம்மா: பூரான் கடித்ததா?

மணி: ஆமாம் அதான், அதான்!

அத்தை: சரி, இரு மந்திரிக்கிறேன். அடி விசாலம், நாளை முழுவதும் அவனைப் பட்டினி போடணும். அப்பதான் விஷம் இறங்கும். பேதிக்குக் கொடுத்து விடு. விஷம் வெளியிலே வரணும். காபி கொடுக்காதே. வெறும் கஞ்சிதான்.

மணி: அட கடவுளே!

அத்தை: கடவுளே என்னடா? விஷம் இறங்காவிட்டால் உடம்பெல்லாம் தடித்துவிடும்.

4

(மறுநாள்)

ராமு: டேய், நாடகம் நடித்தாயா?

மணி: அதை ஏன் கேக்கறே? நாடகம் நடத்தியதற்குத் தண்டனை நேற்று பேதிக்குச் சாப்பிட்டேன். ஆகாரம் கஞ்சி, காபி கிடைத்தது. உன் சமாசாரம் என்ன?

ராமு: டாக்டரின் கசப்பு மருந்து. கஞ்சிதான் ஆகாரம். ஏதோ ஒன்று. கணக்கு டெஸ்டுக்கு டிமிக்கு கொடுத்துவிட்டோம். அதோ, சோமு வரான். ஏண்டா சோமு, கணக்கு டெஸ்ட் சுலபமாடா?

சோமு: வெரி ஸாரி, நேற்று டெஸ்ட் நடக்கவில்லை. கணக்கு வாத்தியாரைத் தேள் கொட்டி விட்டதாம். நேற்று வரவில்லை. இன்றுதான் டெஸ்ட்.

மணி: அட கடவுளே!

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

A. 332. அம்ருதீன், S. K., திருவாரூர். 333. ஆனந்தம், A. L., அலந்தலை. 334. அம்மாளு, S., திருமைலாடி. 335. ஆறுமுகம், V., கவிச்சிப்பாளையம். 336. அமீர்பாஷா, A., பாலாபட்டி. 337. அவீஸ்; O.H., கற்பிட்டி. 338. அழகிரிசாமி R., சென்னை - 18. 339. ஆறுமுகம் S. N., கம்பளை. 340. அனந்தராமன் P. R., கும்பகோணம். 341. அனந்தராமன் P. N., பாலாஜூர். 342. ஆறுமுகம் C., கல்லிடைக்குறிச்சி. 343. அருணசலம், P. L., மாயவரம். 344. ஆயியப்பன் G., குருசாமி, ரத்தினம், மதுரை. 345. அனந்தகிருஷ்ணன், பம்பாய். 346. அப்பாதுரை M., திருச்சி. 347. அர்த்தநாரி N. C., கிருஷ்ணகிரி. 348. அப்துல் ஹாசன் S. M., இலங்கை. 349. அநுராதா, காரைக்கால். 350. அலமேலு K. R., சென்னை-5. 351. அழகம்மை C. T., சிறுவயல். 352. அங்கப்பன் T.G., பரமசிவம், திருச்செங்கோடு. 353. அலாவுதீன், K. M. A., (ஊர் எழுதவில்லை). 354. அனந்தராமன் K. S., பங்களூர் 1. 355. அனந்தசயனம் C. V., சென்னை - 7. 356. அப்துல் ஹமீது P. P. S., கீழக்கரை. 357.. அப்துல் ஹகீம் S., பேட்டை. 358. அமிர்தவல்லி., சென்னை 4. 359. அருணாசந்தி E., பழனி. 360. ஆறுமுகம் R., எட்டயபுரம். 361. அகோரம் S., சண்முகநாதபுரம். 362. அமிர்தபாண்டியன் S., விருதுநகர். 363. ஆறுமுகம் D., ராஜபாளையம். 364. அப்பராசு S., தில்லையாடி. 365. அப்பூதி M., அய்யம்பேட்டை. 366. அரவிந்தன் G., நாகூர். 367. அநசூயா N., குடியாத்தம். 368. அப்துல் வஹாப், T. M., கோயமுத்தூர். 369. ஆறுமுகம் R., எட்டயபுரம். 370. அப்துல் காதர் A. S. M., ஈழம். 371. அப்துல்ஜாவர் A., தஞ்சாவூர். 372. அருண P. N., சென்னை-20. 373. ஆத்மானந்தம் A. K., தர்மபுரி. 374. அமாநுல்லா O. S. N., கீழக்கரை. 375. ஆதிநாராயணன் P., வள்ளியூர். 376. அநுராதா, சிவகுமாரன், லலிதா, ராதா, நிருபமா,

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மே, 1-'54 கூபன் செ:

சென்னை 4. 377. ஆறுமுகம் M., வேலாயுதம்பாளையம். 378. அர்த்தநாரி K., குருசாமி பாளையம். 379. அப்துல் ரஹ்மான் K. A., கணியூர். 380. வைத்திநாதன் B., சோழவந்தான். 381. அம்பாளம் P. T., சாத்தூர். 382. அன்சருல்லா A. M., பதுளை. 383. அடைகாப்பான், M. R., கழனிவயல். 384. அமிர்தலிங்கம் R., எளம்பிள்ளை. 385. அப்பாசாமி I., இளையரசமன்டல். 386. அநுராதா B., கல்கத்தா 26. 387. அமிஸான் G., பாலாபட்டி. 388. அனந்தா A., திருச்சி. 389. அலமேலு M., சீதாலட்சுமி., சென்னை 13. 390. அமீர் அலி, M. S., யாழ்ப்பாணம். 391. அஹமதீன் M. P. S., நாகூர். 392. அமிர்தலால் T., மதுரை. 393. அப்துல் காதர் M. S., யாழ்ப்பாணம். 394. அனந்தராமன் P. V., திருச்சி. 395. அப்துல்லா ஷரீப் K., ஆர்க்காடு. 396. ஆனந்த மஹேஸ்வரி M,, இலங்கை. 397. ஆனந்தா S. M., ஹூமைல், இம்பால். 398. அழகப்பன் N., முத்துப்பட்டினம். 399. அனந்தகிருஷ்ணன், தம்மாபட்டி. 400. அலமேலு R., சென்னை 5.

B. 289. பாலகிருஷ்ணன், பாலாஜூர். 290. பாலர் சங்கம், சென்னிமலை. 291. பழனிசாமி, ஏலாசங்கம், சென்னிமலை. 292. பாபு, சென்னை-4. 293. பாலசந்தர், ஜாம்ஷட்பூர். 294. பாக்கியலட்சுமி, துறையூர். 295. பால்ராஜ், (ஊர் எழுதவில்லை.) 296. பத்ரிநாராயணன், சென்னை-5. 297. பரதராவ் R., சென்னை-14. 298 C. H. பாலகிருஷ்ணன், கொளிஞ்சிவாடி, தாராபுரம். 299. பாஸ்கரன் P. S., திருச்சி. 300. பலராமன் S., பங்களூர். 301. பாலமாணிக்கம் W. B., உடுமலைப்பேட்டை. 302. பாஜிராவ் K., லட்சுமி S., சென்னை-4. 303. பாலகிருஷ்ணன் R., சென்னை-1. 304. பாஸ்கரன் K., ஸ்ரீதரன் K., ஜயங்கொண்டம், திருச்சி. 305. பாலசுப்பிரமணியன் D., வளவனூர். 306. புவனராஜா, புஷ்பராணி, சற்குண ராஜா, இலங்கை.307. பாலசண்டாயுதம், R., திருவாரூர். 308. பிரமநாயகம், கல்லிடைக்குறிச்சி. 309. பாலன் C.V., மதுரை. 310. பாலசுப்பிரமணியன் S., சென்னை-4. 311. பானுமதி S., டோமல்குடா.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்ய வேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்.]

எம். எஸ். மகீபூப்கான்,
கீழக்கரை. வயது, 12.

உலகத்திலே மிகவும் உயரத்தில் உள்ள ஏரி எது?

உலகத்திலுள்ள ஏரிகளில் மிகவும் உயரத்தில் இருப்பது இமய மலையில் எவரெஸ்டு சிகரத்துக்கு அருகில் உள்ள ஓர் ஏரி. ஆனால், இது மிகச் சிறிய ஏரி.

பெரிய ஏரிகளில் மிகவும் உயரத்தில் இருப்பது தென் அமெரிக்காவில் உள்ள டிட்டிகாக்கா ஏரி. இது பொலிவியா, பெரு என்னும் இரண்டு நாடுகளுக்கு இடையே, ஆண்டிஸ் மலைத்தொடரில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 12,200 அடி உயரத்தில் இருக்கிறது.

டி. முருகதாஸ், திருவள்ளூர்.

சென்டிகிரேட் தெர்மாமீட்டரில் பனிக்கட்டியின் உருகு நிலை 0 டிகிரி என்று இருக்கிறது. பாரென்ஹைட் தெர்மாமீட்டரில் அது 32 டிகிரி என்று இருக்கிறதே. ஏன்?

பாரென்ஹைட் (Fahrenheit) என்பவர் முதலில் அமைத்த தெர்மாமீட்டரில் இப்படிக் குறிக்கவில்லை. தண்ணீரின் 'சாதாரண' வெப்பநிலையை அவர் 0 டிகிரி என்று குறித்தார். உடலின் வெப்ப நிலையை இரத்தச் சூட்டை (Blood heat) 90 டிகிரி என்று குறித்தார். பனிக்கட்டியும் உப்புமாகக் கலந்த கலவையின் வெப்ப நிலையை அவர் 90 டிகிரி என்று குறித்தார். ஆகவே அவருடைய தெர்மாமீட்டரில் (—90 முதல் +90 வரையில்) 180 டிகிரிக்கள் இருந்தன.

பின்பு அவர் தம்முடைய நண்பரான ரேமர் (Roemer) என்னும் வானசாஸ்திரியின் சொற்படி, தம்முடைய அளவுத் திட்டத்தை மாற்றினர். பனிக்கட்டி உப்புக் கலவையின் வெப்பநிலையை 0 டிகிரி என்றும் உடலின் வெப்பநிலையை 24 டிகிரி என்றும் குறித்தார். இந்த அளவுத் திட்டத்தின்படி பனிக்கட்டியின் உருகு நிலை 8 டிகிரி ஆக இருந்தது.

பிறகு, இந்த 8 டிகிரிகளில் ஒவ்வொன்றையும் நாலு சமபாகங்களாகப் பகுத்தார். மொத்தம் 32 பாகங்கள் ஆயின. பின்பு, இந்தப் பாகங்கள் ஒவ்வொன்றையும் ஒரு டிகிரி என்று வைத்துக் கொண்டார். ஆதலால், பனிக்கட்டியின் உருகுநிலை 32 டிகிரி என்று ஆயிற்று. இதுவே செண்டிகிரேட் தெர்மாமீட்டரில் 0 டிகிரி என்று வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்படி, அவர் குறித்த இரத்தச் சூடு 96 டிகிரி ஆயிற்று. தண்ணீரின் கொதி நிலை 212 டிகிரி ஆக இருந்தது. இதுவே செண்டிகிரேட் தெர்மாமீட்டரில் 100 டிகிரி என்று வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

K. கௌசல்யா, பம்பாய், 19. வயது 11.

நம்முடைய நெஞ்சு நிமிஷத்துக்கு எத்தனை தடவை அடிக்கிறது?

மனிதர்களின் நெஞ்சு சாதாரணமாக நிமிஷத்துக்கு 68 தடவை முதல் 72 தடவை வரை அடிக்கிறது. அல்லது துடிக்கிறது. வேகமாக ஓடும்போது, நெஞ்சுத் துடிப்பு இன்னும் வேகமாக நிகழ்கிறது. ஜுரம் வந்தபோதும், நெஞ்சு விரைவாகத் துடிக்கிறது. பிறந்த குழந்தையின் நெஞ்சு நிமிஷத்துக்கு 135 தடவையும்; ஒரு வயதுக் குழந்தையின் நெஞ்சு 110 தடவையும்; ஆறுவயதில் 96 தடவையும்; பதினாறு வயதில் சுமார் 80 தடவையும்; ஐம்பது வயதுக்குமேல் சுமார் 60 தடவையும் நெஞ்சு துடிக்கிறது.

சிறிய பிராணிகளின் நெஞ்சு வெகு வேகமாகத் துடிக்கிறது. பெரிய நெஞ்சுள்ள பிராணிகளின் நெஞ்சு மெதுவாகத் துடிக்கிறது. உதாரணமாக, தேன் சிட்டு (Sun-bird) என்னும் பறவையின் நெஞ்சு நிமிஷத்துக்கு 1000 தடவை துடிக்கிறது. குருவியின் நெஞ்சு நிமிஷத்துக்கு 800 தடவையும், சுண்டெலியின் நெஞ்சு சுமார் 500 தடவையும், முயலின் நெஞ்சு சுமார் 150 தடவையும், குதிரையின் நெஞ்சு நிமிஷத்துக்கு 40 தடவையும், திமிங்கிலத்தின் நெஞ்சு நிமிஷத்துக்கு 35 தடவையும் துடிக்கின்றன.

டி. பார்த்தசாரதி, ஸ்ரீரங்கம்.

அலுமினியத்தை விட லேசான உலோகம் ஏதாவது இருக்கிறதா?

அலுமினியத்தை விட லேசான உலோகங்கள் அரை டஜனுக்கு மேல் இருக்கின்றன.

பொட்டாசியம், சோடியம், கால்சியம், மக்னீசியம், ஸ்டிரான்ஷியம், லிதியம் என்னும் உலோகங்கள் எல்லாம் அலிமினியத்தை விட லேசானவை.

இவைகளில் சில தண்ணீரை விடக்கூட லேசானவை. அவை தண்ணீரில் மிதக்கும்.

S. கருப்பையா, கீழப்புலிவார் வீதி, திருச்சி. வயது 12.

உலகத்திலே மிகவும் தாழ்ந்த இடத்திலுள்ள ஏரி எது?

பாலஸ்தீனத்திலே உள்ள 'இறந்த ஏரி' (Dead Sea) தான் மிகவும் தாழ்ந்த இடத்திலுள்ள ஏரி. அதன் நீர் மட்டம் கடலின் நீர் மட்டத்துக்குச் சுமார் 1300 அடி கீழே இருக்கிறது.

விஜயன், 45, நரசிங்கபுரம் தெரு, துகை, சேலம்.

ஞாபக மறதி ஏற்படுவானேன்? ஞாபக சக்தி உள்ளவனாக இருக்க என்ன செய்யவேண்டும்?

உடல் தளர்ச்சி ஏற்படுவது போலவே, ஞாபக மறதியும் ஏற்படுகிறது. உடலில் பயிற்சி அளிக்கப்படாத தசையானது வலிமை குன்றி, எளிதில் சோர்ந்து போகிறது. அதைக் களைப்பு என்று சொல்லுகிறோம். அதைப் போலவே, பயிற்சி அளிக்கப் படாத ஞாபக சக்தியும் வலி குன்றிப் போகிறது. அதையே மறதி என்று சொல்லுகிறோம்.

உடற்பயிற்சியால் உடலின் தசைகளைப் பலமுள்ளவைகளாகச் செய்ய முடியும், அதுபோல, ஞாபகப் பயிற்சியால் ஞாபக சக்தியையும் பலமுள்ளதாகச் செய்ய முடியும். இதுவே ஞாபக சக்தியை வளர்க்கும் முறை.

உடலில் பலமும் நல்ல ஞாபக சக்தியும் ஒன்றை ஒன்று பொருத்தவை அல்ல. அதாவது நல்ல பலசாலி ஞாபக சக்தி குறைந்தவனாக இருக்கலாம். உடல் வலி குறைந்தவன் நல்ல ஞாபக சக்தி உடையவனாக இருக்கலாம்.

விஜயன், சேலம்.

கக்குவான் எப்படி உண்டாகிறது? அதற்குச் சிறந்த வைத்தியம் யாது?

கக்குவானுக்குக் 'கக்குவாய் இருமல்' என்றும் மற்றொரு பெயர் உண்டு. இது தொத்து நோய். இது உண்டாவதற்கு 'வைரஸ்' என்ற நுண்ணிய கிருமியே காரணம் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கிருமியைச் சாதாரண மைக்கிரோஸ்கோப்பினாலும் காண முடியாது. ஆதலால், இதன் தோற்றம் எப்படி இருக்கும் என்று இன்னும் தெரியவில்லை.

இப்பொது தெரிந்துள்ள மருந்துகளில் 'குளோரோமைசிட்டின்' என்பதே சிறந்த மருந்து. ஆனால் அதைத் தக்க வைத்தியர்கள் கொடுக்கும்படி சொன்னால் தான் கொடுக்கலாம்; இல்லா விட்டால் கொடுக்கலாகாது.

விஜயன், சேலம்.

இரவில் படுத்துத் தூங்கும் போது நிமிர்ந்து நேராகப் படுப்பது நல்லதா? ஒருக்களித்துப் படுப்பது நல்லதா?

இதைப் பற்றிச் சிறிதும் கவலைப் பட வேண்டியதே இல்லை. படுக்கும்போது எப்படிப் படுத்தால், சௌகரியமாக இருக்கிறதோ அப்படிப் படுத்துக்கொள்வதே நல்லது.

படுத்துத் தூங்கியபின், ஒவ்வொருவனும் தன்னையறியாமலே பல முறை திரும்பிப் புரண்டு படுத்துக் கொள்கிறான். இது தனக்கு வேண்டியபடி உடல் தானாகவே செய்யும் செயல்.

டி. பார்த்தசாரதி, ஸ்ரீரங்கம்.

ஒளி என்ன வேகத்தில் பிரயாணம் செய்கிறது?

ஒளியானது நொடிக்குச் சுமார் லக்ஷத்து எண்பத்தாறாயிரம் மைல் வேகத்தில் செல்லுகிறது என்று இக்காலத்து விஞ்ஞானிகள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆண்டெர்ஸன் என்பவர் அதன் வேகத்தை மிகவும் திருத்தமாக நொடிக்கு 186,264 மைல் என்று கண்டுபிடித்திருக்கிறார்!

கடவுளுக்குக் கடிதம்



'சௌரஸ்'

செங்கழனி ஓர் ஏழைக் குடியானவன். அந்த வருஷம் மழையில்லாமல் பயிர் தீய்ந்துவிட்டபடியால் அவன் நிலைமை மிக மோசமாகிவிட்டது. இரண்டு நாள் அவனும் அவன் குடும்பமும் உணவில்லாமல் கழிக்க நேரிட்டது. ஊரில் ஒரு சல்லிக் காசுகூடக் கடன் வாங்க முடியவில்லை.

"எதனாச்சியும் செய்யக் கூடாதா? சும்மாக் குந்திக்கிட்டிருந்தா? குழந்தை வவுத்தைப் பசிக்குதுன்னு அழுவுதே, காது கேக்கல்லே உனக்கு?" என்று அவன் மனைவி கூச்சலிட்டாள்.

"நான் என்ன பண்றது? கடவுள்தான் காப்பாத்தணும்" என்றான் செங்கழனி.

"நாம பேசறது தான் கடவுளுக்குக் கேக்கலே போலிருக்கே. அதுவும் செவிடு போலிருக்கு!" என்றாள் அவள்.

செங்கழனி ஒன்றும் பேசவில்லை.

மூலையில் வீட்டுக் கணக்குப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான் மருதை. அவன் செங்கழனியின் முதல் பிள்ளை. ஒன்பது வயசாச்சு. மூன்று மைல் தொலைவிலுள்ள தாலுக்கா இலவசப் பள்ளிக் கூடத்தில் ஐந்தாவது வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான்.

"கடவுள் செவிடாப் போயிட்டாருன்னா கடிதாசு எழுதறது தானே?" என்று மருதை குறுக்கிட்டான்.

இதைக் கேட்டு அவன் தாய் தந்தையர் சிரித்தனர்.

'நான் எது சொன்னாலும் இவர்களுக்கு எப்பொழுதும் சிரிப்புத் தான்' என்று மருதைக்குக் கோபமாக வந்தது.

அன்று அவன் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபொழுது, தன் நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு தாளைக் கிழித்து, கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினான்:

"அன்புள்ள சாமி, கடவுளே! உங்களிடம் எல்லாமிருக்கு. எங்களுக்கு மட்டுமில்லை. உலகத்துக்கே அதிகாரி நீங்கள் என்று 'எட்மாஸ்டர்' சொல்லுகிறார். என்னிடம் கருணை வைத்து எனக்குப் பத்து ரூபாய் அனுப்புங்கள். வீட்டில் பணமில்லை. அதனால் சாப்பாடில்லை. இரண்டு நாளா நான், அப்பாரு, அம்மா, தங்கச்சி எல்லாரும் பட்டினி. பசிக்கிறது. அம்மாவைச் சோறு போடு என்றால் அழுகிறாள். பிறகு அப்பாவுடன் சண்டை போடு

கிருள. சீக்கிரம் அனுப்புங்கள்! மருதை, செங்கழனி பிள்ளை..கிராமம்,..தாலுக்கா என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பவும். இப்படிக்கு அன்புள்ள, மருதை.''

இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தபாலாபீசுக்குச் சென்ருன் மருதை.

''ஒரு கடிதம் அனுப்பவேண்டும். என்ன செலவாகும்?'' என்று கேட்டான்.

போஸ்ட் மாஸ்டர், ''யாருக்கு?'' என்று கேட்டார்.

''கடவுளுக்கு.''

போஸ்ட்மாஸ்டர் வேடிக்கையாக, ''அவர் விலாசம் தெரி

யுமா, குழந்தை?" என்று கேட்டார்.

"தெரியும். 'கடவுள், சொர்க்கம்' என்று போட்டால் போய் விடும்" என்றான் மருதை.

"தபால் இலாகாமேல் உனக்கு ரொம்ப நம்பிக்கை போலிருக்கு! என்னிடம் கடிதத்தைக் கொடு. கடவுளுக்குப் போகும் கடிதங்களுக்குத் தபால் தலை வேறு வேணுமா? அவசியமில்லை" என்று கடிதத்தை வாங்கிப் படித்தார். சிரிப்புடன் இரக்கமும் வந்தது அவருக்கு.

"மறக்காமல் அனுப்புங்கோ!" என்று கேட்டுக்கொண்டு பள்ளிக்கு ஓடினான் மருதை.

அந்த ஜில்லா கலெக்டர் மிகவும் நல்லவர். தயாள குணம் உடையவர். இது போஸ்ட்மாஸ்டருக்குத் தெரியும். மருதையின் கடிதத்தை ஒரு கவரில் போட்டு அதைக் கலெக்டருக்கு அனுப்பினார்.

கலெக்டரின் காரியதரிசி அந்தக் கடிதத்தை ஆபீஸில் எல்லாருக்கும் காட்டினார். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். கலெக்டர் கூட, மருதையை ஒன்றும் தெரியாத வெகுளிப் பிள்ளையாய் இருப்பானோ என்று எண்ணிச் சிரித்தார். கிராம முன்சீப் மூலம் மருதையின் குடும்ப நிலை உண்மைதான் என்பதை அவர் தெரிந்துகொண்டார்.

"சரி. இந்தப் பையனுக்கு ஐந்து ரூபாய் அனுப்பு" என்று கலெக்டர் உத்தரவிட்டார்.

சில நாள் கழித்து மருதை கடவுளுக்கு எழுதிய இரண்டாவது கடிதம் கலெக்டரிடம் வந்து சேர்ந்தது.

"அன்புள்ள சாமி, நீங்கள் அனுப்பிய பணத்துக்கு மிக மிக வந்தனம். ஆனால் மறுபடியும் எழுதவேண்டியிருக்கிறது. நீங்கள் எனக்கு உதவி செய்ய இஷ்டப்பட்டால் தயவு செய்து பணத்தை நேராக எனக்கு அனுப்புங்கள். ஜில்லா கலெக்டர் மூலமாக மட்டும் அனுப்பாதீர்கள். ஏனென்றால் போன தரம் உங்கள் பணத்தில் பாதியை அவரே வைத்துக் கொண்டு விட்டார் என்று நினைக்கிறேன். எனக்கு ஐந்து ரூபாய் தான் வந்து சேர்ந்தது. பாக்கி ஐந்தையும் அனுப்பினால் மேலும் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். இப்படிக்கு, உங்கள் அன்புள்ள மருதை."

கலெக்டர் யோசித்தார். மறுபடியும் ஐந்து ரூபாய் அனுப்ப உத்தரவு போட்டுவிட்டுப் பின் கண்ட கடிதம் ஒன்று எழுதினார்:

"அன்புள்ள மருதை, முன்பு கலெக்டரை நான் ஐந்து ரூபாய் தான் அனுப்பச் சொன்னேன். இப்பொழுது மறுபடியும் ஐந்து ரூபாய் அனுப்பச் சொல்லியிருக்கிறேன். நான் கடவுளாயிருந்தாலும் என்னால் உனக்கு நேராகப் பணம் அனுப்ப முடியாது. கலெக்டர் போன்ற யாராவது ஒரு மனிதர் மூலம்தான் அனுப்ப முடியும். நாளைக்கு உன் மூலமே மேலும் சில ஏழைகளுக்கு உபகாரம் செய்யவேண்டி வந்தாலும் வரலாம். அது நீ முன்னுக்கு வருவதைப் பொறுத்தது. அதற்குத் தக்கபடி நடந்துகொள்.

இப்படிக்கு,

கடவுள்."

பேச்சாளர்

தமிழ்க்குமரன்

பிரபல பேச்சாளர் பேச்சிமுத்து அவர்களை, தளவாம்புரம் வட்டாரத்தில் தெரியாதவர்களே கிடையாது. சிறந்த பேச்சாளி.

"கடவுள் இருக்கிறாரா? அவர் இருக்கிறார் என்று சொன்னால் அவரை எனக்குக் கொஞ்சம் காட்டுங்கள், பார்ப்போம்! அப்படி அவர் இருந்தால் ஏழை - பணக்காரர் என்று மக்களைப் பாகுபடுத்திப் பிரித்திருப்பது நீதியா? அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு அவசியமா? உண்மையில் கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவரை நான் இகழ்ந்து பேசுவதைக் கண்டு என் நாவைத் துண்டித்திருக்கலாமே, அவர்!" எங்கே போனாலும் இவைதான் பேச்சாளர் பேச்சிமுத்துவின் பேச்சு. எந்தக் கூட்டத்துக்குச் சென்றாலும் தெய்வ நிந்தனைதான் அவர் வேலை.

ஒரு நாள் பேச்சாளர் பேச்சிமுத்து தனக்கு வந்த கடிதங்களைப் படித்துக்கொண்டிருந்தார். முதல் கடிதத்தைப் படிக்கும்போதே அவர் மனம் பரவசக் கடலில் மூழ்கியது. காரணம்? தண்டையார் குளம் பண்ணையார் அவர்கள் பேச்சிமுத்துவுக்குக் கடிதம் எழுதியிருந்ததுதான்.

"அன்புள்ள பேச்சாளர் பேச்சிமுத்துவுக்கு, நீங்கள் பேசுவதில் சிறந்தவராய் இருப்பதால் அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நான் நடத்தவிருக்கும் கூட்டத்தில் பேசுவதற்குத் தவறாமல் வரவும்"—இப்படிக்கு, சோமுப்பிள்ளை.

இதைப் படித்ததும், துள்ளிக் குதித்தார் பேச்சிமுத்து. 'நம் பேச்சைக் கண்டு பண்ணையாரே மயங்குகிறார் என்றால் நம்முடைய பேச்சுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது' என்று எண்ணினார்.

குறித்த நாளில் பேச்சிமுத்து தண்டையார் குளம் போய்ச் சேர்ந்தார். அன்று மாலை மூன்று மணி இருக்கும். பண்ணையார் சோமுப்பிள்ளையும் பேச்சாளர் பேச்சிமுத்துவும் தண்டையார்குளம் பாழடைந்த கோவில் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். கல்லும் மண்ணும் அங்கே குவிந்து கிடந்தன.

"கூட்டத்திற்கு இங்கேதானே ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?" என்றார் பேச்சிமுத்து.

"ஆமாம்" என்றார் பண்ணையார்.

"நீங்கள் இவ்வளவு தூரம் திருந்தி விடுவீர்கள் என்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. என் போன்ற பேச்சாளர்களை ஆதரிக்க முன் வந்ததே பெரிய காரியம்" என்றார் பேச்சிமுத்து.

"இதோ இந்தச் சிவன் கோவில் இடிந்து பாழடைந்து விட்டது. இதைப் புதுப்பித்துக் கட்டித் தரவேண்டும் என்று ஊரார் என்னிடம் முறையிட்டார்கள். கோவில் கட்ட நிதி வசதி இல்லாததால் உடனே

உங்களைப் பேச அழைத்தேன்'' என்று நிறுத்தினார் பண்ணையார்.

''கோவில் செப்பனிடுவதற்கும், என் பிரசங்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?''

''இருக்கிறது-அந்த உதவி உங்களால்தான் கிடைக்கும்.''

பேச்சாளர் பேச்சிமுத்து பேந்தப் பேந்த விழித்தார். பிறகு சமாளித்துக் கொண்டு, ''கோவில் தேவை இல்லை. தெய்வமும் தேவை இல்லை என்று பேசட்டுமா?'' என்றார்.

''நீர் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசும். நான் நினைத்த காரியம் கைகூட வேண்டியதுதான் எனக்கு முக்கியம்'' என்றார் பண்ணையார்.

''இது என்ன பிரமாதம். ஆனால் என் பேச்சை இவர்கள் ஒரு தடவை கேட்டால் போதுமா?''

''உமக்கு இன்னுமா விளங்கவில்லை? இந்த ஊர்க்காரர்களுக்கு ஒரு தடவை உங்கப் பேச்சைக் கேட்டால் போதும். சரமாரியாகக் கல்லும் மண்ணும் வந்து விழுந்துவிடும். அப்படி வந்து விழுகிற கல்லையும் மண்ணையும் கொண்டே, இந்தக் கோயில் திருப்பணியைப் பாதியாவது முடித்துவிடலாம் என்று கருதியே உம்மைப் பிரசங்கத்திற்கு அழைத்தேன். எப்படி என் யோசனை?'' என்று சிரித்தார் பண்ணையார்.

அப்போது பார்க்க வேண்டுமே பேச்சாளர் பேச்சிமுத்துவின் பேயறைந்த முகத்தை! அவர் பேசாமலேயே திரும்பினார் என்று சொல்லவும் வேண்டுமா?



எங்கள் பகுதி

* களங்கம்

சந்திரனிடம் களங்கம் ஏற்படுவது போல, கண்ணனிடமும் குறைகள் ஏற்படுவது என்னால் பொறுக்க முடியாதது. கண்ணனிடம் கொண்ட கரையற்ற காதலால் சிறு குறையையும் சீறி எதிர்க்கிறது என் உள்ளம். இனிமை இருக்கட்டும். கசப்பைக் காணவாருங்கள். திரு கே.எஸ்.பி. மாயாஜாலத்தை மனக்குழப்பத்துடன் எழுதி எங்களுக்களித்தது மாயாஜாலமே. சிறு குறைகளாக இரு குற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. பொருத்தமற்ற உவமை, பள்ளிரிசல்டோடு வித்தைக்காரன் வேடிக்கையை இணைப்பது. பயனேதுமின்றிப் பர்பொடி ஏஜெண்டு வியாபார ரகசியத்தை ஒரு சிறுவனிடம் வெளியிட்டான் என்பது வேடிக்கை....

அடுத்தது அறிவும் நீதியும் அளிக்கும் மந்திரமோதிரம். மந்திர மோதிரத்தை மதியாது உழைக்கும் மதி சிறந்த நிதிதான். ஆனால் அமைவது கடினமே. கலைமகள் சிறுவர் பகுதியில் இது முன்பே வந்த கதை. மற்றொரு திருட்டுக் கதை பேராசை. இவைதான் கசப்பு.

ஆனால் உள்ளத்தைத் தொட்டு, அடுத்த இதழுக்கு ஏங்க வைக்கும் சரித்திரக் கதை சந்திரகிரிக் கோட்டை அற்புதம். துணுக்குகள் சுவை மிக்க அல்வாத் துண்டுகள். திருடர்கள் நம்மைத் திகைத்துச் சிரிக்க வைக்கிறார்கள். கேட்டீர்களா பகுதியில் ஆதிசங்கரர் பீடம் முதல் ஐ. நா. சபைவரை அகில உலகும் அறிவிப்பது ஆனந்தம் தருகிறது. முகம்மது மக்கீனின் விமரிசனம் மிக்க முதல் தரம். பாசம் என்ற கதை பலே ஜோர்.

கண்ணன் ஆசிரியர் இரண்டு இரக்கமற்ற செயலைச் செய்கிறார். பாலகுமாரையும் பிச்சுவையும் பிரிப்பது ஒன்று. கண்ணனை மாதம் மும்முறைகூட வெளிவர விட மறுப்பது இரண்டு.

களங்கமேற்படினும் சந்திரன் ஒளி மங்குமா? மாண்புதான் குறையுமா?

—S. பாலதண்டபாணி, ராசீபுரம்

*** கமல மலர்க் கண்ணன்**

1-4-'54 இதழ் அட்டைப் படம் சுமார்தான்.

---

* இந்த இரண்டு கடிதங்களுக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

'மந்திர மோதிரம்' நல்ல நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுவாரஸ்யமான கதை. ஆனால் முதலில் இதை முன்பே ஒருவர் எழுதியிருக்கிறாரே!

'பேராசை' என்ற கதை சுத்த மோசம். கதையை எடுத்துச் சொல்லும் 'பாணி' நன்றாக இல்லை. மேலும் அது ஒரு திருட்டுக் கதை. முன்பே இது ஆனந்த விகடனில் வந்தது.

'பாசம்' என்ற கதை நம் மனத்தைத் தொடுகிறது..

குருட்டாம் போக்கில் துப்புகளைத் துலக்கிய 'பிச்சு'வின் பிரிவு எங்களுக்கு வேதனையைத் தருகிறது. 'ஆர்வி' அவர்கள் அதே மாதிரி வேறு ஒரு கதையை எழுதி வரக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

'பலநாள் திருடன்' என்ற கதை வேடிக்கையாய் இருக்கிறது.

'மாயா ஜாலம்' என்ற கதையை விட அந்தக் கதைக்கு வரைந்திருக்கும் 'சுப்பு'வின் சித்திரமே அழகாக இருக்கிறது.

'பாலகுமாரை' நன்கு முடித்திருக்கிறார் 'ஆர்வி'. 'சந்திரகிரிக் கோட்டை' ட மிக நன்றாக இருக்கிறது..

குழந்தைகளின் கண்ணுக்கும் கருத்துக்கும் என்றென்றும் 'கண்ணன்' விருந்தளித்து, கள்ளிகளுக்கிடையில் தோன்றும் கமலமலரென விளங்குவான் என நம்புகிறேன்.

—R. M. கிருஷ்ணராஜன்,
திருப்பத்தூர். (வ. ஆ.)

கருத்தைக் கவரும் கண்ணன்

1-4-'54 இதழ்க் கண்ணன் மேலட்டையே மனத்தைக் கவரும் வகையில் அமைந்து இருக்கிறது. இரண்டு கலரில் தொடர் கதைகள் கண்களைக் காந்தம் போல் இழுக்கின்றன.

மாஸ்டர் பாலகுமார் இந்த இதழிலேயே முடிந்து விட்டது என்பது மாபெரும் ஏமாற்றம்! ஆனால் வேறு சித்திரத் தொடர் ஆரம்பமாவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

அசட்டுப் பிச்சு நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவன் சாதனைகள் நம் மனத்தை விட்டகலா.

களவுத் தொழிலில் கரை கண்ட காளிமுத்தவின் கதைப் போக்கு எல்லோருடைய கவனத்தையும் கவரும் வகையில் இருக்கிறது.

மாயா ஜாலம் புது முறையில் பின்னப் பட்ட மதிப்பைப் பெறும் கதை. 'பேராசை' ஏ. ஒன். காப்பி!

சந்திரகிரிக் கோட்டை விறுவிறுப்பின் உச்சநிலையை அடைந்திருக்கிறது இந்த இதழில்!

இந்த இதழில் நாடகம் இல்லை என்பது பெரும் குறையாக நின்று விட்டது கண்ணனுக்கு!

—மண. அரங்கசாமி, செய்யாறு.

கரும்புத் தோட்டம்

மெகானோ செட்டை அண்ணனும் தங்கையும் பொருத்தி விளையாடுவது மிகவும் அழகாக இருக்கிறது.

'சந்திரகிரிக் கோட்டை'யில் விமலன் வில்லை எடுக்க மேடையை நோக்கிச் செல்லும்பொழுது நமக்கு ஏனோ இனம் தெரியாத படபடப்பு ஏற்படுகிறது!

'மாஸ்டர் பாலகுமார்' கதையைச் சிறந்த முறையிலே 'ஆர்வி'யும் சித்திரகாரர்

'ஸாமி'யும் சேர்ந்து முடித்திருப்பது பலே ஜோர்! இது ஆசிரியருடைய கற்பனைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

5-ஆம் பக்கத்திலுள்ள துணுக்கு முன்பே வந்தது.

'அசட்டுப் பிச்சு' தொடர் கதையில் 'அடுத்த இதழில் முடியும்' என்னும் வாக்கியம் நம்மைக் கண் கலங்கச் செய்கிறது.

'மாயா ஜாலம்' பெயருக்குத் தகுந்தாற்போலவே இருக்கிறது.

'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுக்கொள்வான்' என்னும் பழமொழிக்கு ஏற்ப 'பல நாள் திருடன்' என்னும் ஹாஸ்யக் கதை விளங்குகிறது.

இந்த இதழில் சிறு கதைகளில் சிறந்தது 'பாசம்' என்ற கதை. அண்ணன் தம்பி என்ற பாசம் குழந்தை உள்ளத்திலே இருக்கத்தான் இருக்கிறது!

தி. சு. சண்முகம் (S. 262)
36, புதுத்தெரு, மண்ணடி. P. O.

கலை வளர்க்கும் கண்ணன்

1-4-'54 கண்ணன் இதழ் அட்டைப் படமே மனத்துக்கு மகிழ்ச்சியூட்டிற்று.

'சந்திரகிரிக் கோட்டை' என்ற தொடர்கதை வெகு சுவாரஸ்யமாகப் போகின்றது.

'தேடின திருடன்' கதை மிகச் சிறியது. ஆனாலும் படிப்பதற்கு நன்றாக இருக்கிறது.

'மந்திர மோதிரம்' கதையின் மூலம் 'முயற்சிதன் மெய் வருந்தக் கூலி தரும்' என்ற வள்ளுவர் வாக்கை உணருகிறோம்.

'அசட்டுப் பிச்சுவின் குருட்டு யோகம் நமக்கும் அடிக்காதா!' என்று தோன்றுகிறது அந்தக் கதையைப் படிக்கும்போது.

'பால குமார்' சித்திரத்தொடர் கதை எதிர்பாராத விதமாக முற்றுப் பெற்றுவிட்டது பற்றி சிறிது வருத்தமேயானாலும் கதையின் முடிவு மகிழ்ச்சியை ஊட்டிவிட்டது. அடுத்த சித்திரக் கதை வரும் நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். வணக்கம்.

ஆர். எச். ஹரன், திருப்பதீஸ்வரம்.

கண்ணனில் கண்ட சுவை

1-4-54 கண்ணனின் அட்டைப் படம் அழகாய் உள்ளது.

'சந்திரகிரிக் கோட்டை'யைச் சரியான இடத்தில் நிறுத்திவிட்டீர்கள்.

'பால குமார்' எதிர்பாராமல் முடிந்துவிட்டாலும், புது வருடப் பரிசின் புதுமையை எதிர்பார்ப்பதில் 'பால குமாரின்' முடிவை பெரிதாகக் கொள்ளவில்லை.

'பல நாள் திருடன்' ஒவ்வொரு வீட்டுக்குள் செல்லும்போதும் அகப்பட்டு விடுவானோ என்ற திகில் உண்டாகிறது. அவனாகவே வலுவில் அகப்பட்டதைக் காண, ஒரு புறம் பரிதாபமும், மறுபுறம் சந்தோஷமும் ஏககாலத்தில் உண்டாகிறது.

'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பது எவ்வளவு உண்மை! பறவை 'மந்திர மோதிரம்' கொடுப்பதில் நம்பிக்கை ஏற்படாவிட்டாலும், அதே சமயம் 'உழைப்பால் உயரலாம்' என்பதில் அதிக நம்பிக்கை ஏற்படுகிறது. 'மாமா பையனாகிறான்' சித்திரத்தைப் பார்த்தவுடன் சிரிப்புப் பொங்குகிறது. 'கண்ணனை' அனைவரும் எதிர்பார்ப்பார்கள்

என்பதில் ஐயமில்லை. 'கண்ணனும்' வாரம் ஒன்ருக வேண்டும்.

—சகுண, C/o ஜே. நாராயணராவ், குத்தாலம்.

திடுக்கிட்டேன்

1-4-54 இதழ் கண்ணனை எடுத்தேன். எடுத்துப் படித்தது மூன்றே மூன்று விஷயங்கள் தான். திகைத்தேன்! திடுக்கிட்டேன்.

'சந்திரகிரிக் கோட்டை'யைப் படித்தேன். நடக்கப்போகும் விஷயம் தெரியாமல் விழித்தேன். பால குமாரைப் படித்தேன். படித்த கணமே பரபரப்படைந்தேன். சுபம் என்ற வார்த்தையைக் கண்டதும் கதி கலங்கிப் போனேன்.

அதற்கடுத்த கணம் அருமையான கதையான 'அசட்டுப் பிச்சு'வைப் படித்தேன். அதுவும் அடுத்த இதழில் முடியும் என்று தெரிந்ததும் அங்கலாய்த்துப் போனேன்.

நான் எத்தனையோ கண்ணனை எடுத்திருக்கிறேன். படித்திருக்கிறேன். எடுத்த கணமே அவைகள் மனதைக் கவர்ந்தன. ஆனல் இவ்விதழ், 'கண்ணன்' எடுத்த எடுப்பிலேயே சோகத்தை விருந்தாக அளிக்கிறது. ஒரே சமயத்தில் இரண்டு அருமையான தொடர் கதைகள் முடிவடைவதா?

'தேடின திருடன்' கதை நன்ருய் இருக்கிறது. கதையில் கூட ஒருவனை அதிகம் திருட விடக்கூடாது என்று (அதை ஒரு கதைத் தர்மமாக நினைத்து) மேலும் எழுதாமல் கதையை கே. கோமளா அவர்கள் முடித்து விட்டார் போலும்.

'மாயா ஜாலம்' கதையில் ஏஜண்டைச் சும்மா விட்டது சரியல்ல என்று எனக்குப் படுகிறது. மற்றவை ஜோர்!

இவ்விதழை, பொன்னன இதழ் என்ரே, அல்லது தித்திக்கும் இதழ், தேன் இதழ் என்ரே வர்ணிக்க என் மனம் ஒரு நாளும் சம்மதிக்காது!

S. வாசுதேவன், 35. மேட்டுத் தெரு, திருவையாறு.

பாராட்டக்கூடிய முறையில் கடிதம் எழுதியிருப்பவர்கள்:

பா. சு. சுப்பிரமணியன், புத்தூர், திருச்சி. ஆர். சந்தான கிருஷ்ணன், சென்னை 12. வி. பார்த்தசாரதி, திருச்சி. ரா. குளத்தூரான், கொழும்பு. எஸ். ராமசந்திரன், வேலூர் (வ. ஆ.) ரா. தி. சுந்தரி, மதுரை. ஞான திலகராணி, யாழ்ப்பாணம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, கள்ளக்குறிச்சி. வி. வி. பிருந்தா, திருச்சி. எம். கௌரி, திருமங்கலம். ச. அன்பழகன், பணகுடி. எ. காந்தி, புதுடில்லி. ஆர். ஜலஜா, நாமக்கல். குமார், சென்னை 4. வி. எச். ரங்கராஜன், செங்காட்டுப்பட்டி. எ. ஜி. பிரேமா, விசாகை. பி. வி. ஜகதீசன், குடியாத்தம். நா. திருநாவுக்கரசு, நேமத்தான்பட்டி. எம். ராஜசேகரன், பொரையாறு. ரா. கிருஷ்ணமூர்த்தி, மதுரை. வே. வ. ஜயராமன், குகை, சேலம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

16-4-'54 வெள்ளிக்கிழமையன்று கீழ்க்கரையில் கண்ணன் கிளைக்கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா ஸ்ரீ S. சுவாமித்துரை-(உடற்பயிற்சி ஆசிரியர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று விளையாட்டுப் பந்தயங்களும், இரவில் நாடகமும் நடனங்களும் அங்கத்தினர்களால் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன என்று கழக உபதலைவர் K. பிரான்சிஸ் அறிவிக்கிறார்.

கோவையில் கிளைக்கழகம்:—மற்றொரு கண்ணன் கிளைக்கழகம் ஏற்படுத்த V. ராசப்பன் 66-இடையர் வீதி-என்ற விலாசத்தில் அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

திருநெல்வேலியில்: கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க. A. சீனிவாசன், 208/1 - D. மஹாலிங்கபுரம் என்ற விலாசத்தில் அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

காஞரில் சென்ற 25-3-54 தேதியன்று கண்ணன் கிளைக் கழகம் உபதலைவர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் ஒரு வாசகசாலை ஏற்படுத்தவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேனு நண்பர்கள்

1. S. ராம் c/o. S. ராமலிங்கம், காய்கறிக்கடை, பணகுடி.
2. A. சந்தியாரு c/o. P. வின்சென்ட் ,, ,,
3. P. வின்சென்ட் c/o. பாக்கியம் பிள்ளை ,, ,,
4. எஸ். எஸ். மணியம்-217-கொழும்பு வீதி, கண்டி (சிலோன்)
5. V. ஆதிலக்ஷ்மி, 6, கரூர் கிருஷ்ணசாமி நாயுடு தெரு, வேலூர். வ.ஆ.
6. S. S. சீனிவான், 86, மூங்கப்பாடித் தெரு, குகை, சேலம்.
7. V. D. சோமசுந்தரம், 282, திருச்சி ரோடு ,,
8. நா. குமாரசாமி, 19, மேல் தெரு, திருப்பத்தூர், வ. ஆ.
9. எஸ். சுப்பிரமணியம், 65/4, பார்க்ரோடு, கர்க்கி, புனு, 3.
10. T. கோபால், ஒய். எம். சி. எ. ஹாஸ்டல், P. B. NO. 3, [திருப்பத்தூர். வ. ஆ.
11. N. பக்தவத்ஸலம், 35-A, பென்ஷன் போலீஸ் லைன், குகை, சேலம்.
12. T. G. அம்பலவாணன், S. R. K. வித்யாலயம் P. O. (கோவை ஜில்லா.)
13. எம். முருகேசன், 3/46, பெரிய கடை வீதி, துறையூர். (திருச்சி ஜில்லா.)

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஏரிக்கரை மாளிகை

பாட்டி, ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்; தாத்தா, மந்திர வாதி-வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட்க எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென்று விடும். ராஜகுமாரன் வருவான்; ராஜகுமாரி வருவாள். வீரன் வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செய் வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் மிதப் போம். அப்படிப்பட்ட புத்தகம்தான் இது. அருமையான படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் அற்புதமான கர்ண பரம் பரைக் கதைகள். மாயாஜாலங்கள் புரியும் மாயாவிகளும் சோதனைகளில் வெற்றி பெறும் வீரர்களும் ஆபத்தில் சிக்கித் தவிக் கும் ராஜகன்னிகைகளும் இந்தக் கதைகளில் பாத்திரங்களாக வருகிறார்கள். கதையின் போக்கும் கற்பனை அழகும் நம் உள்ளத் தைக் கவரக்கூடியவை. படித்துப் பாருங்கள். பரவசம் கொள் வீர்கள்!

விலை 8 அணா

வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களும்

கதை பழங்காலத்துக் கதைதான். என்றாலும் படிக்கப் படிக்க, கதையின் போக்கு உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அத்தனை சுவாரஸ்யமான கதை.

விலை 3 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.